பல்லவி பதிப்பகம்

ISSN : 2278-7550

2278-7550

# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் - ISSN - 2278-7550

ஆகஸ்ட் - 2020

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550



visit us: www.pallavipathippakam.in

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

## INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

**ISSN : 2278-7550**

UGC - பல்கலைக் கழக மானிய குழுவின் அங்கீகாரம் பெற்றது

**UCG RECOGNIZED JOURNAL**

UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118

மலர் : 6 ஆகஸ்ட்-2018 இதழ் : 8



**பதிப்பாசிரியர்**

**நல். நடராசன்**

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

**பல்லவி பதிப்பகம்**

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு – 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com



**EDITORIAL BOARD**

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gmail.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gmail.com

**Dr.B.Sathiyamoorthy**
*Madurai Kamaraj University, Madurai.*
tamilkanikani@gmail.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gmail.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gmail.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gmail.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavur.*
skavithatamil@gmail.com

**ஆசிரியர் குழு**

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gmail.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gmail.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*
tamilkanikani@gmail.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gmail.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gmail.com

**முனைவர் சு.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,,சென்னை.*
arangantnou@gmail.com

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gmail.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University,*
*Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**R.F.Arooz**
*Raapa International Campus,*
*Director, Sri Lanka.*
raapa.arooz@gmail.com

## ADVISORY BOARD

**M.Senthilkumar**
*Periyar University, Salem.*
senthiltamilnesan@gamil.com

**Dr.V.S.Sreenivasan**
*Nandha Arts and Science College, Erode.*
srivc2345@gmail.com

**Dr.T.K.Anuradha**
*Treenedi Girls College, Namakkal.*
anuradha.pugal@gmail.com

**Dr.P.Senthilkumar**
*Periyar University Constituent Arts and*
*Science College, Dharmapuri.*
Senthakil06@gmail.com

**Dr.R.Vijyarani**
*Beshap Heeper College, Tirucherappalli.*
vejheya.rani@gmail.com

**Dr.R.Nirmala Devi**
*Vellalar Womens College, Erode.*
prnirmaladevi@gmail.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம்,*
*மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**R.F.அரூஸ்**
*ராபா பண்ணாட்டு வளாகம்,*
இயக்குனர், *இலங்கை.*
raapa.arooz@gmail.com

## ஆலோசனை குழு

**ம.செந்தில்குமரர்**
*பெரியார் கல்கலைக்கழகம், சேலம்.*
senthiltamilnesan@gamil.com

**முனைவர் வெ.ச.சீனிவாசன்**
*நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.*
srivc2345@gmail.com

**முனைவர் தா.க.அனுராதா**
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.*
anuradha.pugal@gmail.com

**முனைவர் பொ.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும்*
*அறிவியல் கல்லூரி, தருமபுரி.*
Senthakil06@gmail.com

**முனைவர் இரா.விஜயராணி**
*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.*
vejheya.rani@gmail.com

**முனைவர் நிர்மலா தேவி**
*வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு.*
prnirmaladevi@gmail.com

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** – காலாண்டிதழ் தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். இவ்விதழ் ஜனவரி, ஏப்ரல், ஜீலை மற்றும் அக்டோபர் மாதங்களில் வெளியாகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற எவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.

கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது.

**ஆய்த எழுத்து** - தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். 2013-ம் ஆண்டு முதல் காலாண்டிதழாக ஆண்டுதோறும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் இவ்விதழ் வெளியாகிறது. கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற பலரும் இவ்விதழில் ஆய்வு கட்டுரை எழுதி வருகின்றனர். இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

1. **பொருள்** : சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

2. **அளவு** : எம்.எஸ். வேர்டில் (MSWordl), ல் A4 ஆளவில், 1.5 வாக்கிய இடைவெளியில் (LiningSpace), 12 புள்ளி எழுத்தளவில் மூன்று முதல் ஐந்து பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

3. **முகவரி** : கட்டுரை தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரைமுடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெறவேண்டும்.

4. **கட்டுரை அனுப்பும் முறை** : கட்டுரையை ayidhaezhuthu@gmail.com (Or) pallavipublications@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

5. தனி இதழ் விலை ரூ.300/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 12 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | - | ரூ. 2400/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம் கல்வி நிறுவனங்கள் | - | ரூ. 3000/- |
| வாழ்நாள் கட்டணம் | - | ரூ. 25,000/- |
| புரவலர் கட்டணம் | - | ரூ. 50,000/- |

6. **கட்டணம் செலுத்தும் முறை** : உறுப்பினர் (சந்தா) கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக (**DD**) ஈரோட்டில் மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் (**PAYABLE AT ERODE**) அனுப்பலாம். இணையவழி, (**NET BANKING**), அலைபேசி (**Mobile Banking**) வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம்.

**A/C Name: PALLAVI PATHIPPAKAM.**
**A/C Type : CA,**
**A/C No : 33679969977.**
**Bank : STATE BANK OF INDIA,**
**Sathy Road, Erode -638 011.**
**IFSC : SBIN0016100.**


**பல்லவி பதிப்பகம்**
118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com


**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையதளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

**அல்லது**

**https://ayidhaezhuthu.in** என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம். அவ்வாறே தங்களது ஆய்வுக்கட்டுரைகளை இந்த இணையதளத்தின் வழியாக அனுப்பலாம்.

# பொருளடக்கம்


1. சங்க கால வாழ்வியல் சிந்தனைகள்

    *திருமதி.து.மாரியம்மாள் - 1

2. கம்பன் படைத்த இராமன்

    *முனைவர் சி.முத்துமாலை - 4

3. நன்னூல் எடுத்துரைக்கும் ஆசிரியர்களுக்கான கற்பித்தல் திறன்

    *முனைவர் சு.முப்பிடாதி - 7

4. பொன்மலர் நாவலில் மகளிர்

    *ந.இரகு - 9

5. பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும்

    *நா.சங்கீதா - 13

6. குறள் காட்டும் அற வாழ்வியல்

    *சு.கி.நிஷாந்தி, *நெறியாளர்-முனைவர் இரா.இராமகுமார் - 16

7. கி.ரா.வின் படைப்புகளில் வாழ்வியல்

    *முனைவர் பி.பகவதி - 19

8. குறுந்தொகையும் ஃபிராய்டு உளவியலும்

    *முனைவர் சு.பேச்சியம்மாள் - 22

9. திருமந்திரம் உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகள்

    *முனைவர் ந.பிரதீபா - 26

10. வழிபாட்டு முறைகளில் சமூக ஒற்றுமைகள்

    *முனைவர் மா.ராமசாமி - 29

11. இயற்கையோடியைந்த இறைவழிபாட்டில் தோணிபுரத்தோன்றல்

    *முனைவர் ச.பிரியா - 32

12. குலசேகர ஆழ்வார் பாடல்களில் வாழ்வியல் நெறிகள்

    *முனைவர் ச.வனிதா - 35

13. சங்க இலக்கியத்தில் ஆளுமை சிந்தனைகள்

*ஆ.சக்தி ஸ்ரீ - 39

14. குறுந்தொகையில் தலைவியின் உளவியல்

*பெ.சங்கீதா - 41

15. தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் நெறிமுறைகள்

*மு.சசிகலா - 43

16. தமிழ்ப்பண்பாட்டின் சீர்மையும் சிதைவும்

*முனைவர் நா.சத்யா - 46

17. வள்ளித் தொன்மம் (பாரதியார் உணர்த்தும் கருத்தியல்)

*மா.சுப்பலட்சுமி - 49

# சங்க கால வாழ்வியல் சிந்தனைகள்

***திருமதி.து.மாரியம்மாள்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, வைகை கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, வாழப்பாடி.

சங்ககால இலக்கியங்கள் நம் முன்னோர்கள் அறிவினாலே மேம்பட்டு சேமித்து வைத்திருக்கும் சேம நிதியங்களாக விளங்குகின்றன. அறிய கருத்துநயம் மெல்லிய இனிய சொற் குழுமம் போன்ற சிறப்புகளைத் தெளிவாகக் காட்டக்கூடிய கண்ணாடியாகவும் விளங்குகின்றன. சங்க இலக்கியங்களில் தலையாயச் சிறப்பு சொல்லும் பொருளும் ஒன்றையொன்று தழுவிச் சென்று பொருள் முடியும் இடத்தோடு சொல்லும் முடிவதாகும். இவ்வளவு சிறப்புடைய கடைச்சங்கத்து நூல்களாகப் பாட்டு, தொகை போன்றவைகள் விளங்குகின்றன.

நல்ல குறுந்தொகை என்று பாடலால் சிறப்பித்துக் கூறப்படும் குறுந்தொகை நாலடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்டது. ஐந்திணைத் தழுவிய 401 பாடல்களைக் கொண்டது. குறுந்தொகை முழுவதும் ஓர் ஓவிய கூடமாகத் திகழ்கின்றது. ஓவ்வொரு பாடலும் அதில் ஓர் ஓவியமாகத் திகழ்கின்றது.

**இல்லற மாண்பு**

சங்ககால மக்கள் இல்லறத்தை நல்லறமாகப் போற்றிப் பேணி வளர்த்தமையை பல்வேறு பாடல்கள் மூலம் உணர முடிகிறது. புதிதாக திருமணம் புரிந்த தலைவனும், தலைவியும் இல்லற வாழ்வை இனிதே தொடங்குகிறார்கள். தலைவி செல்வர் வீட்டில் பிறந்து செழிப்புடன் வளர்ந்தவள். ஆன்பால் இணைந்த இருநெஞ்சங்கள் அன்போடும், நிறைவோடும் நடத்தும் இல்லற வாழ்வின் இனிமையைக் கூறும் பாடலின் கருத்தும் எவராலும் எளிதில் மறக்கமுடியாததாகும்.

**“ முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கங் கழாஅது உடீஇ**
**குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்**
**தான் துழந்து அட்டதீம் புளிப்பாகர்**
**இனிது எனக் கணவன உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகமே” (குறுந்-167)**

இதில் தலைவி, கட்டித் தயிரைத் தன் காந்தள் மெல்விரலால் பிசைதலும் அப்போது அவள் உடுத்தியிருக்கின்ற ஆடை நழுவவே, தனது மற்றொரு கையால் அதனை எடுத்து மீண்டும் இடுப்பில் சொருகிக் கொள்வதும், குவளை மலர் போன்ற அவளது கண்களில் குய்ப்புகை கமழுவதும், மோர்குழம்பைத் தாளிதம் செய்வதுமாகிய இத்துணை இன்னல்களுக்கு டையே சமைக்கிறாள் என்பது கூறப்பட்டுள்ளது. இவ்வளவு இன்னல்களுடன் அவள் சமைப்பதற்குக் காரணம் கணவன் உண்ணும் போது இனிது மிக இனிது என்று அன்பு மலரக் கூற வேண்டும் என்பதாகும்.

**உதவுதல்**

மனைவிக்கு அஞ்சி அவள் சொல்லுகிறபடியெல்லாம் நடக்கம் கணவனுக்கு **“கையும் காலும் தூக்கத்தூக்கும் ஆடிப்பாவை”**என்று உவமைக் கூறியிருப்பதன் மூலம் அதனை அறியலாம்.

**“ கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்**
**பழனவாளை கதூஉமூரன்**
**கையும் காலும் தூக்கத்தூக்கும்**
**ஆடிப்பாவை போல**
**மேவன செய்யுந்தேன் புதல்வன் தாய்க்கே” (குறுந்-8)**

என்னும் பாடலால் தம்முடைய வீட்டில் முன் நிற்பவர் தம் கையும் காலையும் தூக்கத் தானும் அவ்வாறே தூக்குகின்ற கண்ணாடியுள் தோன்றும் பாவைப்

போலத் தனக்கு மகனைப் பெற்று அம்மகனுக்கு தாயாக விளங்கும் தலைவிக்கு அவள் விரும்பியவற்றையெல்லாம் செய்து ஒழுகுகின்றான் என்பதாகும்.

**வினையே ஆடவர்களுக்கு அணிகலன்**

**"வினையே ஆடவர்க்கு உயிரே வான்நுதல்**
**மனையுறை மகளிர்க்கு அவ்வாடவர் உயிர்" (குறுந்-135)**

பழந்தமிழர்களுள் ஆண்கள் கடமையே கொண்ட தொழிலை உயிராகக் கொண்டிருந்தனர். ஒளி பொருந்திய நெற்றியையுடைய பெண்கள் தத்தம் கணவரையே உயிராகக் கொண்டிருக்கின்றனர்.

**இயற்கை வளம்**

**"ஆம்பல் பூவின் சாம்பல் அன்ன**
**கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ" (குறுந்-46)**

இயற்கையின் இருவேறு காட்சிகளைக் காட்டி அவற்றுள் ஒப்புமை நிலவுதலைப் புலவர் விளக்குவது மிகவும் சிறப்புடையதாகும். வீட்டில் வாழும் குருவியின் குவிந்த சிறகுகள் வாடிய ஆம்பல் பூவைப் போல தோன்றுகிறது.

மகளிரின் கண் முதலியவற்றின் அழகை விளக்க இலக்கியத்தில் வழிவழியாக ஒப்பமைகளைக் கூறியுள்ளது சிறப்பாகும்.

**" கருங்கால் வேங்கை வீயுகு குறுகல்**
**இரும்புலிக் குருளையின் தோன்றும்" (குறுந்-47)**

என்பதில் வேங்கைமரத்தின் கீழே உருண்டைக்கல் ஒன்று கிடக்கிறது. அதன் மேல் வேங்கைப்பூக்கள் உதிர்ந்து, கல் முழுவதும் மறைக்கப்பட்டிருக்கின்றது. பொன்னிறப்பூக்கள் கருநிறக் கல்லின் மேல் உதிர்ந்து பொன்னிறமும், கருநிறமும் கலந்து விளங்குவது பெரிய புலிக்குட்டி போன்று தோன்றுகின்றது என்பதாம். புறவை விலங்குகளின் வாழ்க்கையை ஆங்காங்கே எடுத்துரைப்பது பாடல்களின் சுவையினை மிகுதிப்படுத்தியுள்ள புலவரின் திறம் பாராட்டுவதற்குரியது.

**அன்பு காட்டும் நிலை**

**" அன்புடை நெஞ்சம் தாம்**
**கலந்தனவே" (குறுந்-40)**

வெறும் உடல் இன்பம் பற்றி மட்டும் சங்க இலக்கியம் பேசவில்லை. அவற்றிற்கு மேலாகத் தலைவன் தலைவி உள்ளப் புணர்ச்சியை சங்க இலக்கியம் முதன்மைத் தந்துள்ளது.

**"கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்**
**கைம்மை உய்யாக் காமர் மந்தி**
**கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி**
**ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர் செகுக்கும்**
**சாரல் நாட, நடுநாள்**
**வாரல் வாழியோ! வருந்தும் யாமே! (குறுந்-69)**

ஆண் குரங்கு, இறந்துபடக் கைம்மை நோன்பு உய்க்க முடியாமல் பெண்குரங்கு வருந்துகிறது. தன் தாவுகின்ற தொழிலைக் கற்க முற்படாத தன்னுடைய வலிய குட்டியைச் சுற்றத்திடத்தே அடைக்கலமாக ஒப்படைக்கின்றது. பின்னர் மலை உச்சியின் மீது ஏறி உயிர் துறக்கின்றது. இந்தப் பெண்குரங்கின் அன்புடை நெஞ்சின் இயல்பைக் காட்டி, தலைவியின் நெஞ்சு அதைவிட நெகிழ்வும் நேசமும் உடையது என்பதாகத் தோழி சுட்டிக்காட்டும் பாடலுக்கு இணையில்லை. இன்பம் சார்ந்த வாழ்வியல் அறநெறிகள் என்னும் நோக்கில் சங்க இலக்கியத்தை நுணுகி ஆராயும் போது கிடைக்கும் வாழ்வியல் உண்மைகள் திட்பமும், நுட்பமும் வாய்ந்தவையாகும்.

**மன்னனின் சிறப்பு**

**" நன்னடைநல்கல் வேந்தர்குக் கடனே" (புறத்திணை-312)**

**" பானை சோற்றிற்கு ஒரு சோறே பதம்"** - என்ற பழமொழிக்கேற்ப பண்டையக்காலத்தில்அரசர்கள் மக்களின் வாழ்வியல் சிந்தனையில் அக்கறை கொண்டிருந்தனர்.

**" கோன் எவ்வழியோ குடியும் அவ்வழியே"**–என்ற பழமொழி வாயிலாக மக்களின் வாழ்வியல் அறநெறிகளை அச்சமூகத்தை வழிவழியாக தொன்றுதொட்டு வழிநடத்தி வரும் அரசர்களின் வாழ்வியல் சிந்தனைகளை அடியொட்டி வருவனவாகும்.

**காதல்வாழ்வு**

தலைவி தலைவனிடத்துத் தான் கொண்ட காதலை, நிலத்தைக்காட்டிலும் பெரியதாகவும், வானத்தைக்காட்டிலும் உயர்ந்ததாகவும் கருதுகின்றாள்.

**" நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**

**நீரினும் ஆர் அள வின்றே – சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந்-3)**

**திருமணம் வாழ்க்கைத் துணைநலம்:**

திருமணமான தலைவி பிறந்த வீட்டிற்கு மீண்டும் வருகிறாள். இப்போது தோழி அத்தலைவியின் காதலின்ப வாழ்க்கையை அறிய ஆசையுறுகிறாள். அதனால் தலைவியைத் தழுவிக் கொண்டு அவளிடத்தில், உன் தலைவர் நாட்டிலே அருந்துவதற்கேற்ற நீர் கூட இல்லையாமே! அங்கு நீ எவ்வாறு வாழ்ந்தாய் எனக் கிண்டலாகக் கேட்கிறாள். உடனே தலைவி தோழியிடம் நீ கூறியது உண்மைதான் என்று உத்துக் கொள்கிறாள். பின் மனிதர்கள் அருந்துவதற்கேற்ற சரியான நீர்நிலை கூட அங்கு இல்லை தான் அங்கு அருப்பதோ இலையும் தழையும் விழுந்து அழுகி மான் போன்ற காட்டு விலங்குகள் குடிப்பதாலே கலங்கியும் கிடைக்கிறது. ஆனால் உண்மை என்னவென்றால் அருவருக்கத் தக்க அச்சிறு பள்ளத்து நீரும், நம் தோட்டத்தில் விளைந்த தேனுடன் கலந்த தீம்பாலினும் மிகமிக இனிமையாக இருக்கின்றது என்று கூறுகின்றாள்.

**" அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்**
**தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு**
**உவலைக் கூவற் கீழ்**
**மானுண் டெஞ்சியகலுழி நீரே" (ஐங்குறு-203)**

**ஈகை**

வறியவராய் ஏற்றார்க்கு மாற்றாது கொடுத்தல் ஈகையாகும். இது மறுமை நோக்கியதாகலின் இம்மை நோக்கியே ஒப்புரவறிதலின் பின் வைக்கப்பட்டது என்பர் பரிமேலழகர். பிறர் துன்பம் கண்ட போது மனமிரங்கி ஈதலும் ஈகையாகும். அதனால் தான் ஔவையார் 'ஈதல் அறம்' என்று கூறுகின்றார். அறம் என்ற சொல்லே ஈதலைக் குறிக்கும். ஆகையால் ஈகையை இல்லறத்தின் முடிந்த பயனுடைய செயலாக் கூறியுள்ளார். இல்லறம் நல்லறமாக மாறுவாற்கு ஈகையின் அளவான இரக்க உள்ளம் தான் காரணம் எனலாம்.

**"ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்**
**ஈயேன் என்றால் அதனினும் இழிந்தன்று**
**கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்**
**கொள்ளேன் என்றால் அதனினும் உயர்ந்தன்று" (புறம்)**

**விருந்தோம்பல்**

நம் இல்லம் நாடி வரும் விருந்தினர்களை அன்புடன் வரவேற்று உபசரிப்பது தமிழர் பண்பாடாகும். அவர்கள் அகமகிழ மனமுவந்து அமுது படைப்பதைக் கடமையாகப் போற்றினர். நெய்யோடு வெண்ணெய் அரிசியால் சமைத்த வெம்மையான சோற்றையும் ஏழு கலங்களில் இட்டு காக்கைக்கு வைப்பர். தலைவியின் துன்பத்தை நீக்க விருந்தினர் வருமாறு காக்கைக்கு உணவுவைத்தல் பழங்கால மரபாகும். அவ்வழக்கம் இன்றளவிலும் நடைமுறையில் உள்ளது.

**" எழுகலத்து ஏந்தினும் சிறிது- என் தோழி**
**பெருந்தோள்நெகிழ்ந்த செல்லற்கு**
**விரந்து வரக் கரைந்த காக்கையது பலியே" (குறுந்-210)**

எனும் பாடலால் விளங்குகிறது.

**கல்வியைப் போற்றுதல்**

சங்ககாலத் தமிழர்கள் வாழ்க்கையில் காதலும் வீரமும் கல்வியும் செல்வமும் சிறந்தோங்கி செழுமையுற்று விளங்கினர். கல்வியின் பெருமையை நன்கு உணர்ந்திருந்தனர்.எனவே தான் வள்ளுவப் பெருந்தகையும் ஔவை மூதாட்டியும் கல்வியின் சிறப்பை பலவாறு போற்றுகின்றனர்.

**" அன்னாய்! இவனோர் இளமாணாக்கன்**
**தன்னூர் மன்றத்தென்னன் கொல்லோ?" (குறுந்-33)**

என்ற பாடலடியில் கல்வி பயின்றால் மட்டுமே வறுமையிலிருந்து விடுபட்டுத் தன் சொல்லாற்றலால் செல்வமும் புகழும் பெறமுடியும் என தலைவி தோழிக்கு உரைக்கிறாள்.

**நிரைவுரை**

தமிழ் இலக்கியங்களில் சங்ககால வாழ்வியல் சிந்தனைகளில் சங்ககால மக்களின் வாழ்க்கை நிலை, அவர்களின் தொழில், உணவு, இல்லற மாண்பு, காதல் வாழ்வு, திருமணம், கல்வி,ஈகை போன்றவற்றை எவ்வாறு எடுத்து கூறப்பட்டுள்ளது என்பதையும் சிறப்பு நிலையும் அவர்களின் இன்ப துன்பங்களைப் பற்றியும் தெளிவாக தெரிந்து கொள்ள நம் இலக்கியங்களே பெரிதும் உதவுகின்றது.

# கம்பன் படைத்த இராமன்

***முனைவர் சி.முத்துமாலை,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை – 600 008.

**முன்னுரை**

உலகம் உள்ள வரையிலும் வாழக்கூடிய அமரக் காவியமாம் இராமாயணத்தைப் படைத்துஇ இவ்வுலகத்தில் என்றும் வாழும் கவிஞராகத் திகழ்பவர் கம்பர். இராமாயணத்தைத் தனக்கே உரித்தான பாணியில் கருப்பொருள் சிதையாமல் தமிழ் மரபுக்கேற்ற வகையில் இயற்றியுள்ளார். இவரது புலமைச் சிறப்பினை உணர்ந்து மகிழ்ந்தவர்கள் இவரைப் பலவாறு பாராட்டியுள்ளனர்.

**"கல்வியில் பெரியவன் கம்பன்"**
**"கவிச்சக்கரவர்த்தி கம்பன்"**
**"கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்"**
**"விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர்க் கம்பன்"**

ஆகிய தொடர்கள் எல்லாம் கம்பருடைய பெருமையை விளக்கி நிற்கின்றன.

**கம்பரது காப்பியத்திறன்**

காப்பியக் கதையினைக் கூறும் கவிஞனின் குரலுக்குக் கதை மாந்தர்களே சிறந்த வாயில்களாக அமைகின்றனர். வடமொழி கலவாமல் தூய தமிழ்ச் சொற்களைத் தனது நூலில் கையாண்டதால் கம்பர் தொல்காப்பிய நெறியில் நின்றவர் என்று புகழப்படுகிறார். தமிழிலக்கியத்தில் காப்பிய வளர்ச்சி என்பது கம்பரின் காலத்தில் உச்ச நிலையை அடைந்தது என்பர். படைப்பாளன் மக்களால் மறக்கப்பட்டாலும் கதை மாந்தர்கள் காலங்காலமாக சமுதாயத்தில் நின்று நிலைபெறுவதை நம் இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இராமாவதாரத்தில் பெரிதும் ஈடுபட்டு நின்ற கம்பர் ஆசையுடன் இக்காப்பியத்தைப் படைத்தார் என்பதை

**"ஆசை பற்றி அறையலுற்றேன் - பற்று இக்**
**காசு இல் கொற்றத்து இராமன் கதை அரோ !"**

என்று கம்பர் தம் பாயிரத்தில் குறிப்பிடுவதால் அறியலாம். கம்பராமாயணம் பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களை முழுமையாகப் பெற்று தமிழ்ப்பண்பாட்டோடு இயைந்து விளங்குகின்றது. காப்பியம் படைப்பவர்கள் உயரியப் பண்புகளைத் தம் கதை மாந்தர்களின் வாயிலாக வலியுறுத்துவதை நாம் பல காப்பியங்களில் கண்டாலும் 'மனிதம்' என்ற மனிதப் பண்பைக் காப்பியத் தலைவனான இராமன் வாயிலாகவே விளக்கிச் செல்கிறார் கம்பர்.

**இராமாவதாரம்**

கம்பர் இராமாயணத்திற்கு இட்டப் பெயர் 'இராமாவதாரம்'. ஆனால் கம்பரின் பெயரோடு இணைத்து கம்பராமாயணம் என்றே அழைக்கப்படுகிறது. இராமாயணத்தை எழுதுவதற்குத் துணை நின்ற சடையப்ப வள்ளலை நன்றி பாராட்டும் விதமாக ஆயிரம் பாடல்களுக்கு ஒருமுறை போற்றிப் பாடியுள்ளார் கம்பர். மனிதனை வாழ்விக்க வந்த அவதார புருடனான இராமன் கதையைப் பண்பாட்டுப் பின்னணிக்கும் இலக்கிய வளமைக்கும் ஏற்ற வகையில் உன்னதமாகப் படைத்துள்ளார். மனிதனாக வாழ்ந்து நல்வழிக் காட்டிய இராமனின் பெருமையையும் அவன் வாழ்க்கையைத் தவமாக நிலைநாட்டிய ஏற்றத்தையும்

**"மண்ணிடை யாவர் இராகவன் அன்றி**
**மாதவம் அறத்தொடும் வளர்த்தார்" (பால காண்டம்- நகரப்படலம்)**

என்று கூறியே கம்பர் பூரிக்கிறார். மானுடனாக வந்த பரம்பொருள் தன்னைத் தெய்வம் என்று உணராமல் மனிதர்களுக்கு வழிகாட்டி உய்வித்ததே கம்பராமாயணத்தின் பெருஞ்சாதனை எனலாம். மனித சமுதாயம் நாடு, மொழி, இனம், அரசு ஆகியவற்றால் வேறுபட்டாலும் மானுடத்தால் ஒன்றுபட இயலும் என்ற கருத்தை விரிவுபடுத்தி,

**"ஆறுகொள் சடிலத்தானும் அயனும்**

**என்று இவர்கள் ஆதி**
**வேறுள குழுவை யெல்லாம்**
**மானுடம் வென்றதம்மா" (கிட்கிந்தா காண்டம் - நட்புகோட் படலம்)**

என்று மானுடத்தின் சிறப்பினை வலியுறுத்துகிறார்.

**அன்பே பாதுகாவல்**

அறநெறியில் தவறாது வாழ்பவனே வாழ்வாங்கு வாழ்ந்து அழியாப் புகழ் பெறுவான் என்பதைக் காப்பியத் தலைவனான இராமனது பாத்திரப்படைப்பு நமக்கு விளக்குகிறது. ஒரு நாட்டிற்கு மன்னனாக ஆட்சி செய்பவனாக இருந்தாலும் மதில்கள், படைகள் ஆயுதங்கள் வீரர்கள் போன்ற பல பாதுகாவல்களை மன்னன் பெற்றிருந்தாலும் அவன் அறத்தைத் துணையாகப் பெறாவிட்டால் மற்ற பாதுகாவல்கள் எல்லாம் பயன்படாது. எனவே தான் கம்பரும் தன் காப்பியத்தில் 'அன்பே பாதுகாவல்' என்கிறார்.

**"தீர்வு இல் அன்பு செலுத்தலின் செவ்வியோர்**
**ஆர்வ மன்னவற்கு ஆயுதம் ஆவதே"**
**(அயோத்தியா காண்டம் - மந்தரை சூழ்ச்சிப்படலம்)**

என்ற வரிகள் இதனை விளக்குகின்றன. இக்கருத்தையே திருக்குறளில் வள்ளுவரும்

**"அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்**
**மறத்திற்கும் அ∴தே துணை" (குறள் : 76)**

என்று அறத்தின் பெருமையைத் தெளிவுறுத்துகிறார்.

**காப்பியத் தலைவன் இராமன்**

'அழியா அழகுடையான்' என்று கம்பரால் வர்ணிக்கப்படும் காப்பியத்தலைவன் இராமன் அன்பின் பிறப்பிடமாகத் திகழ்கிறான். மனித குலத்தில் அவதரித்த இராமனின் செயல்கள் அவனைத் தெய்வத் தன்மையுள்ள மனிதனாகவே காட்டுகின்றன.

**"அறம் திறம்பியவர்களை வேரோடு ஒழிப்பேன்"**

என்று தாண்டக வனத்து முனிவர்களுக்கு அபயமளித்து இராமன் கூறும் சொற்கள் அவன் அறத்தின் நாயகன் என்பதைத் தெளிவாக்குகிறது. தன்னை வந்தடைந்தவர்களுக்கெலாம் அபயமளித்து சகோதரனாகவே ஏற்றுக் கொள்கிறான். தன் தந்தையின் சொல்லைத் தலைமேல் கொண்டு வனம் புகுதல், சீதை மேல் கொண்ட காதல், அறம் பிறழாத பேராண்மை, தீயோரிடமும் கருணைக் காட்டும் அன்புள்ளம் என உயர்ந்த மனிதப் பண்புகளை நாம் இராமனிடம் காண்கிறோம். தனக்குத் துன்பம் விளைத்த கூனியையும் கைகேயியையும் மன்னிக்கிறான். அகங்காரம், ஆணவம் என்பதை எள்ளளவும் காண முடியாத ஒரு அவதாரமாக இராமன் திகழ்கிறான்.

**இராமனின் சகோதரப் பண்பு**

நன்மை தீமைகளைப் பகுத்தறியாத வேடர் குலத்தில் பிறந்த குகனை 'மனந்தூய்மை உள்ளவன்' என்று அவனை சகோதரனாக ஏற்றுக் கொள்கிறான். சுக்கிரீவன் விலங்கு தன்மையுள்ள குலத்திலே பிறந்தாலும் 'உண்மையன்பு உள்ள பண்பாளன்' என்று கூறி ஏற்றுக் கொள்கிறான். வீடணன் இராவணனுடன் அரக்கர் குடியிலே பிறந்தவன் எனினும் 'நீதிக்காகப் போராடும் குணமுள்ளவன்' என்ற காரணத்திற்காக இராமன் அவனையும் சகோதரனாக ஏற்று

**"அகன் அமர் காதல் ஐய!**
**நின்னொடும் எழுவர் ஆனேம்"**
**(யுத்த காண்டம்-வீடணன் அடைக்கலப் படலம்)**

என்று கூறி மகிழ்ந்து ஏற்றுக் கொள்கிறான். குகன்இ சுக்கிரீவன்இ வீடணன் ஆகியோர் தங்கள் அரச பதவியை இராமனின் காலடியில் சமர்ப்பித்த போதும் புன்னகையோடு மறுத்து தன் அறப் பண்பையும் அன்பு நெறியையும் நிலைநாட்டி அழியாப்புகழ் பெறுகிறான்.

**இராவணனின் புகழ்ச்சி**

கம்பராமாயணக் காப்பியத்தில் பலர் இராமனை வீரன், அழகன் என்றெல்லாம் புகழ்வதில் வியப்பேதுமில்லை. ஆனால் இராமனுக்கு எதிர் நிலைத் தலைவனாக விளங்குகின்ற இராவணன் இராமனது வீரத்தையும் அழகையும் வியந்து புகழ்கிறான்.

**"சிவனோ ? அல்லன் நான்முகன் அல்லன் திருமாலாம்**
**அவனோ ? அல்லம் மெய்வரம் எல்லாம் அடுகின்றன்**
**தவனோ என்னின் செய்து முடிக்கும் தரன் அல்லன்**
**இவனோ தான் அவ்வேத முதல் காரணன்? என்றான்"**
**(யுத்த காண்டம் - இராவணன் வதைப்படலம்)**

என இராமனைப் புகழ்ந்ததோடு இராமனுடைய வீரத்தையறிந்த பின்னும் நல்லதோர் பகையைப் பெற்றேன் என்று மகிழ்கிறான்.

**கம்பன் படைத்த இராமன்**

'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்பதைப் புலப்படுத்த எழுந்த கம்பராமாயண காப்பியம் நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கும் போராட்டமே மையக் கருத்தாக அமைந்தது. 'அழியா அழகுடையான்' என்று கம்பரால் வர்ணிக்கப்படும் காப்பியத் தலைவன் இராமன் அன்பின் பிறப்பிடமாகத் திகழ்கிறான்.

'அறம் திறம்பியவர்களை வேரோடு ஒழிப்பேன்' என்று தண்டகவனத்து முனிவர்களுக்கு அபயமளித்து இராமன் கூறும் சொற்கள் அவன் அறத்தின் நாயகன் என்பதைத் தெளிவாக்குகிறது.

**"ஆர் அறத்தினொடு அன்றி நின்றார் அவர்**
**வேர் அறுப்பென் வெருவளியின் நீர் என்றான்"**

**(ஆரணிய காண்டம் - அகத்தியப்படலம்)**

எனத் தன் சொற்களால் முனிவர்களின் அச்சத்தைப் போக்குகிறான். இராமனுடன் போரிட்டவர்கள் மற்றும் இராமனுக்கு எதிராக செயல்பட்டவர்கள் என அனைவருமே இராமனின் குணநலன்களைப் பாராட்டுகின்றனர். இராமனால் சாபவிமோசனம் பெற்ற கவந்தன் இராமனை பரம்பொருள் என்று புகழ்கிறான். மராமரங்களைத் தன் அம்புகளால் துளைத்த இராமனை,

**"நாயினேன் உய்யவந்து உதவினாய் உலகம் முந்து உதவியான்"**

**(கிட்கிந்தா காண்டம் - மராமரப் படலம்)**

என்று சுக்ரீவன் பாராட்டுகிறான். வாலி தன் நெஞ்சில் பாய்ந்த அம்பை எய்தவர் யார் என்று அறிந்ததும் இராமனிடம் பல கேள்விகளைக் கேட்கிறான். இறுதியாக இலக்குவன் பதிலால் அமைதியுற்ற வாலியும் 'மூவர் நீ முதல்வன் நீ' என்று இராமனைத் துதிக்கிறான்.

சீதையிடம் கொண்ட காதல், அறம் பிறழாதப் பேராண்மை, தீமை செய்வோரிடமும் கருணைக் காட்டும் அன்புள்ளம் என உயர்ந்த மனிதப் பண்புகளை நாம் இராமனிடம் காண்கிறோம். பெண் இனத்தின் மீது இராமன் கொண்ட பரிவினை அகலிகையை உயிர்த்தெழச் செய்வதன் மூலமும் தாடகையைக் கொல்லத் தயங்குவதாலும் அறிகிறோம். காட்டில் வாழும் வேடனான குகனையும் மலையில் வாழும் குரங்கினத்துச் சுக்ரீவனையும் அரக்கர் குலத்து வீடணனையும் அன்புடன் ஆதரிக்கிறான். தனக்குத் துன்பம் விளைவித்த கூனியையும் கைகேயியையும் மன்னித்து இராமன் தெய்வத் தன்மைக்குத் தன்னை உயர்த்திக் கொள்கிறான்.

**"அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்"** **(குறள் : 96 )**

பிறர்க்கு நன்மையானவற்றை நாடி இனிய சொற்களைச் சொன்னால் பாவங்கள் தேய்ந்து குறைய அறம் வளர்ந்து பெருகும் என்கிறார் திருவள்ளுவர். இத்தகைய அறக் கோட்பாட்டினை உடையவனாகவே இராமன் திகழ்கிறான். இராமனால் அழிக்கப்பட்டோரும் இராமனைப் போற்றுவதைக் காண்கிறோம். இந்திரசித்தன் தன் பிரம்மாத்திரம் பயனற்றுப் போனதை உணர்ந்து தன் தந்தையிடம் 'இராமன் மனிதனுமல்ல தேவனுமல்ல பிரமனுமல்ல. வீடணனன் உறுதியாகச் சொன்ன வராகமாக வந்து இரணியனை அழித்தவனே அந்த இராமன் என்று கூறுகிறான். இராமனுடைய சிறப்புகள் பலவற்றைச் சுந்தர காண்டத்தில் சீதை நினைவு கூருகிறாள்.

காப்பியத் தலைவனாகவும் இறைவனாகவும் மனிதனாகவும் எந்தக் குறையுமில்லாத ஒப்புயர்வுற்றப் பாத்திரமாகக் காட்டுவதற்கு இராமனின் நற்குணங்களே கம்பனுக்குத் துணையாக அமைந்தது எனலாம். இத்தகு சிறப்புகளைப் பெற்ற இராமனைக் கம்பர் 'நடையின் நின்றுயர் நாயகன்' என்றே சிறப்பித்துக் கூறுகிறார்.

**முடிவுரை**

கம்பர் தம் காப்பியத்தில் ஒவ்வொரு பாத்திரமும் தனித்தன்மை பெற்றே விளங்குகின்றன. காப்பியத் தலைவனாகிய இராமனின் எதிரியாக விளங்கும் இராவணனின் பெருமை ஆற்றல் கல்வி வீரம் ஆகியவற்றைத் திறம்பட சித்தரித்து கம்பர் அத்தகைய சிறப்புகள் நிறைந்த பகைவனைக் காப்பியத் தலைவன் இராமன் வெற்றிக் கொள்கின்ற ஒப்பற்ற மேன்மையைத் தன் கவித்திறத்தால் வெளிக் கொணர்ந்து இராமனை உயர்த்துகிறார்.

**" அறம் வெல்லும் பாவம் தோற்கும் "**

என்பதை நிலைநிறுத்துவதே காப்பிய நோக்கமாக இருப்பினும் தனி மனிதஒழுக்கத்தால் மட்டுமே சமுதாயம் செம்மையுறும் என்ற கருத்தையும் வலியுறுத்தி மனித அறமாகிய மானுடத்தை நிலைக்கச் செய்வதற்காகவே கம்பர் இராமாயணத்தைப் படைத்துள்ளார் என்றால் அது மிகையல்ல.

# நன்னூல் எடுத்துரைக்கும் ஆசிரியர்களுக்கான கற்பித்தல் திறன்

***முனைவர் சு.முப்பிடாதி,** இணைப்பேராசிரியர், தமிழ்த்தறை, கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்செங்கோடு.

**முன்னுரை**

ஆசிரியர்களை உருவாக்கும் துறையே கல்வியியல் துறையாகும்.பிற துறைகள் மாணவர்களைத்தான் உருவாக்குகின்றன. ஆனால் கல்வியியல் துறையோ ஆசிரியர்களை உருவாக்கும் மகத்தானப் பணியைச் செய்கிறது ஆசிரியர்களைப் படிப்படியாக வடிவமைத்து செம்மைப்படுத்துகிறது. 12 ம் நூற்றாண்டில் தோன்றிய நன்னூல் என்னும் இலக்கண நூலின் பொதுப்பாயிரத்தில் கல்வியியல் சார்ந்த சிந்தனைகள் பெருமளவில் விரவிக் கிடப்பதை அறிய முடிகின்றது. நன்னூலில் செறிந்து கிடக்கும் ஆசிரியர்களின் கற்பித்தல் சார்ந்த திறன்களை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**தமிழ் இலக்கியங்களில் கல்விச்சிந்தனைகள்**

பண்டையக்காலம் தொட்டு இன்றுவரை கல்வி என்றாலே மனித குலத்திடையே அளப்பறிய மாண்பும் சிறப்பும் இருந்து வருகின்றன.

**“ எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே” (புறம்-பா.எ.206)**

என்று பெண் கல்வியறிவிற்கு மிகுதியான முக்கியத்துவம் வழங்கப்படாத சங்க காலத்திலேயே ஒரு பெண் முழங்குகிறாள்.

**“கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சைப் புகினும் கற்கை நன்றே” (வெற்றிவேட்கை பா.எ-35)**

அதாவது கல்வி கற்பதற்கு எவ்வகைத் தொழிலையும் மேற்கொள்ளும் என்ற கருத்து கூறப்படுகிறது.ஒரு அறநூல் இப்படி குறித்து எல்லா காலங்களிலும் நல்ல கருத்துக்களே நிலவி வந்துள்ளன. இதன் தொடர்ச்சியாக கற்பிக்கும் ஆசிரியர்கள் அவர்களது தகுதி, திறமை இவற்றையெல்லாம் மிகுவிக்கும் பணி ஒரு சில தத்துவ அறிஞர்கள் வழியாக வெளிப்பட்டு பிறகு அது மேலை நாடுகளிலிருந்து இந்தியா வந்தடைந்து கல்வியியல் மூலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு போதிக்கப்பட்டது. ஆனால் இந்த கல்வியியல் சிந்தனைகள் ஊற்றுக்கண் தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களிலும் சங்க இலக்கியங்களிலும் இடம்பெற்று இக்கால இலக்கியங்கள் வரை தொடர்கின்றன.

**நல்லாசிரியருக்கான இலக்கணம்**

நாளைய சமுதாயம் இன்றை பள்ளியில்தான் பிறக்கிறது என்ற பொன்மொழியை உறுதிப்படுத்த நல்ல மாணவர்கள் தேவைப்படுகிறார்கள். அத்தகைய மாணவர்களை பின்னால் இருந்து ஊக்குவிக்க ஒரு நல்ல ஆசிரியர் தேவைப்படுகின்றார்.இதைத்தான் பவணந்தி முனிவர்,

**“குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை**
**கலைபயில் தெளிவுகட்டுரை வன்மை**
**நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்**
**உலகியல் அறிவோடு உயர்குணம் இணையவும்**
**அமைபவன் நூலுரை யாசிரியன்னே” (நன்னூல் நூற்பா எண்-26)**

உயர்குடிப்பிறப்பும், உயிர்இரக்கமும், கடவுள் வழிபாட்டினால் எய்திய மேன்மையும், பல நூல்களிலே பழகிய தேர்ச்சியும், நூல் பொருளை மாணவர்கள் எளிதில் உணரும்படி எடுத்துச் செல்லும் சொல்வன்மையும் நிலம், மலை, துலாக்கோல், பூவையொத்த குணங்களும் உலக வழக்கை அறியும் அறிவும், உயர்குணம் ஆகியன ஒருங்கே அமையப்பெறுபவரே நல்லதொரு ஆசிரியரவார், என்று இன்றைய ஆசிரியர்களுக்குத் தேவைப்படும் தகுதிகளை அன்றே தம் நூல் வழி பவணந்தி முனிவர் வெளிப்படுத்திவிட்டார்.

**கற்கும் சூழலை ஏற்படுத்துதல்**

மாணவர்களின் நற்தேர்ச்சியைத் தீர்மானிப்பது அவர்களது மரபும், சூழலும் தான். இதனை உளவியலாளர்கள் “ஒரு மாணவனது வளர்ச்சியைத் தீர்மானிப்பது அவனது சூழலில்

இருந்து கிடைக்கும் தூண்டல்களே ஆகும்"(கல்வி உளவியல் ப.எண்.32) என்று குறிப்பிடுகின்றார். இது தற்கால உளவியலாளர்களின் கருத்தாகும்.இதே கருத்தை நன்னூலாரும்,

**"ஈதல் இயல்பே இயம்பும் காலை**
**கலமும் இடனும் வாலிதின் நோக்கி" (நன்னூல்-நூ.எண் 36)**

என்ற அடிகள் வழி பதிவு செய்கின்றார்.ஆகவே மாணவர்களின் உளவியல் குறித்த கருத்து கி.பி 12 ம் நூற்றாண்டிலே உதித்து விட்டது எனலாம்.

**நடுவு நிலையோடு செயல்படுதல்**

ஒரு பால் கோடாமை என்பது உலக நீதிகளில் ஒன்று. இது மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் கல்வியைப் பொறுத்தவரை இன்றியமையாத ஒன்று என்பதை விளக்கும் முகமாக கல்வியியல் சிந்தனையாளர்கள்,

**"இவர்தம் ஊரினின்று வந்தவர் என்றும்**
**உறவினர் என்றும் பேதம் பாராமல் ஒவ்வொரு**
**ஆசிரியனும் யாவருக்கும் ஒரு பொதுவிதி அமைத்து**
**அதன் அடிப்படையைப் பின்பற்றல் வேண்டும்"**
**(தமிழ் பயிற்றல் நுட்பங்கள் -ப.எண் 208)**

என்று குறிப்பிடுகின்றார். இதற்குக் காரணம் ஆசிரியரின் பிரிவினை நோக்குதல் மாணவர்களிடையே பேதமையை ஏற்படுத்திவிடும் இதே கருத்தை பவணந்தியாரும்,

**"ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்**
**மெய்ந்நடு நிலையும் மிகுநிறை கோற்கே" (நன்னூல் நூ.எண். 29)**
**என்று குறிப்பிட்டுள்ளார்.**

# பொன்மலர் நாவலில் மகளிர்

*ந.இரகு, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசுகலைக்கல்லூரி, திண்டிவனம்.

**முன்னுரை**

உலக வரலாற்றில் பெண் சமுதாயத்திற்கு என சிறப்பிடம் இருந்ததை யாவரும் அறிவர். ஏனெனில் தாய்வழிச் சமுதாயத்தில் இருந்து தான் இந்த உலகமே கட்டமைக்கப்பட்டிருந்தது. எனவே தாய்வழிச் சமுதாயத்தில் இருந்து தோன்றியவர்கள் தான் நாம் அனைவரும் என்பதை மறந்துவிட்டு தற்காலத்தில் அவர்களுக்கு எதிராக எண்ணற்ற கொடுஞ்செயல்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. மேலும் சமுதாயத்தில் சம அங்கமாக விளங்குபவர் மகளிர். அத்தகைய மகளிர்க்குப் பேச்சு, எழுத்தறிவு, சுதந்திரம் போன்றவை ஒரு காலத்தில் மறுக்கப்பட்டு மறக்கப்பட்டு இருந்தாலும் தற்காலத்தில் அனைத்துமே வழங்கப்பட்டுள்ளன. அப்படி இருந்தும் இன்னும் அவர்கள் ஆண்களுக்கு நிகரான ஒரு இடத்தை தக்கவைத்துக் கொள்ள போராடி வருகின்றனர்.ஏத்தகைய நிலையிலும் பேராட்டமே அவர்களுக்கு வாழ்க்கையில் வாடிக்கையாக இருக்கிறது. போராட்டமே வாழ்க்கையாகக் கொண்ட பெண்கள், அப்போராட்டத்தில் தங்களையே கரைத்துக் கொண்டவர்கள். அதை எதிர்த்து நிற்கும் புரட்சிப் பெண்கள், மனத்திட்பமும் ஊக்கமும் கொண்டு சமுதாயச் சட்டத் திட்டங்களுக்கு உட்படாமல், அநீதி இழைக்கும்போது அதைத் துணிவாக எதிர்க்கும் பெண்கள் எனப் பல்வேறு கோணங்களில் பொன்மலர் நாவலில் மகளிர் சித்தரிக்கப்பட்டுள்ளனர். அதன்வழிநின்று சிலவற்றை எடுத்தியம்புவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**கதைக்கரு**

பொன்மலர் நாவல், சமுதாயச் சீர்கேட்டினை அடையாளங்காட்டக் கூடியது. எனவேதான், இந்த நிலைமையினை மனதிற்கொண்டு ஒரு பெண்ணை அதுவும் வஞ்சகரால் வஞ்சிக்கப்பட்ட ஒரு பெண்ணை மன உறுதிப் படைத்த பெண்ணாக வெளிப்படுத்துவதன் மூலம் பெண்மைக்கு சிறப்பு தரவேண்டும் என்று அகிலன் தன்னுடைய பொன்மலர் நாவலில் வெளிப்படுத்தியிருக்கின்றார். மேலும், இளமையில் ஆண்களால் பாதிக்கப்பட்ட பெண்களின், நிலைமையைக் கூறுவதுடன் அவர்கள் வாழ்வில் எத்தகைய வெற்றியை அடைந்தனர் என்பதையும் இந்த நாவலின் மூலம் ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

**பெண்ணிற்கு இழைக்கப்படும் கொடுமைகள்**

சங்கிரி குருமூர்த்தியைக் காதலித்தாள். ஆனால் அவன் அவளைத் திருமணம் செய்து கொள்ளாமல் தாயாக்கினான். சங்கரியின் நிலையை அறிந்து அதிர்ச்சி அடைந்த அவள் தந்தை தற்கொலை செய்து கொண்டார். இதைப்போல் திருமூர்த்தி தன் அண்ணனைப் போலவே குமுதா என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளாமல் அவளைத் தாயாக்கினான். ஆனால் குமுதா ஆண் குழந்தையைப் பெற்றாள். தன் சொத்துக்கு வாரிசாகும் என்ற காரணத்தினால் அவளைக் கொலை செய்ய முயற்சித்தான். டாக்டர் சங்கரியிடம் கூறி அவளை இதற்குத் துணையாக வரும்படி அழைத்தான். அவள் உதவி செய்வது போல் நடித்து, குமுதாவைக் காப்பாற்றினாள். இதன்மூலம் சங்கரி, குமுதா போன்ற பெண்களுக்கு மட்டுமல்லாமல் சமுதாயத்தில உள்ள பல பெண்களுக்கும் அநீதி இழைக்கப்படுகிறது இதன்மூலம்,

**“அறிவி ழுந்தது பண்டை வழக்கம்;**
**ஆணுக்குப் பெண் விலங்கெனும் அ∴தே**
**விடியும் நல்லொளி காணுதி நின்றே**
**மேவு நாகரிகம் புதி தொன்றே;**
**கொடியர் நம்மை அடிமைகள் என்றே**
**கொண்டு, தாம்முதல் என்றன ரன்றே**

அடியோடந்த வழக்கத்தைக் கொன்றே

அறிய யாவும் பயிற்சியில் வென்றே" (பாரதியார் கவிதைகள், ப.223)

என்று பாரதி கூறுகின்றார். இன்றைய பெண்கள் பண்டைய நெறியில் இருந்து மாறியுள்ளனர். கல்வியினால் பெண்கள் இன்று உயர்ந்து விளங்குவதால் ஆணாதிக்கத்தை தடுத்து நிறுத்திவிட்டு, பெண்கள் பாரதியின் வாக்கிற்கேற்ப முன்னேற்ற பாதையில் செல்கின்றனர் என்பதனை நாம் அறிய முடிகிறது.

**வறுமையில் வாழும் மகளிர்**

டாக்டர் சங்கரி இரவு நேரத்தில் மழை பெய்து கொண்டிருந்த சமயத்தில் சைக்கிள் கடை வைத்திருக்கும் ரங்கன். தன் மனைவி தனலட்சுமிக்கு பிரசவவலி ஏற்பட்டிருப்பதாகக் கூறினான். உடனே மழையை பொருட்படுத்தாது ரங்கனுடன் சங்கரி சென்றாள். சங்கரி தனலட்சுமிக்கு பிரசவம் பார்த்து முடித்துவிட்டு அவளுக்குப் பெண் குழந்தை பிறந்த செய்தியையும் கூறிவிட்டு வந்தாள். சில நாட்களுக்குப் பின் தனலட்சுமி தன் பெண்பிள்ளையைக் கையில் தூக்கிக் கொண்டு வந்தாள். அப்பொழுது சங்கரி, போர்வை வாங்கிக் கொடுத்தாயா? என்று நினைவோடு ரங்கனை கேட்டாள். குழந்தைக்குப் பால் வாங்கிக் கொடுக்கபணம் இல்லை என்றான். ஐம்பதுரூபாய் தான் சம்பளம். அது குடிசைக்குப் பத்து ரூபாய் வாடகை கொடுப்பதற்கும், பாக்கிப் பணத்தில் குடும்பம் நடத்துவதற்குமே சரியாக இருக்கிறது என்று சங்கரியிடம் கூறினான்.ரங்கன் கூறியதைக் கேட்டு சங்கரி தனலட்சுமியின் வறுமை நிலையைப் பற்றி வருந்திக் கூறுவதாக ஆசிரியர் பொன்மலர் நாவலில் எடுத்துரைக்கின்றார்.

**"சங்கரிக்கு அந்தப் பெயரைக் கேட்டவுடன்**
**அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை**
**வற்றிப் போன லட்சுமிக்கலை அந்தப்**
**பெண்ணின் முகத்தில் குடிக் கொண்டிருந்தது**
**என்னவோ உண்மைதான் உடம்பில் இரத்த**
**ஓட்டம் இருந்திருந்தால், முகத்திலுள்ள**
**கலையும் துலங்கியிருக்கும். ஆமாம்,**
**பணம் இருந்தாலே எல்லாமே நடந்திருக்கும்"** **(அகிலன், பொன்மலர் ப.44)**

என்று சங்கரி மனதுக்குள் நினைக்கிறாள்.

**கொடிது! கொடிது! வறுமை கொடிது!' (ஔவையார், தனிப்பாடல் - 54)**

என்றார் ஔவை. வாழும் உயிர்கள் சந்திக்கும் மிகப் பெரிய பிரச்சனையே வறுமை தான். வறுமையைப் பற்றி குறிப்பிடும்போது வறுமை என்பது இருப்பு நிலை, ஆற்றலின்மை, மதிப்பின்மை, விரக்தி நிலை, தட்டுப்பாடு என்று பலவாறு வலியுறுத்தப்படுகின்றது.

வறுமையின் காணமாகத் தோன்றுவதே பசி, பசி அறியாமை போன்றது. அது முழுவதும் நீங்காத் தன்மையுடையது. பசி ஏற்பட்டால் அதை உடனே போக்க வேண்டும் இல்லையென்றால் சமூக கட்டுக்கோப்புகள் தளர்ந்து மனிதனை தீயச் செயல்களில் ஈடுபட வைத்து விடும். பசியைவிடக் கொடுமையான ஒன்று உலகினில் ஏதுமில்லை. பசியை ஒழிப்பதே மிகப்பெரிய சமுதாயப் பணி. இன்று பசியானது உலகப் பிரச்சனையாக உள்ளது. மேற்கத்திய நாடுகளில் பசியின் கொடுமைகளால் எண்ணற்ற மக்கள் நாள்தோறும் வாடி உழன்று இறக்கும் நிலையினைக் காணமுடிகிறது. மேலும் பசியைப் பிணி என்று குறிப்பிடுகின்றனர். பசிப்பிணியைப் போக்குவதே உலகின் மிகப் பெரிய அறப்பணியாகும். ஆளச்சிறந்த மனிதநேயமும் ஆகும். சங்ககால இலக்கியங்கள் முதற்கொண்டே இப்பசிப் பிணியைப் போக்க வேண்டும் என்றும், பசியில்லாத தேசத்தை காணவேண்டுமென கூறுவதை அறியமுடிகிறது. திருவள்ளுவரும் நாட்டின் இலக்கணத்தை பற்றிக் கூறும் போது, பசி இருத்தல் ஆகாது என்பதை,

**"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு"** **(திருக்குறள் - 734)**

ஏன்றுவுள்ளுவனார் கூறுகின்றார். பசிப்பிணி என்பது ஒரு பாவியைப் போன்றது அது செய்யும் கொடுமையைப் போல் வேறொன்றுமில்லை. எக்குடியில் பிறந்தவர் ஆயினும் பசி பற்றிக் கொண்டால் அவனின் குடிப்பிறப்பை, மனிதப்பண்பை, பெருமையை, கல்வியை, வெட்கத்தை, ஒழுக்கத்தை இது போன்ற மனிதனுக்குரிய நற்பண்புகளை அழிக்கும் தன்மை கொண்டது. பசியை போக்கும் அட்சயபாத்திரம் பெற்ற காதையில் தீவதிலகை மணிமேகலையிடம் பசியின் கொடுமையைப் பற்றி குறிப்பிடும்போது

**"குடிப்பிறப்பு அழிக்கும்: விழுப்பம் கொல்லும்**

பிடித்தக் கல்விப் பெரும்புணை விடூஉம்:
நாண் அணிகளையும்: மான் எழில் சிதைக்கும்
பூண் எழில் மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி" (மணிமேகலை)

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

**'பசி வந்திட பத்தும் பறந்து போகும்'** **(ஔவையார் தனிப்பாடல்)**

என்னும் பழமொழி இங்கு நோக்கத்தக்கது. மேலும் தவ முனிவர்களையும் தகுதி இழக்கச் செய்து மனிதனை மாக்களாக்கும் தன்மை கொண்டது.

**"இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னாதது"(திருக்குறள்,1041)**வறுமை துன்பத்துக்கு உவமையாகக் காட்டுவதற்கு வறுமைத் துன்பத்தைத் தவிர வேறு துன்பம் எதுவுமில்லை என்று வள்ளுவர் கூறுவதற்கு ஏற்ப தனலட்சுமியின் வாழ்க்கையில் வறுமைத் துன்பம் நிலைத்திருந்தது என்பதை நம்மால் உணரமுடிகிறது.

**மகளிரின் தியாக நிலை:**

**"தியாக வேள்விக்கு வித்தானவர்கள் மகளிர்"**

என்னும் புதுக்கவிதைக்கு சான்றாக மகளிர் விளங்குகின்றனர்.சங்கரி குருமூர்த்தியை விரும்பிப் பின் ஏமாற்றப்படுவது வரையிலும் சாதாரணப் பெண்ணாகவே அவள் காட்சியளிக்கிறாள். சென்னையில் திருஞானத்தைச் சந்திப்பதுவரை தன் முயற்சியால் டாக்டராகி, ஆற்றலாலும் அடக்கத்தாலும் சிறப்பாகவே திகழ்கிறாள். திருஞானத்தின் தூய்மையான அன்பை புரிந்து கொண்ட பின்னர், தனித் தன்மை வாய்ந்த தாரகையாகக் காட்சியளிக்கிறாள் என்று சங்கரியின் தியாகநிலை பற்றி ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

**"பிள்ளைகளுக்காகத் தாய் செய்யும் தியாகத்தை**
**இத்தகையதென்று எழுத்தால் எழுதல் முடியாது.**
**சுருங்கக் கூறின், பெண் தனக்கென வாழாது,**
**பிறர்க்கென வாழ்பவள் என்று கூறலாம். குடும்பக்**
**கொடுமைகளைப் பொறுத்தல், உள்ளத்தை மற்றவர்கீந்து**
**மகிழ்தல் தனக்கென வாழாது மண்ணுலகாக்கும்**
**உயிர்கட்கென வாழ்தல், விருந்தோம்பல், ஏழைகட்குதவல்**
**முதலிய அருங்குணங்கள் பெண்ணிடத்துப் பொலிதல்**
**வெள்ளிடை மலை" - திரு.வி.க., பெண்ணின் பெருமை, ப.31**

என்னும் திரு.வி.க.வின் கருத்திற்கேற்ப சங்கரி தன் வாழ்க்கையை தன் குழந்தை சாரதாவிற்காக தியாகம் செய்கிறாள். இதன்மூலம் சங்கரி போன்ற தாய்மார்கள் தங்களுடைய வாழ்க்கையை குழந்தைகளுக்காக தியாகம் செய்கின்றனர் என்பதனை நாம் உணர முடிகிறது.

**புரட்சி நிலை:**

புரட்சி என்பதற்குக் கலைக்களஞ்சியம் 'அடிப்படை மாறுதல்' என்று கூறுகிறது. அதாவது 'ஒன்று வேறுவகையாக மாறித் தலைகீழானது'. "மழமையைப் புரட்டி விட்டு – அகற்றிவிட்டு புதுமையைப் புகுத்துவது . தாம் நின்றதொரு நிலையிலிருந்து தேவைக்கு ஏற்ற வண்ணம் நல்ல முறையில் சிறந்த நிலைக்கு மாறும் தன்மை என்று கூறுவர்.

**"நொடி தோறும் புதுமை சேர்"(பாரதிதாசன் கவிதைகள் ப-76)**

என்று பாடி, புரட்சியென்பது இயல்பானது, தேவையானது என்பதை பாவேந்தர் குறிப்பிடுவார்.

பொன்மலரில் சங்கரி புரட்சிப் பெண்ணாகத் திகழ்கிறாள். முதலில் நோயாளிகளோடு பழகினர். அந்தச் சூழல் மாறி சமுதாயப் போலிகளோடு பழகும் வாய்ப்பு சங்கரிக்கு ஏற்படுகிறது. தன்னைத் திருமணம் செய்ய விழையும் திருமூர்த்தியிடம் சங்கரி கூறும் சொற்கள் சமுதாயத்தில் வாழ்க்கை என்பதற்குப் பணத்தினுள் அடைக்கலம் புகும் பண்பில்லாதவர்கள் கொடுக்கும் விளக்கத்திற்கு ஒரு சாட்டையடி கொடுக்கிறது.

**"திடீர் இன்பங்களைத் தேடி செரிக்காத குடலையும்**
**காற்றுப் போகாத நுரையீரலையும், இரத்தம்**
**ஓடாத நரம்புகளையும் வைத்துக்கொண்டு**
**சிரமப்படவில்லை. நான் திடீர் இன்பங்களைத்**
**தேடிப் பெறவோ, அதன்பின் விளைவுகளைச்**
**சரிக்கட்டவோ என்னிடம் பணமும் இல்லை.**
**மனமும் இல்லை. உள்ளத்தின் அமைதி ஒருபுறம்**
**இருக்கட்டும். நீங்கள் பல லட்ச லட்சமாய்க்**

கொட்டிக் கொடுக்கும் பணத்தால் நான்பெறும்
இன்பம் ஒருபுறம் இருக்கட்டும். என்னிடமா
நீங்கள் மனம் துனிந்து இளமைப் பற்றி
பேசுகிறீர்கள்? என்னுடைய கண்கள் ஒரு
டாக்டரின் கண்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்
என்னை நீங்கள் மணக்க விரும்புகிறீர்களே, உங்களிடம்
இளமை இருக்கிறதா வலிமை இருக்கிறதா?" – அகிலன், பொன்மலர், ப.154

சமுதாயத்தில் குற்றம் செய்பவர்களைப் பற்றிச் சங்கரி கூறும் கருத்துக்கள் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லையாம்"
சி.சுப்ரமணிய பாரதியார், பாரதியார் கவிதைகள், ப.219

என்ற பாரதியார் வாக்கிற்கேற்ப சங்கரி திருமூர்த்தியின் பயங்கரமான போலியும், பொய்த் தன்மைகளையும் உளவறிந்து மேலிடத்திற்கு எழுதியனுப்பும் அறிக்கை இன்றைய சமுதாயத்தில் அழிக்கப்பட வேண்டிய சக்தி எது என்பதைத் திட்டவட்டமாக எடுத்துரைக்கிறாள்.

"நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்" - மேலது

என்றார் பாரதி அவர் கூற்றுக்கேற்ப சங்கரி, செல்வச் செழிப்புடைய திருமூர்த்தியிடம் அவள் நெருங்கிப் பழகினாலும் பின்னர் தவறுகளைச் சுட்டிக்காட்டி கறுப்பு பணத்தை ஒழித்து திருமூர்த்தியை காவல்துறை அதிகாரியிடம் காட்டிக் கொடுத்த செயல் மூலம் சங்கரி புரட்சிப் பெண்ணாகத் திகழ்கிறாள் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**முடிவுரை:**

இன்றைய உலகில் மகளிர் சமுதாயத்தில் அனைத்து வகையான துறைகளிலும் சிறந்து விளங்குவதுடன் அத்துறைகளில் ஆண்களுக்கு நிகரான இடத்தில் முன்னேறி வருகின்றனர். இவ்வாறு மகளிர் முன்னேறி வந்தாலும், சாதனைகள் படைத்தாலும் பல பெண்களின் வாழ்க்கையில் இச்சமுதாயம் பல்வேறு விதத்தில்அவர்களை பாதிப்புக்கு உள்ளாக்கிக் கொண்டுதான் இருக்கிறது. இத்தகைய பெண்களின் நிலை உயர்வடைய வேண்டும் என்றால் பெண்ணின் உள்ளத்தையும் உடலையும் வன்முறையால் சீண்டி தங்களை மகிழ்வுடன் வைத்து கொள்ளும் சிந்தனையில் மாறுதல் ஏற்படாத வரையில்,"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டில் மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே" என்கிறார் பாரதிதாசன். ஆண் என்பவன் பெண் என்பவளை அடிமைப்படுத்துபவனாக அல்லாமல் அரவனைப்பவனாக இருந்தால் தான் உலகில், மகளிர் நிலை மாறி உயர்ந்து நிற்கும் என்பதை மறுக்க முடியாது. மேலும் கல்வி உரிமையும், பொருளாதார உரிமையும் பெற்றால் தான் இச்சமுதாயத்தில் பெண்கள் சுதந்திரவானில் சிறகடித்துப் பறக்க முடியும் என்பதை இந்நாவல் ஆனித்தரமாக எடுத்துரைக்கின்றது என்பது கண்கூடு.

# பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும்

***நா.சங்கீதா,** தமிழ்த்துறை,உதவிப்பேராசிரியர், ஸ்ரீசக்திகைலாஷ் மகளிர் கல்லூரி, சேலம் 03.

பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்களைப் போலவே தமிழர்களின் பண்டை வரலாற்றைக் காணப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் ஒன்று இந்நூல்கள் மக்கள் வாழ்க்கைக்கு வழி காட்டும் உயர்ந்த நூல்கள் என்று கூறலாம். சங்க நூல்கள் பெரும்பாலும், காதலைப் பற்றியும் அரசியலைப் பற்றியும் தமிழர் பண்பாட்டையுமே வலியுறுத்திக் கூறுகின்றனர். இந்நூல்களுக்குப் பின்னே தோன்றிய நீதி நூல்கள் எல்லாம், பெரும்பாலும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைப் பின்பற்றி எழுதப்பட்டவைகளாகும். இவைகள் பொதுவான நீதிகளையே கூறுகின்றன. இனி அந்நூல்கள் பற்றி சுருக்கமாகத் தெரிந்து கொள்ளுவோம். கீழ்க்கணக்கு நூல்களாவன,

**“நாலடி நான்மணி நால்நாற்பது ஐந்திணை முப்**
**பால் கடுகம் கோவை பழமொழி மாமூலம்**
**இன்னிவைசொல் காஞ்சியுடன் ஏலாதி என்பனவே**
**கைந்நிலைய ஆம் கீழ்க் கணக்கு”**

இதுவே அப்பாடல். இவை ஒழுக்க நிலையைக் கூறுகின்றனவாகிய கீழ்க்கணக்கு நூல்களாகும்.

**பொய்யை வெறுத்தல்**

பொய் சொல்வது தவறு பொய் சொல்வதை நல்லவர்கள் வெறுப்பார்கள். பொய்யர்களை மக்கள் மதிப்பதில்லை இன்றும் பொய் புகல்வோரைப் பொது மக்கள் இகழ்ந்துரைப்பதைப் பார்க்கின்றோம். இது பண்டையத் தமிழர் பண்பாகும்.

தலைவன் பரத்தையர் வீட்டுக்குப் போய்விட்டு மீண்டும் திரும்ப நினைத்தான். தலைவின் வரவேற்பை பெறமுடியாது என்பதால். பாணனை அனுப்பி சமாதானம் கூறும்படி செய்கிறான் தலைவன். பாணன் தலைவியிடம் இனி தலைவன் தவறு செய்யமாட்டான் இப்பொழுது செய்த குற்றத்திற்காக வருந்துகின்றான் என்று சொன்னான் பாணன். ஆனால் அப்பாணனைக் கடிந்து கொள்ளுகின்றாள் தலைவி என்பதை ஐந்திணை அறுபதில்,

**“பயம் இல் யாழ்ப்பாண பழுதாய கூறாது**
**எழு நீபோ நீடாது மற்று** (ஐந் -46)

என்று பயனற்ற சொற்களைப் பேசும் யாழ் வாசிக்கும் பாணனே குற்றமுள்ள பொற்மொழிகளைப் பேசாமல் நீ எழுந்து போ என்று கூறுகிறாள் தலைவி. மேலும் ஐந்திணை எழுபது பாடல்களிலும்,

**“தன் உற்ற எல்லாம் இருக்க இரும்பாண**
**நின்உற்றது உண்டேல் உரை** (ஐந் -43)

இவ்விரண்டு செய்யுட்களும் பொய்பேசுவதைத் தமிழர்கள் எவ்வளவு வெறுத்கனர் என்பதைக் காட்டுகிறது. தன்னுடைய தலைவனாக இருந்தாலும் பொய்சொல்வோரை தலைவி விரும்பவில்லை என்பதையும் இப்பாடல் எடுத்துரைக்கின்றது. மேலும் அக்காலத்திலும், இக்காலத்திலும் தலைவி தலைவன் பரத்தையர் வீட்டுக்கு போவதை தலைவி கடிந்து பேசுவதை அறிய முடிகிறது.

**நன்றி மறத்தல் தமிழர் பண்பாடன்று**

தலைவன் தலைவியின் உயிரினை திணைப்புனத்திலே காப்பாற்றுகின்றான். அதனால் தலைவியானவள் அவனையே என் தலைவியின் தோள்கள் தழுவிக் கொள்ளும். வேறொருவன் தோள்களைத் தொடுவதற்குச் சம்மதிக்க மாட்டாள் என்றாள் தோழி. இதனால் தலைவி நன்றியை எம் தலைவி மறக்க மாட்டாள் நன்றி மறத்தல் தமிழர் பண்பாடன்று என்று தமிழர் நெறியை உரைக்கிறாள் தோழி என்பதை,

**“கடாஅ மால் யானை கடிந்தானை அல்லால்**
**தொடாஅ ஆல் என்தோழி தோள்”** (திணை.நூற் -14)

என்ற திணைமாலை நூற்றைம்பது பாடலில் தமிழரின் நன்றி மறவாத உயர்ந்த பண்பாட்டை அறியமுடிகிறது

**நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும்**

பண்டையக் காலப் பழக்க வழக்கங்கள் பற்றியும் இந்நூல்களிலே அறியலாம். தும்மல் இயல்பாக வருவது ஆனால் யாரோ நம்மை நினைப்பதனால் தான் தும்மல் வருகின்றது என்பது நம்பிக்கை. மேலும் பெண்களுக்கு இடதுகண்ணும் கனவுக்குப் பலன் உண்டு, நெஞ்சத்திலே எழும் நினைப்பு காரணமாக உடம்பில் உறுப்புக்களிலே மாற்றம் ஏற்படும். பல்லி சொல்லுதற்குப் பலன் உண்டு. இத்தகைய நம்பிக்கைகள் பழந்தமிழர்களிடம் இருந்தன என்பதை ஐந்திணை எழுபது பாடல்களில்,

**"பூம்கண் இடம்ஆடும் கனவும் திருந்தின**
**ஓங்கிய குன்றமம் இறந்தாரையாம் நினைப்ப**
**வீங்கிய மென்தோள் கவினிப் பிணிதீரப்**
**பாங்கத்துப் பல்லி படும்** (ஐந்-41)

மேலும், திணைமாலை நூற்றைம்பது பாடலில்,

**"குறி அறிவார்க் கூஉய்க் கொண்டுஓர்**
**நாள் நாடி நல்குதல் நன்று"** (திணை.நூற் -54)

நல்ல குறிகளை அறிந்து சொல்லும் சோதிடர்களை அழைத்து ஓர் நல்ல நாளை தேர்ந்தெடுத்து அந்த நல்ல நாளிலே திருமணம் முதலிய மங்கலமான செயல்களை நடத்துவார்கள். இதனால் சோதிடர்களைக் கொண்டு நாள்பார்க்கும் செய்தியையும், இவ்வழக்கம் தமிழகத்தில் இருந்தது என்றும் இக்காலத்திலும் இவ்வழக்கம் இருப்பதையும் காண முடிகிறது. கார் நாற்பதில், கார்த்திகை நாளிலே வரிசையாக விளக்கு வைத்து விழாக் கொண்டாடும் வழக்கம் பண்டைத் தமிழகத்தில் இருந்ததை,

**"நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட**
**தலைநாள் விளக்கின் தகையுடைய ஆகிப்**
**புலமெல்லாம் பூத்தன தோன்றி"** (கார்.நாற் -26)

நன்மை மிகுந்த கார்த்திகைத் திருநாளில் நாட்டினர் கொளுத்தி வைத்த முதல் நாள் விளக்குகளைப் போல, தோன்றிப் பூக்கள் எல்லா இடங்களிலும் அழகுடன் பூத்திருக்கின்றன என்ற பாடல் விளக்கம் அன்றும் இன்றும் இவ்வழக்கத்தினை காண்பதை அறியலாம்.
மேலும், களவழி நாற்பதில்,

**"கார்த்திகைச் சாற்றில் கழிவிளக்கைப் போன்ற"** (கள.நாற் -17)

தமிழ் நாட்டிலே கார்த்திதை விழாக் கொண்டாடிய செய்தியை இவ்விரு நூல்களிலும் காணப்படுவதை அறிய முடிகிறது.

**நீதிகளின் சிறப்பு**

தமிழில் உள்ள நீதி நூல்களிலும் அறங்களையும் மக்கள் பின்பற்ற வேண்டியவை என்னென்ன என்பதை முதுமொழிக் காஞ்சியில் கூறுகின்றார். கூடலூர் கிழார்.

**"ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்**
**நசையில் பெரியதோர் நல்குரவு இல்லை"** (6-ம்பத்து-பா-7)

ஆசையைக் காட்டிலும் பெரிதொரு வறுமை இல்லை என்பதையும் பொருளிலே அளவுக்கு மீறிய ஆசையுள்ளான் நீதி முறைகளையும் பேணமாட்டான் என்பதையும் கூறுகிறது. மேலும்,

**"பொருள் நசை வேட்கையோன்**
**முறை செயல் பொய்"** (7-ம்பத்து-பா-9)

**"முறையில் அரசன் நாடு நல்கூர்ந்தன்று"** (9-ம்பத்து-பா-1)

மக்கள் எல்லார்க்கும் சமநீதி வழங்காத நாடு வறுமையால் வாடும் என்பதை கூறுகிறது. மேலும், திரிகடுகத்தில் அரசன் நீதியுடன் நடந்தால் தான் நாடு செழிக்கம் என்பதை நல்லாதனார் கூறுகிறார்.

**"கொடுங்கோல் அரசன் பெருமையடைய மாட்டான்"** (திரி-பா-66)

இவ்வாறு ஒரு மன்னன் எப்படி இருக்கவேண்டும் என்பதை எடுத்துரைப் பதை அறியமுடிகிறது.

**திருக்குறளும் பழமொழியும்:**

பழமொழியின் பாடல்களிலே பலவற்றில் திருக்குறளின் கருத்துக்கள் காணப்படுகின்றன.

**"நிறையான் மிகுகில்லா நேரிழை யாரைச்**
**சிறையால் அகப்படுத்தல் ஆகா"** (பா-45)

கற்பிலே சிறந்து நின்று, தம்மைத் தாமே காத்துக் கொள்ளாத பெண்களைச், சிறையிலே வைத்தாலும் அவர்கள் கற்பைக் காப்பாற்றி விட முடியாது. இவை திருக்குறளிலும்,

**"சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை"** (குற-57)

மேலும்,

**"ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அ∴துடையார்**
**நாற்றிசையும் செல்லாத நாடில்லை"** (பா-67)

என்ற பழமொழிப் பாட்டும்,

**"யாதானும் நாடாமால் ஊர்ஆமால் என்ஒருவன்**
**சாந்துணையும் கல்லாத ஆறு"** (குற-347)

என்ற குறளும் கற்றவனுக்கு எந்நாளும் தன்நாடே எவ்வூரும் தன்னூரே என்று கற்றவனின் பெருமையை எடுத்துரைக்கின்றது.

**"கறுத்தாற்றித் தம்மைக் கடிய செய்தாரைப்**
**பொறுத்தாற்றிச் சேறல் புகழ் ஆல்-ஒறுத்து ஆற்றின்**
**வான் ஓங்கு மால்வரை வெற்ப பயன்இன்றே**
**தான் நோன்றிட வரும் சால்பு"** (பா-44)

உயர்ந்த மலையையுடைய மன்னவனே சினந்து நின்ற தமக்குக் கொடுமை செய்தவர்களின் குற்றங்களைப் பொறுத்துக் கொண்டு நேர்மையான வழியில் நடப்பதுதான் பெருமையாகும் புகழாகும் அப்படியில்லாமல் தாமும் சினங்கொண்டு அவர்களைத் தண்டிப்பதனால் பயன் இல்லை. இது பழிமொழிச் செய்யுள். இக்கருத்தே திருக்குறளில்,

**"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றும் துணையும் புகழ்"** (குற-271)

தமக்கத் தீமை செய்தவரை எதிர்த்துத் தண்டித்தவர்க்கு ஒரே நாள் தான் இன்பம் உண்டு. ஆனால் அத்தீமையைப் பொறத்துக் கொண்டவர்க்கு உலகம் அழியும் வரையிலும் புகழ் உண்டு. இவ்வாறு திருக்குறள் கருத்துடன் ஒத்துக் காணப்படும் பழமொழிப் பாடல்களை அறியமுடிகிறது. இவ்விரு நூல்களும் வாழ்க்கைக் கல்வியை கற்று தருவதை அறியலாம்.

இவ்வாறு பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பல்வேறு அறக்கருத்துக்களையும் நல்நெறிகளையும் தமிழா் அக்கால முதல் இக்காலம்வரை போற்றும் நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் காணமுடிகிறது. மேலும் ஒரு நாட்டு மன்னன் எப்படி இருக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள் எக்காலங்களிலும் மன்னா்கள் பின்பற்றினால் நாடு செழிக்கும் என்பதையும் அறிய முடிகிறது. அக்கால மக்கள் தமிழா் பண்பாட்டினை போற்றி வளா்த்தனா் என்பதையும் அவற்றை இக்கால மக்களும் போற்றி காக்கப்பட்டால் நாடும் மக்களும் நன்மை பெறுவார்கள் என்று கூறுவது இன்றியமையாதது என்பதை பதினெண் கீழ்கணக்கு நூல்களில் காணமுடிகிறது.

# குறள் காட்டும் அற வாழ்வியல்

***சு.கி.நிஷாந்தி,** முனைவர் பட்ட ஆய்வாளர்.
**நெறியாளர்-முனைவர் இரா.இராமகுமார்,** தமிழ் உயராய்வு மையம், விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

மனித இயக்கத்தின் வாழ்வியல் அடிப்படைப் பண்புகளே அறமாகும். தமிழர்க்கு மட்டுமின்றி மாந்தராய் மலர்ந்துள்ள யாவருக்கும் வழிகாட்டும் ஒளிவிளக்கு திருக்குறள். சுவைக்க சுவைக்க சுவையுணர்வின் நுண்ணின்பம் புலப்படுவது போல திருக்குறளைப் படிக்க படிக்க, அதன்படி நடக்க, நடக்க ஒருவனின் வாழ்வு இன்பமடையும். மனித மாண்புகளும் வாழ்வியல் அறங்களும் மதிப்பிழந்து கொண்டிருக்கும் இன்றைய சூழலில் அறத்தை மேம்படுத்த வேண்டிய கடமை இலக்கியங்களுக்கு உண்டு. அவ்வகையில் குறள் காட்டும் அற வாழ்வியலை இக்கட்டுரையின் வழி காண்போம்.

**அறமெனப்படுவது**

ஒருவன் எல்லா தீமைகளையும் விடுத்து சான்றோர்களின் வழியிலே நிற்பானாயின் இவ்வுலகிலே புகழும், மறுவுலகிலே பேரின்பமும் கிடைக்கும். உயிர்களுக்கு அறத்தைக் காட்டிலும் சிறந்த பொருள் வேறொன்றும் இல்லை. செல்வம் உடையவரே அறம் செய்ய இயலும் என்று எண்ணலாகாது. அங்ஙனம் எண்ணும் மடமாந்தரை நோக்கி வள்ளுவர்

**”ஒல்லும் வகையான் அறவினை ஒவாதே**
**செல்லும் வாய் எல்லாம் செயல்** (குறள்: 33)

என்கிறார். செல்வம் உடையவர்கள் செல்வம் கொடுப்பதிலும், அறிவில் சிறந்தவர்கள் பிறரின் அறியாமையை அகற்றுவதிலும், உடல் உறுதி உடையவர்கள் பிறருக்கு உதவிகள் செய்வதிலும் ஈடுபட்டு அறமாகிய நற்பணியை செய்ய வேண்டும். இதையே பாரதியாரும்

**”நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்**
**நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்”** (1)

என்று அறிவுறுத்தினார்.

**இல்லற மேன்மை**

அறவாழ்க்கை இல்லறம், துறவறம் என்று இரண்டாக பிரிக்கப்பட்டு முதலில் வள்ளுவர் இல்லறவியலின் அறத்தைக் கூறுகிறார். இதற்கு காரணத்தை அவரே தம் குறளில்,

**“இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை“** (குறள்: 41)

என்கிறார். இதையே முன்னோர்களும் இல்லறமே நல்லறம் என்று கூறினார்கள். இல்வாழ்க்கையானது ஆண்மகன் ஒருவன் தன் மனைவி, மக்கள் முதலியவர்கள் மீது அன்பும் பிறருக்கு உதவும் அறமும் உடையதாக அமையுமாயின் இல்வாழ்க்கை உயர்த்த தன்மையும் சிறந்த பண்பும் உடையதாக அமையும். வான்புகழ் வள்ளுவர் இதனை,

**”அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது“** (குறள்: 45)

என்கிறார். அன்பு என்னும் கருவி ஒன்றே அனைத்தையும் ஆளும் தன்மை கொண்டது. அதனை பெற்றுவிட்டால் இல்லறம் இன்பம் பயப்பதாய் அமையும்.

**துணைமையின் மேன்மை**

இல்லறத்தில் தலைவர் என்னும் சிறப்பு ஆணுக்கு அளிக்கப்படுகின்றது உண்மை. ஆனாலும் இல்லறம் இனிமையுடையதாய் அமைய முழு பங்கும் இல்லாளின் கையில் தான் உள்ளது. இதையே வள்ளுவர்,

**“மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் தாயினும் இல்“** (குறள்: 52)

என்கிறார். மனைவியிடம் இல்லறத்தின் நற்பண்புகள் இல்லையாயின், இல்வாழ்க்கை எவ்வகை சிறப்புடையதாய் இருந்தாலும் மாட்சிமைப்படாது. குலவிளக்கமாய், குடும்ப குத்து விளக்காய்,

மாசில்லா மாணிக்கமாய் திகழும் மங்கையர்களுக்கு தெய்வம் அவள் கணவனே என்ற வள்ளுவரின் கருத்தை அடிவொற்றி குமரகுருபரர் தன் நீதிநெறி விளக்கத்தில்,

**"குலமகட்குத் தெய்வம் கொழுநனே** (1)

என்று கூறுகிறார்.

**மகத்துவமிக்க மக்கட்பேறு**

வாழ்க்கை சிறப்பாக அமைய ஒருவரின் துணை எத்தகைய நலனைப் பெற வேண்டும் என்று, வாழ்க்கைத்துணை நலம் என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் அள்ளிக் கொடுக்கின்றார். மனையறம் மங்கலம் என்றாலும் அதற்கு அணிகலன் நன்மக்கட்பேறு என்கிறார். வள்ளுவர் நன்மக்கட்பேறினை கூறுகையில்,

**"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த**
**மக்கட்பே றல்ல பிற"** (குறள்: 61)

என்கிறார். நன்மக்களைப் பெறுதலை விட வேறு பெறதக்க பேற்றை யாம் அறிந்ததுமில்லை, அறிகின்றதுமில்லை அறிய போதுமில்லை என்றுக் கூறி இல்லறம் நல்லறமாய் அமைய நன்மக்கட்பேறு அவசியம் என்றுக் கூறிகின்றார்.

அறம் செய்ய ஏற்றதான இல்வாழ்க்கையில், வாழ்க்கை துணைநலம் சிறக்க வேண்டும். அன்புடைய நன்மக்கட்பேறு அமைய வேண்டும் என்று வள்ளுவர் வலியுறுத்துகின்றார். அங்ஙனம் வாய்க்கபெறும் மனிதன் இன்பமுடன் இளமையுடன் வாழ்கிறான் என்று புறநானூறு கூறுகின்றது.

**"யாண்டு பல வாகநரையில் வாகுதல்**
**மாண்டவென் மனைவியோடு மக்களும் நிரம்பினர்"** (2)

இப்பாடலின் பொருள்படி வள்ளுவரின் வாய்மொழியும் அமைந்திருக்க காண்கிறோம்.

**இனியவைக் கூறி விருந்தோம்பல்**

விருந்தோம்பல் தமிழரின் சிறந்த பண்பாடு, விருந்தினர் என்பவர்கள் முன்பின் அறியாத புதியவர்கள் எந்நாட்டவராயினும், எம்மொழியினராயினும் நட்பு கொள்ளும் நல்லெண்ணத்துடன் வீடுதேடி வருவார்களாயின் அவர்களை வரவோற்பார்கள் தமிழர்கள். வள்ளுவ பெருந்தகை விருந்தோம்பலின் சிறப்பை கூறும் போது,

**"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு"** (குறள் : 86)

தன்னிடம் வந்து செல்லும் விருந்தினர்க்?கு உதவி புரிந்து அனுப்பிவிட்டுப் பின் வரக்கூடிய விருந்தினரை எதிர் பார்த்திருப்பவன் விண்ணுலகத்தார் விரும்பி எதிர்கொள்ளத்தக்க விருந்தினன் ஆவான் என்கிறார்.

பிறரை இழிவுப்படுத்தாத இனிய சொற்கள், இந்த உலகில் மட்டுமன்று இறந்த பிறகும் இன்பம் கொடுக்கும். இக்கருத்தை கண்ணம் பிரத்தினம் என்னும் ஆசிரியர் தன் நூலில்,

**"இழிவுத் தன்மை இல்லாத இன்சொல்**
**பேசியிருந்தால்**
**மறுமை இம்மைப் பிறவியிலெல்லாம்**
**இன்பம் தருமே** (3)

என்று பாடுகின்றார். விருந்தோம்பலும் இன்சொல் பேசி வரவேற்று மகிழ்வதையும் மனிதன் மேற்கொள்ள வேண்டும் அறமாக வள்ளுவர் வகுக்கின்றார்.

**அடக்கம் அமரருள் உய்க்கும்**

மனிதன் வாழ்க்கையில் சிறந்து விளங்க அடக்கத்துடன் கூடிய ஒழுக்கம் சார்ந்த வாழ்வே சிறப்பாக அமையும். எப்பொழுதும் இன்பம் தரத்தக்க அடக்கத்தை ஒருவன் மிகவும் கருத்துடன் காக்க வேண்டும் என்பது வள்ளுவரின் அருளுரை, இன்ப வாழ்வுக்கு ஏதுவாக அமையும் பொருட்செல்வத்தை மிகவும் பாதுகாப்பாக வைத்துக் கொள்வது போல் எப்பொழுதும் நிலைத்து நிற்பதும், உயிரோடு உறைவதுமாகிய அடக்கம் என்னும் பண்பை மனிதன் இன்னும் அதிகம் அருமையாகப் பாதுகாக்க வேண்டும். பணத்தைப் பாதுகாப்பது பாரமானது அடக்கத்தைப் பாதுகாப்பு மிகவும் எளிமையானது. எனவே தான் வள்ளுவர்.

**"காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனினூங் கில்லை உயிர்க்கு** (குறள்: 122)

சாதாரண மனிதனின் பணிவு உலகில் பெரியதாய் பேசப்படுவது இல்லை. ஆனால் செல்வந்தவர்களிடம் இருக்கும் பணிவு மிகவும் மதிக்கப்படும்.

**பிறனில் விழையாமை என்னும் நல்லறம்**

பிறருடைய பொருளுக்கு மனிதன் ஆசைப்படுவதே தவறு என்று பல அறநூல்களும் உணர்த்துகின்றன. அதிலும் இல்லத்திலும் தலைவன் உள்ளத்திலும குடிகொண்ட இல்லத்தரசியின் மீது ஆசைப்படுவது கொடுமையான பாவம் அதற்குரிய தண்டனைகளை சீதையின் கற்பினால் பலியான இராவணனின் நிலையையும், பாஞ்சாலியின் மீது கைவைத்த

துரியோதனின் நிலையையும் இராமாயணமும், மகாபாரதமும் சுட்டிக் காட்டுகின்றன. அக்கருத்தை வள்ளுவர் கூறுகையில்,

**"விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தார் இல்**
**தீமை புரிந்தொழுகு வார்** (குறள்: 143)

தன்னை நம்புகின்ற ஒருவனின் மனைவியிடம் தீயன விரும்பிச் செய்கைகளை மேற்கொள்ளும் ஒருவன் உயிருடையவனாய் இருந்தாலும் கெட்ட குணத்தின் காரணமாக அவன் இறந்தவனாகவே கருதப்படுவான் என்பது திண்ணம். பிறன் மனைவியை விரும்பாதே என்று பொருள்பட கொன்றை வேந்தனில்,

**"மைவிழி யார்தம் மனையகன்று ஒழுகு"** (4)

என்று ஒழுக்கப்பாடம் கற்பிக்கின்றார்.

**ஈகையும் வாய்மையும்**

பேரறிவாளர்களாகவும், நயனுடையாரகவும், பெருந்தகையாளராகவும் உலகில் வாழ வேண்டும் என்று கூறிய வள்ளுவர், அவர்களிடம் சிறந்து விளங்கும் செய்கையாகிய ஈகை என்னும் "அறம்" என்ன என்பதைக் கூறுகின்றார். "பாத்திரம் அறிந்து பிச்சையிடு" என்பது நம் நாட்டுப் பழமொழி. ஈகை என்பது ஒரு அறச்செயலாக விளங்க வேண்டுமானால், பொருளுடைய ஒருவன் அது இல்லாத வறிஞனுக்கு கொடுக்கும் கொடையாக இருத்தல் வேண்டும். இதையே வள்ளுவர்,

**"வறியார்க்கென்று ஈவதே ஈகை மற்று எல்லாம்**
**குறிஎதிர்ப்பை நீரது உடைத்து"** (குறள்: 221)

என்கின்றார். ஏழை எளியவருக்கு கொடுக்காமல் செல்வம் உடையவருக்கு கொடுக்கும் செயல் - கடன் போன்றது ஆகும். ஈகையின் சிறப்பை உணர்த்தவே கண்ணதாசன் பாரியின் புகழை,

**முல்லைக்குத் தேர்கொடுத்தான் வேள்பாரி - வான்**
**முகலினும் புகழ்படைத்த உபகாரி** (5)

என்று உரைக்கின்றார்.

பசிக்கொடுமையினை தீர்த்து வைக்கின்ற சான்றோர்களின் சிறப்பை மணிமேகலை,

**"உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே (மணிமேகலை பாக எண்: 17)**

என்று கூறுகின்றது.

பிறருக்கு கொடுக்கும் ஈகை பண்புடன், தீங்கு விளைவிக்கும் சொற்களை கூறும் தன்மையுடன் இருப்பின் அது அறமாகாது. ஆகவே மனிதன் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களுள் ஒன்று வாய்மை என்கிறார். வாய்மை பேச வேண்டும் என்றாலும் பிறருக்கு நன்மை தருமாயின் பொய்மையாக இருப்பினும் அது அறமாகும் என்று முரண்படக் கூறுகின்றார்.

**"பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்** (67) (குறள்: 291)

பொய், சொற்களும் குற்றமில்லாத நன்மையைக் கொடுக்குமாயின் மெய் சொற்களின் நிலையாகவே கொள்ளப்படும். அனைவரும் ஆத்மாக்களே எனினும், மகாத்மா என்று உலக மக்கள் அனைவரின் உள்ளங்களிலும் நிலைத்து நிற்க காந்திஜியால் முடிந்தது என்றால், அதற்கு காரணம் வாழ்நாள் முழுவதும் கடைபிடித்த வாய்மையே ஆகும்.

**முடிவுரை**

"எல்லோரும் இன்புற்று நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே வள்ளுவரின் நோக்கம். நல்வாழ்க்கைக்கு உடல் வளம் வேண்டும். மனநலனும் வேண்டும். மனத்தைப் பயன்படுத்தி, உடல்நலத்தையும் காத்தோம்பி, வாழ்க்கையில் ஒருவனுக்கு ஏற்படும் நன்மைகளுக்கும், தீமைகளுக்கும் புகழ்ச்சிக்கும், இகழ்ச்சிக்கும் நாம் செய்யும் செயல்களே காரணம் என்பதை மனிதன் உணர்ந்து கொள்ளும் போதே, அவனுடைய வாழ்வு அறநெறியினுள்ளே நுழைந்து விடுகிறது. விரும்பியோ, விரும்பாமலோ, வாழக்கைக் கப்பலில் ஏறிவிட்டவன் குடும்பம் என்ற கடலைக் கடந்து இறுதியில் கரையைச் சேர வேண்டியவனாகிறான். அனைத்தையும் இரண்டு இரண்டு வரிகளிலே இரத்தின சுருக்கமாகக் கூறி சென்றுள்ளார் வள்ளுவர் எனில் அது மிகையாகாது.

**அடிக்குறிப்புகள்**

1. வான்புகழ் வள்ளுவர் பக்: 44
2. மேலது பக்: 97
3. இல்லறக்குறள் இசைப்பாடல்கள் பா. எண்: 28
4. கொன்றை வேந்தன் பாடல் எண் : 72
5. கண்ணதாசன் சங்க இலக்கிய செல்வாக்கு பக் எண்: 202

# கி.ரா.வின் படைப்புகளில் வாழ்வியல்

***முனைவர் பி.பகவதி,** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மிகை உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், காமராசர் அரசு கலைக் கல்லூரி, சுரண்டை.

கிராமத்து மக்களின் எளிய வாழ்க்கையை, பண்பாட்டை, அழகியலை, நுட்பமான உணர்வுகளை, போராட்டங்களை அவர்களின் மொழியிலேயே யதார்த்தமாகக் கதை படைப்பதில் தேர்ந்தவர் கி.ராஜநாராயணன் என்னும் கி.ரா ஆவார். அவரின் கூர்ந்து நோக்கும் அழகியல் ரசனை, சமூகப் பொறுப்புணர்வு, சகமனிதன் மேல் காட்டும் பரிவு, சமகாலத்தின் போக்கை உற்றுக் கவனிக்கும் மனிதநேயம், படைப்புத்திறன் போன்றன கி.ரா. வை ஒரு கரிசல் காட்டு எழுத்தாளராகச் சித்திரிக்கின்றது. தன் நாற்பது வயதுக்கு மேல் எழுதத் தொடங்கிய கி.ரா. சிறுகதை, நாவல், கட்டுரை, கடிதம், வரலாறு, வட்டாரச் சொல் அகராதி என்று தமிழ்மொழியின் பல்வேறு இலக்கியத் தளங்களில் முத்திரை பதித்துள்ளார். இக்கட்டுரையின் வழி கி.ரா. வின் படைப்புகளில் வாழ்வியல் விளக்கப்படுகின்றது.

**கதையும் வட்டார மொழியும்**

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு வகையான பண்பாடுகளும் பழக்கவழக்கங்களும் காணப்படுகின்றன. ‘வேற்றுமையில் ஒற்றுமை’ என்பது இந்தியப் பண்பாட்டிற்கு மட்டுமின்றி தமிழ்ப் பண்பாட்டிற்கும் பொருந்தும். பண்பாட்டில் ஒற்றுமை வலியுறுத்தப்படும் அளவிற்கு வேற்றுமை விதந்தோதப்படுவதில்லை. தமிழகத்தில் பொருநையாற்றங்கரை, காவிரியாற்றங்கரை, மலைப்பகுதி, கடற்கரைப் பகுதி, கரிசல் பகுதி, நாஞ்சில் நாடு, கொங்கு நாடு என ஒன்றுக்கொன்று முரண்பாடான நிலப்பகுதிகளும், சாதிய மற்றும் தொழிலடிப்படையிலான சமூகப் பிரிவுகளும் காணப்படுகின்றன. இப்பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்வை மையமாகக் கொண்டு படைக்கப்படும் கதைகளை வட்டாரக் கதைகள் என்றழைப்பது மரபாக உள்ளது. கரிசல் நிலப்பகுதி மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டு படைக்கப்படும் கதைகள் கரிசல் வட்டாரக் கதைகள் என்றும் நாஞ்சில் நாட்டு மக்களை மையமாகக் கொண்டு எழும் கதைகள் நாஞ்சில் வட்டாரக் கதைகள் என்றும் கொங்கு நாட்டு மக்களின் வாழ்வியலைக் கூறும் கதைகள் கொங்கு வட்டாரக் கதைகள் என்றும் குறிப்பிடப்படுகின்றன. அவ்வவ் வட்டாரக் கதைகளில் அங்கங்கு வாழும் மக்கள் பேசும் வட்டார மொழிகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு வட்டார மொழிகளில் கதைகள் படைப்பதைச் சிலர் ஒத்துக் கொள்வதில்லை, மொழியின் வளம் குன்றிவிடும் என எண்ணுகின்றனர்.

**தொல்காப்பியர் கூறும் கதைமொழி**

தொல்காப்பியர் செய்யுளியலில் ‘புலன்’ என்னும் வனப்புடைய செய்யுளுக்கு,

**“சேரிமொழியாற் செவ்விதிற்கிளந்து**
**தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிப்**
**புலனென மொழிப புலனுணர்ந்தோரே”** (தொல்., 1497)

என்று வரையறை செய்கிறார். இந்நூற்பாவில் காணப்படும் ‘சேரிமொழி’ என்பதற்கு உரையாசிரியர்களான பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் ‘பாடி மாற்றங்கள்’ எனப் பொருள் எழுதியுள்ளனர். ‘பாடி’ என்பது ஊர் மற்றும் குடியிருப்பைக் குறிக்கின்றது. மற்றொரு உரையாசிரியரான இளம்பூரணர் தன் உரையில் ‘சேரி மொழியால்’ என்பதற்குத் தெரிந்த மொழியால் என்று பொருள் கூறியுள்ளார். தெரிந்த மொழி என்பது வட்டார வழக்குச் சொல்லினைக் குறிக்கும். எனவே தெரிந்த மொழியாகிய பேச்சு வழக்கினை அதாவது வட்டார வழக்கினையே தொல்காப்பியர் ‘புலன்’ என்னும் அழகாகக் கருதியுள்ளார் என்பதை இதனால் உணரமுடிகிறது. ஒரு குறிப்பிட்ட பகுதியினரின் பேச்சு வழக்கை அம்மக்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டெழுதும் கதைகளில் பயன்படுத்தப்படும் போது அம்மொழியானது அக்கதைகளுக்கு அழகினைத் தருகிறது. அத்துடன் கதைகளோடு இயல்பாகி ஒன்றச் செய்கிறது.

**கி.ரா.வின் படைப்புகளில் வாழ்வியல்**

ஆரம்பகால புதின ஆசிரியர்களுள் ஒருவரான மாதவையா தனது ‘பத்மாவதி சரித்திரம்’ என்ற புதினத்தில்,

> **“தமிழ் பாஷைக்கு நாவல் முற்றும் நாவலாதலால் (புதியதானதால்) ஒரு விஷயம் கூறத்தக்கது. கிரந்தத்தின் இடையிடையே கீழ்த்தரப் பாத்திரங்கள் பேச நேரிடும் போது இலக்கண வழுச் செறிந்த அவர் வாய் மொழிகளை அவ்வண்ணமே எழுதுவது வழக்காயினும் கர்த்தா நேரில் கூறும் வரலாறுகள் வழுவின்றி இருத்தல் வேண்டும்” என்று குறிப்பிடுகிறார். இக்கூற்றின்படி நாவலில் இடம்பெறும் முக்கிய பாத்திரங்களும் நாவலாசிரியனும் இலக்கிய மொழியைப் பயன்படுத்த வேண்டும். கீழ்த்தரப் பாத்திரங்கள் தங்களுக்குரிய பேச்சு மொழியைப் பயன்படுத்த வேண்டும். கீழ்த்தரப் பாத்திரங்கள் என்று மாதவையா குறிப்பிடுவது கல்வியறிவு மறுக்கப்பட்ட அடித்தள மக்களையேயாகும். இன்றும் கூட அவரது கருத்தினை வலியுறுத்துபவர்கள் நம்மிடையே உண்டு” (இனவரைவியலும் தமிழ் நாவலும், ப. 27)**

என்பர் ஆ.சிவசுப்பிரமணியன். அவ்வாறு வலியுறுத்துபவர்களின் கருத்துக்களை தமக்கே உரிய நடையில் ‘தமிழ் வாழ்க’ என்ற கட்டுரையில் மறுத்துள்ளார், கி.ரா.

> **“ஆதியில் மொழி கருத்துப் பரிமாற்றத்துக்குத்தான் உண்டானது. அதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அதன் பிறகு இந்தச் சமுதாயம் வளர்கிறது., மாறுகிறது. மொழிக்கும் இது நேர்கிறது. பேசுவதற்காக இருந்த மொழியில் கதைகள், கவிதைகள், காவியங்கள், இதெல்லாம் பிறக்கின்றன. சமுதாயம் உயர்ந்ததால் மொழியும் உயர்ந்தது. மொழி உயர்ந்தபோது - காவியம் படைக்கப்பட்ட போது இருந்த சமுதாயம் மாறினாலும் காவியம் இருக்கும். இது இந்த இன மக்களுக்கு ஏற்பட்ட ஒரு லாபம். இப்போது காவியம் இயற்றும் யுகம் முடிந்துவிட்டது. இப்போது தமிழில் உரைநடை இலக்கியத்தின் காலகட்டம்” (ப. 428)**

என்ற கி.ரா.வின் கருத்து உரைநடை இலக்கியத்திற்கு வட்டார மொழியின் இன்றியமையாமையை உணர்த்துகிறது. மேலும் பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் உள்ள இடைவெளி குறைய வேண்டும் எனவும் கி.ரா. எண்ணுகிறார். கதைகளில் தூய தமிழ் நடையைக் கடைப்பிடிக்க வேண்டும் என கூறுகிறவர்களைத் தமிழ் மொழிக்குப் பெருமை சேர்க்க நினைக்காதவர்கள் என கி.ரா. சாடுகின்றார்.

> **“தூய தமிழ்வாதிகளுக்குப் படைப்பு இலக்கியம் முக்கியமில்லை, அவர்களுக்கு வார்த்தைகள் தூய தமிழாகி விட வேண்டும், அதுபோதும். அதுவே பெரிய வெற்றி என்று கருதுகிறார்கள். தமிழில் படைப்பு இலக்கியம் என்று அவர்கள் கருதுவது பண்டையத் தமிழ்க் கவிதைகளை மட்டும் தான். புதிதாகத் தமிழில் உரைநடை இலக்கியம் தோன்றி செழிப்பதிலேயோ அப்படி உண்டாகித் தமிழ்மொழிக்குப் பெருமை சேர்க்க வேண்டுமே என்றதிலேயோ ஆர்வம் அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை” (ப. 434)**

என்பது கி.ரா. வின் கருத்து. ஈழத்தமிழர்களின் பேச்சிலும் எழுத்திலும் மயங்காத தமிழர் கிடையாது. அதற்கான காரணத்தை,

> **“மணிக்கொடி கால எழுத்தாளர்களைத் தொடர்ந்து ஈழத்து எழுத்தாளர்களும் கொஞ்ச காலம் நம்மவர்களைப் போலவே ஒருவகைச் ‘சாம்பார் நடை’ யில் தான் எழுதிக் கொண்டு வந்தார்கள். பிறகு தாம் தெரிந்தது அவர்களுக்கு, இந்த மொண்ணைத் தமிழ் நடையை உதறிவிட்டு, ஈழநாட்டு முகம் தெரியும் படியான ஒரு உயிருள்ள தமிழ் நடையில் எழுத வேண்டும் என்று. இந்த நடையை அவர்கள் தங்கள் மக்கள் பேசும் பேச்சு நடையிலிருந்து வடித்தெடுத்தார்கள், அதில் வெற்றி பெற்றார்கள்” (ப. 417)**

என்று கி.ரா. விளக்கியுள்ளார். எனவே பேச்சு நடையிலான வட்டார நடையிலிருந்து தோன்றும் கதை இலக்கியமே வெற்றி பெறும் என்பதே கி.ரா. வின் அசைக்க முடியாத நம்பிக்கை எனலாம். அத்துடன் கி.ரா. தூய தமிழ் நடையை சாம்பார் நடை, மொண்ணை நடை, சாவஞ்செத்த நடை, சக்களத்தி நடை பொய்த்தமிழ் என்றெல்லாம் வருணித்துள்ளார்.

தூய தமிழ்நடை மூக்கை நேராகத் தொடாமல் தலையைச் சுற்றித் தொடுவது போல நேரத்தை வீணாக்குகிறது என்பது கி.ரா. வின் எண்ணம். அதனால் தான்

> **“அது ஒருவகைப் பொய்த்தமிழாகவே எனக்குத் தோன்றிக் கொண்டேயிருக்கிறது” (ப. 415)**

என்ற தன் கருத்தையும் முன்வைத்துள்ளார். தூயதமிழ் நடை தேவை என்பவர்கள் மொழி அழிந்து போகுமோ அல்லது திரிந்து வேறு மொழி ஆகிவிடுமோ என்ற பயத்தில் தான் அவ்வாறு கூறுகிறார்கள் என்று எண்ணும் கி.ரா. அவர்களுக்காகக் கீழ்க்கண்ட விடையை முன்வைக்கிறார்.

> **“தமிழ்த்தாய்க்கு எத்தனையோ முகங்கள். நாம் நினைத்திருப்பது போல அவளுக்கு ஒரே முகம் இல்லை. ‘முப்பது கோடி முகமுடையாள்’ என்று பாரதி சொன்னது தேசத்துக்கு, இது நாட்டுக்கு (தமிழ்நாட்டுக்கு) தமிழ்த் தாய்க்குச் செட்டிநாட்டில் ஒரு முகம், கொங்கு நாட்டில் ஒரு முகம், சோழ நாட்டில் ஒன்று, நெல்லைச் சீமையில் ஒன்று, கரிசல் காட்டில், தொண்டை நாட்டில், நாஞ்சில் நாட்டில், மதுரை மண்ணில், இன்னும் பல, (ஈழத்துத் தமிழையும் சேர்த்துக் கொள்ளலாம்) இப்படி வட்டாரந்தோறும் அவளுக்குத் திருத்தமான முகங்கள் இருக்கின்றன. முகத்துக்கு ஒரு நாக்கு இருக்கிறது. நாக்குக்கு ஒரு பேச்சு இருக்கின்றது. தமிழ்மொழி அவ்வளவு பரந்……….த விஸ்தாரமான மொழி” (பக். 414-415)**

என்று தமிழ்மொழி குறித்து பெருமிதம் கொள்கிறார்.

மொழி என்பது எழுத்து அல்ல. எழுத்துக்கள் தான் மொழி என்று மயங்கினால் பல தவறுகளைச் செய்ய நேர்ந்து விடும் என்று அஞ்சும் கி.ரா. பேசுவோரின்றி செத்த மொழியாக இலக்கியங்களில் - எழுத்து நடையில் மட்டும் காணப்படும் மொழிகளையும் பட்டியலிடுகின்றார். மேலும் கிளைகளால் மரத்தின் அடிப்பகுதி விருட்சமாக மாறுவதைப் போல வட்டார மொழியால் தமிழின் வளமை பெருகும் எனவும் கி.ரா. கூறியுள்ளார்.

எனவே நினைத்ததை நினைத்தவாறே கூறும் வழக்கில் உள்ள பேச்சுமொழி - அந்ததந்தப் பகுதி மக்களின் நாவில் புரளும் வட்டார மொழியே கி.ரா. வின் கதைமொழியாகக் கருதப்படுகிறது. இதன் வழி கி.ரா. மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்துள்ள தன்மையினை இக்கட்டுரை வழி கண்டோம்.

# குறுந்தொகையும் ஃபிராய்டு உளவியலும்

***முனைவர் சு.பேச்சியம்மாள்,** தமிழியல் துறை, உதவிப் பேராசிரியர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

**முன்னுரை**

உளவியல் என்பது இன்று பல்வேறு துறைகளில் அகலக்கால் பதித்து வருகிறது. உளவியல் சாராத துறைகளே இல்லை என்று கூறும் அளவிற்கு உளவியலின் தேவை இன்று உணரப்பட்டு வருகின்றது. உளவியல் என்பதன் ஆங்கிலச் சொல் **'Psychology'** ஆகும். மனிதனின் ஆழ்மனத்தோடும் அதன் இயங்குநிலையோடும் தொடர்புடைய ஒன்றாக உளவியல் உள்ளது. உளவியலும் இலக்கியமும் என இன்று பல்வேறு ஆய்வுகள் நடந்தாலும் அவை பிராய்டு, யுங், லக்கான் போன்ற உளவியலாளர்கள் கலை இலக்கியம் தொடர்பாக முன் வைத்துள்ள கருத்தியல்களுக்கும், வரன் முறைகளுக்கும் ஏற்ப இன்னமும் முழுமை பெறவில்லை என்று கூறலாம். அந்த வகையில் குறுந்தொகைக் கவிதைகளை உளவியல் சார் கருத்துகளின் அடிப்படையிலே ஆராய வேண்டியது அவசியம். பழந்தமிழரிடத்தே நிலவிய உளவியல் பற்றிய சிந்தனைகளை ஆராய்ந்து அறிவதே இக்ககட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

**உளவியல்**

உளவியல் என்பதை உளவியலாளர்களான பிராய்ட், யுங், லக்கான் போன்றோர் கூறிய கருத்துக்களை உளவியலுக்கான வரையறைகளாகக் கொள்ளலாம். அகராதிகளின் துணைக்கொண்டு ஆராயும் போது **"மனிதமனம் செயல்படுவதைக் குறித்தும், மனத்தின் வெளிப்பாடுகளான நடத்தை, குணம் குறித்தும் ஆராயும் (அறிவியல்) துறை, Psychology."** எனவும் **"The Science of the Mind – மனிதத்த்துவ சாஸ்திரம்"** எனவும் பொருள் கூறப்படுகின்றது. அந்தவகையில் **'சிக்மண்ட் பிராய்ட்' (Sigmund Freud)** மனத்தின் இயல்பு, பாகுபாடு, செயற்பாடு என்னும் நிலைகளில் உளவியலை ஆராய்ந்து உளவியலுக்கு பெருமை சேர்த்துள்ளார். இவரே இலக்கியப் படைப்புக்களை ஆராயப்பயன்படும் உளப்பகுப்பாய்வு (Psychoanalysis) பற்றி முதன் முதலில் எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கியுள்ளார்.

**புணர்தல்**

குறிஞ்சி நிலத்துக்குரிய அகவொழுக்கமாகப் புணர்தலைக் குறிப்பிடுவர். புணர்தல் என்பது உயிரனங்களின் அடிப்படை உணர்ச்சி என்றே கூறலாம்.குறுந்தொகைப் பாடல்களில் தலைவன் தலைவியைக் கண்டு அவளுடைய அழகில் மயங்கி மையல் கொள்கிறான். அவளுடைய அம்பு போன்ற கூரிய பார்வையும் கண்களும் பற்களும் ஒழுங்காக அமைந்துள்ளன. (குறு.132,272,52) அவளது கருங் கூந்தள் குவளை மலர் வீசவும் (116,300,52) நெற்றிகள் ஒளிவீசவும், தோள்கள் திரண்டும் வாய் அல்லி மணம் வீசிக் கொண்டிருக்கின்றது. (70,72,300) மேனி பொன் போன்று அழகிய நிறம் அவள் மயில் போன்ற இயல்பையும் நீரைப் போன்ற சாயலையும் உடையவள், அவன் அவளைக் கூர்ந்து. அவள் கண்கள் அம்பு எய்வதைப் போல அவனுக்கு காம நோயைத் தருகின்றன. (72) அவளுக்கோ அவன் கண்கள் காதல் நோயைத் தருகின்றன. (13) தலைவியிடமிருந்து பிரிந்த தலைவனுக்கு அவள் நினைவு புதிதாகப் பிடிக்கப்பட்ட யானையைக் கட்டிப்போடுவது போல அவனை கட்டிப் போடுகிறது.

பொருள் ஈட்டிக் கொண்டு வந்த தலைவன் தன் பெற்றோர் மூலம் பெண் கேட்கிறான் (குறு.146) பெண் கொடுக்க பெற்றோர் இசைய திருமணம் நடக்கிறது (குறு.351) பெண் தர மாட்டார்கள் என்று தோன்றும் போது தோழி தலைவனிடம் கூறி பெற்றோருக்குத் தெரியாமல் தலைவியை அவன் இல்லத்துக்கு அழைத்துப் போகும்படி கேட்டுக் கொள்கிறாள் (குறு.271) இதற்கு உடன்போக்கு என்று பெயர். தலைவனை உடன்போக்கிற்கு ஒப்ப வைக்கிறாள் (குறு.388) தலைவியிடம் இசைவினை முயன்று பெறுகிறாள் (குறு.297,369,343) தலைவி இசைந்ததைத் தலைவனுக்கு தெரிவிக்கிறாள். தலைவியைத் தலைவனோடு சேர்த்து அனுப்பும் போது தோழி தலைவனிடம் சொல்லும் சொற்கள் நெஞ்சை நெகிழ்விப்பனவாக உள்ளன. "தலைவனே! நீ இவளை அழைத்துச் செல்லுமிடத்தில் உன்னைத் தவிர வேறு யாரும் இவளுக்கில்லை. இவள் உனக்குச் செய்யும் நன்மை ஆயினும் போற்றுக நீ இவளை

விரும்புதல் சிறந்தது. இவள் ஊடினாலும் அந்த ஊடல் தீர அவளுக்கு அளி செய்வாயாக (குறு.115) என்கிறாள். பிறகு இவர்கள் இருவரும் சென்று விட்ட செய்தியைச் செவிலிக்குத் தெரிவிக்க செவிலி அதை நற்றாய்க்குத் தெரிவிக்கிறாள். (குறு.15) அதன் பின்னர் செவிலி தலைவியைச் தேடி செல்லும் போது பலரை பார்க்கிறாள். ஆனால் தலைவியையும் அவளை அழைத்துச் சென்ற காளையையும் அவளால் பார்க்க முடியவில்லை "வானத்து மீன்கள் போல் எவ்வளவு பேர் கண்ணுக்குத் தட்டுபடுகிறார்கள், ஆனால் அவர்கள் காணப்பட வில்லையே" என்று ஏங்கவே, கால் தளர்ந்து நடை தவறி, பார்த்து பார்த்து கண்களும் ஒளி (குறு.44) இழந்து திரும்பும் போது கூறுகிறாள். "எம்மை விட்டு எம் மகள் போகும் மலைவழி மணல் மிகப் பெற்றதாய் ஞாயிற்றின் வெப்பம் தெரியாமல் மழை பெய்து குளிர்ச்சியுடையதாக" என்று வாழ்த்தி விட்டுத் திரும்புகிறாள் (குறு.378) தோழியையும் **செவிலியையும் பண்பட்ட மனிதர்களாகப் படைக்கப் பெற்றுள்ளனார். இதை தான் சுயநல மனம் (Ego / Egoistic Mind) என்று ஃபிராய்ட் கருதுகிறார். சுயநல மனம் மனிதனுடைய வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது என்று நிச்சயமாகக் கூறமுடியும். ஏனென்றால் சுயநல மனமானது மனிதனுடைய அக மனதையும் புறஉலகையும் ஒரு பாலம் போல் இணைத்து அவனுடைய அகமனதிலுள்ள கட்டுப்பாடில்லாத உணர்ச்சிகளையும் பல்வேறு எண்ணங்களையும் ஒருங்கிணைத்து அவன் எண்ணங்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதோடு அவனைப் பண்பாடுள்ள மனிதனாகவும் மாற்றுகிறது. இந்த மாற்றங்களுக்கு ஒரு செயல் ஊக்கியாகச் செயல்படுகிறது அவன் வாழும் சூழலாகும். இந்த மனதை யதார்த்த மனம் என்று பஞ்சாங்கம் கூறுகிறார். இலக்கியப்படைப்பிற்கு இந்த யதார்த்தமனம் அல்லது மனிதனோடு வாழ்ந்து கொண்டிருக்கிற நிகழ்கால மனம் மிகவும் துணைபுரிகிறது. ஒருவராலும் ஏற்றுக்கொள்ளத்தகாத கொடுமையைப் புரிந்த இந்தத் தலைவனையும் மனங்கோணாமல் தன்னுடைய கற்பொழுக்கத்தின் சிறப்பினால் தலைவனுடைய கொடுஞ்செயலை மறைத்து வாழ்த்தும் பண்புடையவர்களாக காட்டுகிறார் ஆசிரியர்.**

**இரங்கலும் இருத்தலும் ஊடலும்**

அகப்பொருள் மரபின்படி இரங்கலும், இரங்கல் நிமித்தமும் நெய்தல் திணையின் பாற்படும். தொழிலின் நிமித்தம் தம்மைப் பரிந்து போகும் தலைவனின் பிரிவை ஆற்றாது தலைவி இரங்கல் நிலையிலே தவிப்பாள். முல்லைத் திணைக்குரிய அகத்திணை ஒழுக்கம் இருத்தல். இது காத்திருத்தல் காவலிருத்தல் என்ற இரு வகையிலே நோக்கத்தக்கது. மருதத்திணைப் பாடல்களில் **'ஊடல்'** என்னும் அகவொழுக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. **'ஊடல்'** என்பது தலைவிக்குத் தலைவன் மேல் எழும் ஒரு பொய்க்கோபம் என்றே கூறலாம்.தலைவன் பிரிவு தலைவியை மிகவும் வருத்துகிறது. அவர் **"போகப் போகிறேன் போகப் போகிறேன்"** என்று சொன்ன போதெல்லாம் வழக்கமாகச் சொல்வதையே சொல்கிறார். போக மாட்டார் என்று நினைத்து ஒருநாள் "போங்களேன்" என்றேனே (குறு.325). "என்னைத் துறந்து பொருளைத் தேடிச் சென்றார் என்றால் பொருள் தான் பெரிது அருள் விரும்பத்தகாதது" என்று நினைத்து விட்டாரே (குறு.174) பொருளுக்காக என்னைப் பிரிந்து செல்லும் உரம் அவருக்கு இருக்குமானால் உரம் உடையவர் உரம் உடையவராகவே இருக்கட்டும். நான் மடமடந்தையாகவே இருக்கிறேன்" என்று நினைத்துப் பொருமுகிறாள் (குறு.20) (குறு.285) தலைவியைப் பிரிந்து பரத்தையர் இல்லங்களுக்குச் செல்கிறான். தலைவி மறுபடியும் துன்பத்திற்கு ஆளாகிறாள். "மாறுபட்ட தழைகளை உடுத்திக்கொண்டு அத்தழையாடை தேமல் நிறைந்த பரத்தை தலைவரைப் பார்க்க நான் இரங்கத்தக்கவள் ஆவேன்" என்று வெம்புகிறாள் (குறு.293). இருந்தாலும் தோழி அவள் ஊடலைத் தீர்க்கும் முயற்சியைக் கைவிடவில்லை. தலைவி, "தலைவரிடமிருந்து நாம் இழந்த நலத்தைத் திரும்பப் பெறலாம் என்கிறாய். ஆனால் இரந்தவர் வேண்டியதைக் கொடுத்துவிட்டு அதைத் திருப்பித் தா என்று கேட்பதைவிட உயிரை இழப்பது துன்பமானதோ" என்கிறாள் (குறு.349)**.தலைவன் பரத்தையரிடம் செல்வதை சுப்பர் ஈகோ** என்கிறார் பிராய்டு.

**பிரிதல்**

பிரிவின் காரணமாக தலைவி அடையும் துன்பத்தை தாங்க முடியவில்லை எப்போதும் இணைந்தே இருக்கும் மகன்றில் என்னும் பறவைகளுக்குக்கிடையில் பூக்குறுக்கிட்டாலும் பல ஆண்டுகள் கழிந்து விட்டதுபோல் அவற்றுக்குத் தோன்றுமாம் பிரிந்து தனித்தனியே இருக்கும் நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ள உயிர் போக வில்லையே என்று ஆற்றாளாகிறாள் (குறு.57) கடலைப் பார்த்து கடலே நீ என்னைப் போல் யாரால் வருத்த முற்றாய் இரவும் பகலும் உன் அலையின் ஒலி கேட்டுக் கொண்டே இருக்கிறதே என்று அரற்றுகின்ற (163) தலைவியை ஆற்றுகிறாள் தோழி.

**“இதை ஃபிராய்டின் மேம்பட்ட மனம் (Super ego) என்று கூறலாம். ஃபிராய்ட் ஒரு மனிதனை பண்புடையவனாக மாற்றும் மனது என்று குறிப்பிடுகிறார்”.** அதாவது தலைவியுடன் தங்காமல் தலைவன் வினை மேற்கொள்வதும் கட்டுப்பாடுடனுடன் இருப்பதும் மேலும் தலைவியை அதுவரை தோழி ஆற்றுவிக்கும் பண்புடையவர்களாக பார்க்க முடிகிறது.தலைவன் தலைவி சந்தித்தப் பின் “உன் தந்தையும் என் தந்தையும் உன் தாயும் என் தாயும் எம்முறையில் உறவினர்? நீயும் நானும் இதற்கு முன் அறிந்தவர்களா? நம்முடைய நெஞ்சங்கள் இப்போது கலந்து நிற்கின்றனவே” என்று அவளை ஆற்றுவிக்கிறான் (குறு.40) மென்மை உடையவளே கடல் சூழ்ந்த உலகமே எனக்கு கிடைத்தாலும் நான் உன் நட்பை விடமாட்டேன் (குறு.300) என்று கூறி அவள் அச்சத்தைப் போக்கி பிரிகிறான்.இதற்குமேல் தலைவியின் கற்பு வாழ்க்கை ஆரம்பிக்கிறது.தலைவன் வீட்டை அடைந்ததும் தலைவியின் சிலம்புகழி சடங்கு நடத்தப்படுகிறது (குறு.715) (சிலம்பு கழித்தல் என்பது மணமாகாத பெண் அணிந்திருக்கும் ஒரு வகைச் சிலம்பைத் திருமணத்தின் போது கழட்டி விடுவது). திருமணமான சில நாட்கள் கழித்துத் தோழி தலைமகன் வீடு சென்று தலைவியின் இல்வாழ்க்கையைப் பார்க்கிறாள். **“திருமணம் ஆகும்வரை நீ ஆற்றியிருந்ததைப் பற்றி நான் மகிழ்கிறேன் என்கிறாள்.”**

இருவருடைய வாழ்க்கையும் இன்பமாக நிகழ்ந்து கொண்டிருக்கையில் “ஒரே ஒரு நாள் தலைவியைப் புணர்ந்தேனானால் அதற்குமேல் அரை நாள் வாழ்க்கையும் எனக்கு வேண்டாம்” என்று சொன்ன தலைவன் (குறு.280) “தலைவியொடு வாழும் நாள்களே வாழும் நாள்கள் மற்றவையெல்லாம் பதடி நாள்கள்” என்று சொன்ன தலைவன் (குறு.323) இவனையே நம்பி பெற்றோரை விட்டு நீங்கி வந்து இவனைத்தவிர வேறு யாரும் இல்லாதவளான (குறு.115) தலைவன் அனுப்பிய பாணணிடம் தோழி **“காலையில் எழுந்து தேரில் பரத்தையர் வீடு சென்று திரும்பும் தலைவனைக் கண்டு தலைவி குழம்புகிறாள்”** என்கிறாள். தலைவியைப் பார்த்து இக்குடியில் பிறப்பது பெரிய துன்பத்தைத் தரக்கூடியதாகும் (குறு.45) என்றும் தண்துறை ஊரனுக்கு நீ பெண்டினை ஆயின் பலவாகுக உன் நெஞ்சில் துன்பம் சிலவாகுக நீ துஞ்சும் நாட்கள் என்கிறாள் (குறு.91) ஆயினும் தலைவனிடம் **“நீ எமக்கு இன்னாதன பல செய்யினும் நீ இல்லாமல் வாழ வல்லவர்கள் அல்ல நாங்கள்”** என்கிறாள் (குறு.309). தலைவி ஒருவாறு ஊடல் தீர்ந்து “செல்வம் நிறைந்த வீட்டில் பல கடமைகள் பூண்ட பெருமுதுப் பெண்டிராகிய நமக்கு ஊடலால் துன்பப்படும் இவ்வேளையில் அவர் இன்னாதவர் என்று சொல்லும் இச்சொற்கள் என்ன பயன்தரும் தோழி” என்று தோழியைக் கேட்கிறாள் (குறு.181). ஊடல் தீர்ந்து தலைவனுடன் சேர்ந்து பிறகு தலைவி தோழியைப் பார்த்து “தோழியே! தலைவன் கொடிய செயலைச் செய்துவதும் போது கூட முகம் திரியாது கடவுட் கற்போடு அவனைப் பேணி வரவேற்கிறாயே நீ மடவை என்று என்னைச் சொல்லாதே. சான்றோர் அவர்முன் பிறர் புகழ்வதையே நாணுவர் பழியை எப்படித் தாங்குவர்? அதனால்தான் என்கிறாள் (252). அன்பு வாழ்க்கை மறுபடியும் தொடங்குகிறது. தலைவன் தன் மகனை அணைத்துக்கொண்டு நிலவில் குறுங்கட்டிலில் படுத்திருக்கிறான். அவன் முதுகுப்புறத்தைத் தழுவிக்கொண்டே இம்மை மாறி மறுமையாயினும் நீ தான் என் கணவன் நான் தான் உன் நெஞ்சு நிறைந்த மனைவி என்கிறாள் தலைவி (குறு.49) குறுந்தொகை காட்டும் அக வாழ்க்கையின் குறுகிய வடிவம் ஆகும்.**மனித மனத்தின் ஆழமான நீங்காத உணர்வு அழுகை ஆகும். நனவிலி உள்ளத்தின் ஆழமான பகுதி இதை உள வெளிப்பாடுகளைக் கொண்டு கண்டறியலாம். “ஒவ்வொரு உள வெளிப்பாடு அகநிலையின் ஒட்டுமொத்த வெளிப்பாடு ஆகும். உள்ளத்தைப் பகுப்பாய்வு செய்வதன் மூலமாக நனவிலியை அடையாளம் காணலாம் என்கிறார் ஃபிராய்ட் “உளச் செயற்பாடுகள், இயக்கங்கள், படிமுறைகள் எல்லாம் பாலுணர்ச்சியின் விளைவுகளே” ( பிராய்டு பக்.29) “ஒட்டு மொத்த அகநிலையின் செயற்பாடுகள் அனைத்தையும் செய்வது ஈகோ” (பக்.40)** தலைவியின் உடல்மெலிவைக் கண்டு செவிலியும் நற்றாயும் குறி கேட்க, குறி சொல்பவள் அவளுடைய பாட்டின் இடையே தலைவனுடைய குன்றத்தைப் வைத்து பாடவே, இது தான் தக்க சமயம் என்று “அகவன் மகளே அகவன் மகளே” (குறு.23) மீண்டும் அந்த குன்றத்தைப் பற்றிப் பாடு என்கிறாள். இதற்கு அறத்தோடு நிற்றல் என்று பெயர். திரும்ப திரும்ப ஏன் பாடச் சொல்கிறாள் என்று தாயர்கள் ஐயம் கொள்கின்றனர். குன்றத்து வேலனை அழைத்து வெறியாட்டு நடத்தி ஆட்டுக்குட்டியை அறுத்து அதன் இரத்தத்தைத் தலைவியின் நெற்றியில் தடவி முருகு தலைவியை அணங்கியுள்ளது என்கிறான் வேலன். அச்சமயத்திலும் தோழி வேலனே சினம் கொள்ளாதே. ஆட்டுக்குட்டியை வெட்டிப் பலிகொடுக்கும் பலி அந்த தலைவனைப் போய் சேர வேண்டும் என்கிறாள். அய்யம் முற்றிய பெற்றோர்கள் தலைவியை இற்செறிப்பு செய்ய ஊரில் அலர் தோன்றுகிறது. (குறு.302) காவல் மிகுந்த பின் தலைவியின் உடலில் வேறுபாடு கண்டு

இது பால் உணர்ச்சியின் ஆணை வரையறை செய்து இது நடந்துவிட்டது என்பதை தவிர அவருடைய தகுதியை அறிய நாம் யார்? நீல மலரை நோக்கும் போதெல்லாம் நான் எவ்வளவு கூறினாலும் அதற்கு அவள் பொருந்தாதவளாய் உள்ளத்தின் உள்ளே வருந்தி கண்ணீர் விடுகிறாள் என்று தோழி கூற (குறு.366) அவன் யார் என்பதை செவிலி தெரிந்து விடுகிறாள். இனிமேலும் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பது தக்கது அன்று தோழி தலைவனுக்கு அறுவுறுத்துகிறாள் “பரிசுப் பொருள் ஈட்டு வருகிறேன். செல்லும்போது” வாடையே பாம்பின் தோல் தொங்குவது போல் தோன்றும் வெள்ளிய அருவிக்கு அருகில் இருப்பது தான் தலைவியின் ஊர் அவளைத் துன்புறுத்தாமல் காப்பாற்றுவாயாக என்று வாடையை கேட்டு கொள்கிறான் (குறு.235) மாலையை எப்படியாவது நீந்தினாலும் என்ன பயன்? இரவு என்னும் வெள்ளம் கடலைவிடப் பெரியதாக எதிரில் நிற்கிறதே” என்றெல்லாம் தோழியிடம் கூறி மெலிகிறாள் சென்ற இடத்தில் தலைவனுக்குத் தன்னைப் பற்றிய நினைவே வராதா என்று ஏங்குகிறாள் (குற.16,67)மாலை நேரம் அவளை மருளவைக்கிறது. மாலை வருவதற்கு முன்பே அது தரப்போகும் துன்பத்தை யெண்ணி அழுங்கிறாள். “அவரோடு இணைவதற்குமுன் மாலையை நான் அறிவேன், ஆனால் அது இவ்வளவு வருத்தம் தரத்தக்கதென்று நான் அறியேன் (குறு.352,386). அவர் சென்ற நாட்டில் துன்பம் தரும் இந்த மாலை கிடையாதோ (குறு.46,330) ஆண் மான் தன் பிணையைத் தழுவியவாறு புதர் மறைவில் மறையவும் யானை தன் இணையான பிடியானையோடு மலைப்பக்கம் சேரவும் மாலை வந்து விட்டதே (குறு.319) ஆண் புறா பலமுறை தன் பெட்டையை அழைத்து இமைக்கும் நேரத்தில் இன்பம் நுகர்கின்றதே (குறு.387).

**முடிவுரை**

குறுந்தொகையை ஆராயும் போது தோழி மதிநுட்பம் நிறைந்தவளாகவும், சமூகத்துடன் இணங்கி சமூக மரபுகளைக் காப்பவளாகவும், தலைவியின் உள்ளப் போராட்டங்களையும், முறிவுகளையும் தீர்த்து வைப்பவளாகவும் உளவியல் கூறுகளை நிரம்ப பெற்றவளாகவும் படைக்கப்பட்டிருக்கிறாள். குமரப் பருவத்தினரின் நடத்தை மாற்றங்கள், உளப்போராட்டங்கள், உள்ள முறிவுகள், மனவெழுச்சியின் தீவிர வெளிப்பாடு, சமூகவியல்பு வளர்ச்சி போன்ற குமரப்பருவ வெளிப்பாடுகளே குறுந்தெகைப் பாடல்களில் விரவி காணப்படுகின்றன. ∴பிராய்டின் உளவியல் கோட்பாட்டின்படி இலக்கியப்படைப்புகளையும் அவற்றைப்படைத்த, படைக்கிற படைப்பாளிகளின் உணர்வுகளையும் ஒப்பிட்டுப்பார்த்தால் படைப்பிலக்கியத்திற்கும் சமுதாய மற்றும் இயற்கைச் சூழலுக்கும் ஒரு இறுக்கமான தொடர்பு இருக்கிறதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது. சுருங்கக் கூறினால் ஒரு சமுதாயத்தின் முழுமையான மனப்பான்மைக்கும். புரிந்துணர்வுக்கும் அந்தச் சமுதாயத்தைச் சுற்றி இருக்கிற ஒவ்வொரு கூறுகளுக்கும் இடையே இடைவிடாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கிற உரையாடல்களின் வெளிப்பாடே படைப்பிலக்கியம். சமுதாயத்திற்கும் சூழலுக்கும் நடைபெறுகிற இந்த உரையாடல்களை ஒவ்வொரு படைப்பாளியும் அவரவர் ஆழ்மனக் கனவு, அந்தத் தாக்கத்தால் ஏற்படுகிற மனநிலை, நிகழ்கால அனுபவம் முதலியவற்றின் அடிப்படையில் நோக்கும் போது, வெளிக்கொணரும் போது வெவ்வேறு விதமான இலக்கியப்படைப்புகள் அந்தந்தக் காலப்பகுதிகளுக்கேற்ப உருவாக்கப்படுகின்றன.

**துணைநூற்ப்பட்டியல்**


1. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, க்ரியா, சென்னை. 2004
2. தி.கு. இரவிச்சந்திரன், ∴ப்ராய்ட் யூங் லக்கான் அறிமுகமும் நெறிமுகமும் அடையாளம் பதிப்பகம். தமிழ்நாடு.
3. கைலாசபதி.க, சமூவியலும் இலக்கியமும், நியூ செஞ்சரி புக்ஹவுஸ், சென்னை, 1988
4. சிவத்தம்பி.கா, இலக்கியமும் கருத்துநிலையும், தமிழ் புத்தகாலயம், சென்னை, 1982
5. The Little Lifco Dictionary, The Little Flower Co, Chennai, 1999.


பெரிய மலர் மாலைகள் சார்த்தி வணங்கப்பட்டுள்ளன.

# திருமந்திரம் உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகள்

***முனைவர் ந.பிரதீபா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பூசாகோ அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை.

**முன்னுரை**

பக்தி இலக்கியங்களில் தனியொரு மந்திரமாக திகழ்வது திருமந்திரமாகும். இவற்றுள் திருமூலர் வாழ்வியல் மேன்மைகளை உணர்ந்து உலக வாழ்வு நிலையற்ற தன்மையது. யாக்கை நிலையற்றது. செல்வமும் நிலையற்றது. ஐம்புலன்களும் இன்ப நுகர்ச்சியில் சிக்கி அல்லல்ப்படுகின்றன. இதனை விடுத்து எங்கும் நீக்கமற நிறைந்து இருக்கும் இறைவனின் திருவடி பாதத்தை தொழுது வீடு பேற்றினை அடைவதே உயரிய வாழ்வாகும் என்பதனைத் தமது பாடல்களில் எடுத்தியம்பியுள்ளார். இவ்வாழ்வியல் சிந்தனைகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திருமந்திரம்**

சைவத் திருமுறை பன்னிரண்டனுள் பத்தாம் திருமுறையெனப் போற்றப்பெறுவது திருமந்திரமாகும். இந்நூலை அருளிச் செய்தவர் சிவயோகியராய் விளங்கிய திருமூலர் ஆவார். இவரை நம்பியாரூரர்,

**'நம்பிரான் திருமூலன் அடியார்க்கு அடியேன்'** என திருத்தொண்டத் தொகையில் போற்றியுள்ளார். நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியில்,

**"அடிமன்ன வைத்த பிரான் மூலனாகிய அங்கணனே"** (பா.37, வரி.4)

எனக் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. **"முன்னிய அப்பொருண்மாலைத் தமிழ் மூவாயிரஞ்சாத்தி"** என சேக்கிழார் வாய்மொழியாலும் **"மூலனுரை செய்த மூவாயிரந் தமிழ்"** என இந்நூல் செய்தவர் வாய்மொழியாலும் அறியப்படுகிறது. இந்நூலினுள் பிறவியாகிய துன்பத்தினின்றும் நீங்கி வீடுபெறுதலே அறிவுடைய மக்களின் கடமையும் செயலுமாகும். அந்நிலை சிவனையடைந்தாலன்றிக் கைகூடாது. சிவன் ஒருவனே எல்லார்க்குந் தலைவன்.

சிவபெருமான் உயிர்கள் மேல் வைத்த பெருங்கருணையால் மன்னுயிர்கள் பாசப்பிணிப்பினின்றும் நீங்கி வீடுபேறடைதற் பொருட்டு வேத சிவகாமங்களை அருளிச் செய்துள்ளார் என்பதைத் திருமந்திரம் இயம்பிச் செல்கிறது.

**நிலையாமை**

ஆழ்வார் நாயன்மார் பாடல்களில் துறவறம் பழிக்கப்படவில்லை. இல்லறம் வெறுக்கப்படவில்லை. நிலையாமை உணர்த்தப்படுகிறது. கலைகளும் போற்றப்படுகின்றன. இந்த உலக இன்பங்களை நுகர்ந்த இறைவனிடத்தில் பக்தி செலுத்தலாம் என்ற தெளிவைப் பக்தி இலக்கியம் தருகிறது. உலக வாழ்வைக் கண்டு அஞ்சும் அச்சம் நீங்கி மக்கள் கூடி வழிபாடு செய்து பக்தியுணர்ச்சியில் திளைத்திருக்க ஊக்கமூட்டுகிறது. இவற்றுள் இளமை, யாக்கை, செல்வம் என யாவும் சில காலம் இருந்து மறைவனவே ஆகும். இந்த உண்மைப் பொருளாகக் கருதிப் பற்று வைத்தல் கூடாது. இறைவனே நிலைத்த பொருள் ஆவான். அவன் மீது அன்பு செலுத்துதலே உண்மையான நிலைத்த இன்பத்திற்கு வழிவகுக்கும் என்ற கருத்தையும் கூறிச் செல்கிறது.

**யாக்கை நிலையாமை**

மக்கள் பிறப்பு அது நிலையற்றுப் போகக் கூடியது. உடல் உள்ள போதே முக்திப் பயனை பெறவிரைதல் வேண்டுமன்றி அவ்வுடம்பையே பொருளாகக் கருதி அதனிடத்து பற்றுச் செய்தல் கூடாது என்பதை திருமூலர்,

**"சீக்கை விளைந்தது செய்வினை மூட்டிற்ற**
**ஆக்கை மிகுந்த தலகு பழுத்தது**

**மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டு போய்க்**
**காக்கைக்கு வுண்பலி காட்டிய வாறே"** (பா. 146)

சீக்கை என்னும் வாயொளி உண்டாயிற்று. செயற்படுகின்ற உறுப்புக்கள் மடிந்து கிடையாகிவிட்டன. உடம்பு உயிர்த் தொடர்பை நீக்கிவிட்டது. எலும்புகள் வீங்கிவிட்டன என்று பல அறிகுறிகளைச் சொல்லி, மூக்கில் கைவைத்துப் பார்த்து ஐயம் நீங்கி, மூடி எடுத்துக் கொண்டு போய் ஊரார் காக்கைக்குப் பலி ஊட்டிய அளவில் முடிவதாகும். உடம்பின் நிலைமை. இதனை நாலடியார்,

**"மலையிசைத் தோன்றும் மதியம் போல் - யானை**
**தலைமிசைக் கொண்ட குடையார் - நிலமிசைத்**
**துஞ்சினார் என்றெடுத் தூற்றப்பட் டாரல்லால்**
**எஞ்சினார் இவ்வுலகத்தில்"**

எத்துணைப் பெருஞ்செல்வத்தாராயினும் இறந்தார் என்னும் இகழ்ச்சியைப் பெறாதொழிந்தவர் இல்லை என்று குறிப்பிடுகிறது.

**செல்வம் நிலையாமை**

உடம்போடு இயைபுடைய செல்வத்தைத் தன்னோடு இயைபுடையதாகவே மயங்கி அது காரணமாக எழும் செருக்கில் ஆழ்ந்து அவனை மறத்தலை நீக்குதற் பொருட்டு உடம்பு வழியாக வரும் அவ்வியைபுதானும் அவ்வுடம்புள்ள துணையும் முற்றநிற்பதன்றி இடையே அற்றொழிவதாம் என செல்வத்து நிலையாமை எடுத்துரைக்கிறார் திருமூலர்.

**"இயக்குறு திங்கள் இருட்பிழம் பொக்கும்**
**துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா**
**மயக்கற நாடுமின் வானவர் கோனைப்**
**பெயற்கொண்டல் போலப் பெருஞ் செல்வ மாமே"** (பா. 168)

வானத்தின் இயங்குதலைப் பொருந்திய நிலவு நிலைத்து நில்லாமல் இருட்பிழம்பு போல்வதாகிவிடுகின்ற துன்ப நிலையையே உடையது செல்வம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஆதலின், செல்வச் செருக்கில் ஆழ்தலை விடுத்து, துறக்கச் செல்வத்தினரான தேவர்கட்கும் அச்செல்வத்தை அவர்பால் வைத்தலும், வாங்குதலும் உடைய தலைவரையே சிவபெருமானை நினையுங்கள். அவன் தன்னை நினைப்பவர்க்குக் கார்காலத்து மேகம் போலப் பெருஞ் செல்வத்தை ஒழியாமல் தருபவனாகின்றான். இதனையே வள்ளுவர்,

**"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவினிந் தற்று"**

செல்வம் நில்லாது நீங்கும் இயல்பினது எனக் கூறியுள்ளார்.

**இளமை நிலையாமை**

யாக்கை நிற்ப செல்வமும் நின்றதாயினும் இவ்விரண்டாலும் பயன் கொள்ளுதல் இளமைப் பருவத்தே அல்லது அது கழிந்தபின் கூடாதாகவானும் அவ்விளமைதான். யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமைகளிலும் முற்பட வருதலும், இளமை நீங்கிய வழி உலக இன்பத்தையேயன்றிச் சிவனது திருவடி இன்பத்தையும் பெறுதல் இல்லாமல், 'இளமைச் செருக்கில்' ஆழ்ந்து சிவனை மறவாது, இளமைக் காலத்தே சிவனை அடையுங்கள் என்று திருமூலர்,

**"ஆண்டு பலவுங் கழிந்தன அப்பனைப்**
**பூண்டுகொண் டாடும் புகுந்தழி வார்இல்லை**
**நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினுந்**
**தூண்டு விளக்கின் சுடரறி யாரே"** (பா. 177)

மக்கள் பிறந்தபின் சில ஆண்டன்றிப் பல ஆண்டுகள் கழியினும், சிவபெருமானை அறிதலைக் கடனாகக் கொண்டு முயன்று அறிகின்றவர் யாரும் இல்லை. அவ்வாற்றான் இது காறும் நீடுசென்ற காலங்கள் இனியும் நீடு செல்லுமாயினும், அவர் அவனை அறிய முயல்வாரல்லர் என்று உலகரது அறியாமை கூறுதல் போல ஆண்டுதோறும் இளமை கழிந்து செல்லுதல் கூறப்பட்டது. இதனை திருநாவுக்கரசர்,

**"புள்ளிருக்கு வேளூ ரானைப் போற்றிதே**
**போக்கினேனே"** (தி.6.ப.54, பா.9)

**"முன்ன மேநினை யாதொழிந் தேன்உனை**
**இன்னம் நான்உன் சேவடி ஏந்திலேன்"** (தி.5, ப.51, பா.1)

எனப் போற்றிப் பாடியுள்ளார்.

**உயிர் நிலையாமை**

இளமை கழிந்து முதுமை வந்த பொழுதாயினும் அல்லது இறக்கும் காலத்திலாயினும் செய்ய வேண்டுவனவற்றைச் செய்து கொள்வோம் என்று உயிர் நிலையாமைக் குறித்து திருமூலர்,

**“மத்தளி ஒன்றுளே தானம் இரண்டுள**
**அத்துள்ளே வாழும் அமைச்சும் அஞ்சுள்ளன**
**அத்துள்ளே வாழும் அரசனும் அங்குளன்**
**மத்தளி மண்ணாய் மயங்கிய வாறே”** (பா. 188)

மத்தளி **=** மண்**+**தளி. தளி – கோயில். மண்ணலாகிய கோயில் ஒன்று உண்டு. மூச்சுக் காற்றை உள்ளுக்கிழுத்தலாகிய பூரகமும் வெளிவிடுதலாகிய இரேசகமும் எனத் தாளங்கள் இரண்டுள்ளன. உடலில் வாழும் அரசர் ஐவர். மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐந்திடங்களைத் தமக்குரிய தலைநகராகக் கொண்டு வாழும் சிற்றரசர்கள் ஐவர் உள்ளனர். சிற்றரசர்களை அடக்கியாளும் பேரரசாகிய ஆன்மாவும் உள்ளது.

மாயையாகிய மண்ணின் காரியமாய்ப் பரிணாமப்பட்டு நின்றவுடல் மீண்டும் தங்காரணமாகிய மாயையாய்க் கழிந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

**“ஒரு புலன் நுகரும் போதவ் கொன்றிலை ஒன்றன் பாலும்**
**வரு பயன் மாறி மாறி வந்திடும் எல்லாம் மாறும் ஒரு பொழுது”** (சூ. 2, 94)

என்று சிவஞான சித்தியார் உணர்வு நிலையாமையை இனிது விளக்குகிறது.

**முடிவுரை**

மனித மனம் பண்படாத நிலையாலும் அறியாமையாலும் தான் உலக வாழ்வில் தங்களைப் பிணைத்துக் கொண்டு வாழ்க்கையை மாய்த்துக் கொள்கின்றனர். இந்நிலையற்ற தன்மையை உணர்ந்து இறைவனின் திருவடியை உய்ந்து வீடுபேற்றினை அடைவதே வாழ்வியல் நெறியாகும் என்றே திருமூலர் பாடியுள்ளார்.

# வழிபாட்டு முறைகளில் சமூக ஒற்றுமைகள்

*முனைவர் மா.ராமசாமி, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோபி.

**கோயில்களின் வகைகள்**

ஆதியில் மக்கள் மரத்தடியில் இறைவனை வழிபட்டார்கள். பின்னர் மண்ணால் உருவம் செய்து கோயிலில் வைத்து வழிபட்டார்கள். பின்னர் சுட்ட மண்ணாலும் கோவில்கள் உருவாகின. காலப்போக்கில் இவை வளர்ச்சியடைந்தன. பெரும்பாறைகளைக் குடைந்து குடைவரைக் கோயில் எனப் பெயர் பெறுகின்ற கோயில்கள் உருவாயின. அதன் பின்னர் கற்களை உடைத்து அளவாக்கி அவற்றைக் கொண்டு அடுக்கிக் கட்டப்பட்ட கோயில்கள் சோழர் காலத்தில் மிகுந்தன.

இவ்வகையான கோயில்கள் பெருந்தெய்வக் கோயில்களாகவே அமைந்தன. அதே சமயம் நாட்டார் சமயக் கோயில்களும் வளர்ச்சி பெற்றன. அவ்வளர்ச்சியின் மூலம் சமுதாய ஒற்றுமையும், அதன் வழி வழிபாட்டு முறைகளும் எவ்வாறு அமைந்தன என்பதனைக் காணலாம்.

**சமூக அமைப்பு**

ஒரு சமூகத்தின் விழாக்கள், சடங்கு சம்பிரதாயங்கள், இன்னும் பிற நிகழ்த்துதல்கள் அனைத்தும் மிக முக்கியமானவை. இவை யாவும் தொன்று தொட்டு வருபவை. அவை சமூகத்தின் கூட்டை எடுத்துரைப்பதாகும். காலங்காலமாகச் சமூக நினைவுகளைக் கூட்டாக வெளிப்படுத்துவதாகும். இவற்றில் சமூகத்தின் வரலாறும் வாழ்வும் இரண்டறக் கலந்து வெளிப்படுகின்றன. பால் கன்னர்டன் எழுதியுள்ள சமூகங்கள் எவ்வாறு நினைவுபடுத்துகின்றன எனும் ஆய்வில் சமூகங்களின் ஞாபகப்படுத்தும் முறைகளை ஆராய்கிறார். சமூகங்கள் அவை சேமித்து வைத்திருக்கும் கூட்டு நினைவுச் சடங்குகள், விழாக்கள் மூலம் வெளிப்படுத்துவதோடு அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு உதவுகின்றன என்கிறார். தமிழ்ச் சமூகம் போன்ற நீண்ட நெடிய பண்பாட்டு வரலாற்றைக் கொண்ட சமூகங்களில் இத்தகைய தன்மைகளை நாம் நன்றாகவே உணர முடியும். சமூகத்தின் புனிதமான தளத்தில் இத்தகைய நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன,

**சமூகப் பிரிவுகள்**

காலப்போக்கில் தமிழ்ச் சமூகத்தில் சாதிப் பிரிவுகள் ஏற்பட்டன. ஒரு தாய் மக்களுக்குள் ஏற்றத் தாழ்வுகள் உண்டாயின. இருந்த போதிலும் வழிபாடு செய்வதில் பெரும்பாலும் இணைந்தே இருக்கின்ற தன்மைகளைக் காணமுடிகிறது.

கொங்கு நாட்டிலும் சாதிப்பிரிவுகள் வேரூன்றி இருந்த போதிலும், குல தெய்வ வழிபாட்டு முறைகளில் அனைத்துச் சாதியினரும் பங்கு பெறுவதைக் காணமுடிகின்றது.

**கொங்கு நாட்டுச் சாதிப் பிரிவுகள்**

கொங்கு நாடு தனித்த தன்மையுடைய நிலப் பரப்பாகும். வேற்றுப் பகுதிகளிலிருந்து இங்கு குடி பெயர்ந்தவர்களையும் ஏற்று உரிமையளிக்கும் போக்கைக் கொங்குக் கல்வெட்டுக்களில் காணலாம். கொங்கு நாடார், கொங்கு நாவிதர் எனத் தனிச்சிறப்புடன் சில சாதிப் பிரிவுகள் சுட்டப்படுகின்றன. கொங்குக் குலதெய்வக் கோயில் வழிபாட்டில் கொங்குச் செட்டியார்கள் பங்கு மிக அதிகமாகக் காணப்படுகிறது. திருப்பணிகளுக்கு உதவியும், பொருள் தந்து சிறப்பித்தும் வாழ்ந்தவர்கள் வணிகப் பெருமக்களாகிய செட்டியார்கள். கொங்கு கல்வெட்டுக்களில் செட்டியார்களும், கம்மாளர்களும் அதிகம் இடம் பெறுகின்றனர். மதுரைப் பகுதியிலிருந்து குடிபெயர்ந்து கொடுமணல் பகுதியில் பரவிய தேவர் சமூகம், வன்னியரில் படையாச்சி, தாழ்த்தப்பட்ட சமூகம் எனப் பலரும் கலந்தே குல தெய்வக் கோயில் வழிபாட்டு முறைகளில் இடம் பெறுகின்றனர்.

**அங்காளிகள், பங்காளிகள்**

ஒரு கோத்திரத்திற்கு உள்ளே அங்காளிகள், பங்காளிகள் என்று இரண்டு வகையினர் உண்டு. அங்காளிகள் என்றால் அங்கத்துடன் ஒட்டிப் பிறந்தவர்கள். அதாவது கூடப்

பிறந்தவர்கள். பங்காளிகள் என்றால் சித்தப்பா பிள்ளைகள். பெரியப்பா பிள்ளைகள். ஒன்றுவிட்ட இரண்டு விட்ட என்பார்களே அவர்கள். இதுபோல அங்காளிகளும், பங்காளிகளும் சேர்ந்து வழிபடுவதுதான் குல தெய்வ வழிபாடு.

**குலதெய்வங்கள்**

திருமால் (பெருமாள்), மகாலட்சுமி, கன்னிமார் மற்றும் அங்காள பரமேஸ்வரி அம்மன் போன்ற தெய்வங்கள் சில கோத்திரத்தவர்க்கு குல தெய்வங்கள் ஆகும். பெரும்பாலும் 24 மனை தெலுங்கு செட்டியார் கோத்திரங்களில் குல தெய்வம் என்பது கடவுளாக இல்லாமல் குடும்பத்தில் வாழ்ந்து மறைந்த முன்னோர்களாக கூட இருப்பார்கள். உதாரணமாக குங்குமகாளியம்மன் பெரியநாயகி அம்மன், அக்கமார் ஈஸ்வரி, அங்காளபரமேஸ்வரி, சின்னம்மன், பாலாயி, பாப்பாயி, வீரமாத்தியம்மன் மற்றும் பல சிறு தெய்வங்கள்.

**கோயில் கல்வெட்டுகள் - சிறப்புகள்**

இயற்கையை வணங்குவதில் துவங்கிய தெய்வ வழிபாட்டு நெறி, அதற்கெனத் தனியிடம் கொண்டு கோயில்களாக வளர்ந்தன. தொடக்கத்தில் மண் தளிகளாகவும் கூரை வேயப்பெற்றனவாகவும் திகழ்ந்த கோயில்கள், கால வளர்ச்சியில் குடைவரைகளாகவும், கற்றளியாகவும் உருப்பெற்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை குடை வரைகளும், கற்றளிகளும் பல்லவர், பாண்டியர், அதியர் போன்றவர்களால் சமைக்கப் பெற்றன. பின் வந்த சோழர்கள் இக்கலைக்கென ஒரு பொற்காலத்தையே உருவாக்கினார்கள். சோழர்களுக்குப் பிறகு விசயநகரப் பேரரசர்களும், அவர்களது ஆளுநர்களான நாயக்கர்களும் பழைய கலைமரபுகளுக்குப் புதிய உத்வேகம் அளித்தனர். இவ்வாறு வளர்ச்சி பெற்ற கோயில் கலையின் ஓர் அம்சமாகக் கல்வெட்டுக்களும் இடம் பெற்றன. மன்னர்களின் பண்டாரமாக, கல்வி நிறுவனமாக, மக்கள் கூடுமிடங்களாக விளங்கிய கோயில்களில் தங்களில் பெயர்கள் இடம் பெற, என்றும் மக்கள் நினைக்கும்படிக் கல்வெட்டுக்களை அமைத்தனர்.

**கல்வெட்டுக்கள்**

தமிழ்நாட்டில் கோயில் இல்லாத ஊரே இல்லை எனலாம். ஊர் நிர்வாகங்கள் அனைத்தும் கோயில்களிலேயே நடைபெற்றன. அதனால் பல அரிய செய்திகளைத் தருகின்ற கல்வெட்டுகள் பெரும்பாலும் கோயில் சுவர்களிலேயே காணப்படுகின்றன.

கல்வெட்டுக்களில் காணப்படும் செய்திகளைப் பெரும்பாலும் ஐந்து பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. கல்வெட்டின் தொடக்கம் அதாவது மங்கலவாசகம்,
2. கல்வெட்டு எழுதுப்பட்ட காலம்
3. கல்வெட்டுச் செய்தி
4. கையெழுத்துக்கள்
5. முடிவு அதாவது ஓம்படைக்கிளவி.

கல்வெட்டின் தொடக்கத்தில் ஸ்வஸ்திஸ்ரீ (மங்களம் உண்டாகட்டும்) என்னும் சொல்தான் பெரும்பாலும் காணப்படுகிறது. பருத்தியூர் பெரிய நாயகியம்மன் கோவில் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் ஸ்வஸ்திஸ்ரீ என்ற மங்கலச் சொல்லுடனே ஆரம்பிக்கின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**நடுகல்**

நாட்டிற்கோ, ஊருக்கோ இடுக்கண் ஏற்பட்ட காலத்தில் தன் இன்னுயிரை மதியாது தோள் வலி காட்டி அவ்விடுக்கண் களைந்தவனுக்கு அவன் உயிருடன் இருக்கும் போதே நினைவுச் சின்னம் ஏற்படுத்துவது தமிழக மரபுகளில் ஒன்றாகும். களத்தில் மாண்டவனுக்கும் வீரக்கல் எடுக்கப்பட்டதைப் பல சான்றுகளால் அறிய முடிகிறது.

போர்க்களத்தில் இறந்து வீழ்ந்த மறவனின் உடலின் மேல் கற்களை அடுக்கி அவ்விடத்திலேயே நல்லடக்கம் செய்தனர். இவ்வாறு கற்குகைகளால் மூடப்படுவதைக் கற்பதுக்கை, கற்றிட்டை என்றெல்லாம் குறிப்பிட்டனர். போர்க்களத்தில் அம்புபட்டு ஒரு வீரன் இறந்தால் அவனது உடலைக் கற்குவியலால் மூடி மறைத்தனர். இக் கற்பதுக்கையின் அருகிலிருந்த ஓர் உன்ன மரத்தின் மீது கழுகுகள் அமர்ந்து அவற்றுக்கு உணவு கிட்டாமல் போய்விட்டதற்காக வருந்தி நிற்பதாக ஒரு காட்சியை இரும்பிடர்த்தலையார் எனும் பெரும்புலவர் தம் புறநானூற்றுப் பாடலிலே காட்டுகிறார்.

> **“அம்புபட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்**
> **திருந்துசிறை வளைவாய்ப் பருத்திருந்து உயவும்**
> **உன்ன மரத் துன்னருங் கவலை”**

என்பதே அப்பாடலாகும்.

“ஆளழித்து உயர்ந்த
அஞ்சுவரு பதுக்கை”

என இளங்குடி குன்ற நாடனும், குறிப்பிடுவதால் சங்க காலத்தில் போர்க்களங்களில் வீரர்கள் மாய்ந்த இடத்திலேயே கற்பதுக்கைகளாகிய கற்குவியல்களால் மூடி ஈமக்கடன் செய்தனர் என்பதை அறிய முடிகிறது. இவ்வாறான கற்பதுக்கைகள் பருத்தியூர் பெரியநாயகியம்மன் திருக்கோவிலின் பின்புற மேட்டுப் பகுதியில் ஏராளமாக அமைந்துள்ளன. காலப் போக்கில் விவசாயத்திற்காக சீர்திருத்தப்பட்ட நிலங்களில் கற்கள் அப்புறப்படுத்தப் பட்டாலும், பல கற்பதுக்கைகள் கல் வட்டத்துடன் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

**வேளாளர் தோற்றமும் குடியேற்றமும்**

**வேளாள புராண கதைச்சுருக்கம்**

திருக்கயிலாயத்தில் சிவப்பெருமானின் திருமுன்பு திருமாலும், நான்முகனும் கூடியிருந்த சபையில், நான்முகபிரம்மா ஒரு விண்ணப்பம் செய்தார்.

சிவப்பெருமானே, தங்களுடைய அருளா தேவர், அசுரர், மனிதர் மற்றைய உயிர்க்குலங்களையெல்லாம் சிருட்டித்து முடித்து விட்டேன். மனிதர்கள் செய்கின்ற யக்ஞங்களால், தேவர் முதலிய சீவர்கள் திருப்தியடையுமாறு ஆகமம் முதலிய மறைகளைத் திருவாய் மலர்ந்தருளினீர். அவர்கட்கு கந்தமூலம், பழம் முதலிய உணவுகளைத் தவிர, வேறு உணவின்றி மயங்குகின்றார்கள். அந்த மக்கட்கு தக்க உணவைக் கொடுப்பதற்கு தாங்கள் அருள்புரிய வேண்டும் என்றார்.

அப்போது அங்கிருந்த திருமாலை நோக்கி சிவபிரான், உம்முடைய கலையில் ஒன்றை, கங்கைக்கரையில் பிறப்ப வைப்பீர். அக்கலைக்கு மரபாளன் என்றும், வேளாளன் என்றும் பெயருண்டாகட்டும். அவனால் உலகெங்கும் உழவுத்தொழில் செழித்தோங்கட்டும். அந்த உழவுத்தொழிலால் உயிர்க்குலங்கள் ஓங்கி வளரட்டும் என்று உரைத்தருளினார்.

அங்ஙனமே யாகுக என்று திருமால் விடைபெற்று வருகையில் போதாயன முனிவரைக் கண்ணுற்றார். போதாயனர், உயிர்க்குலங்கள் உணவின்மையால் வாடுகின்றன. காக்கும் கடவுளாகிய நீங்கள் அவ்வருத்தத்தைப் போக்க வேண்டும் என்று திருமாலை வேண்டினார்.

சிவபெருமான் விருப்பப்படி என் கலையில் ஒன்று கங்கைக் கரையில் தோன்றும், அதற்கு மரபாளன் என்றும், வேளாளன் என்றும் பெயர் உண்டாகும். அவனுக்குக் குலகுருவாக நீரே இருந்தருளி உலகை வாழ்விக்கச் செய்வீர் என்று பரந்ததாமன் திருவாய் மலர்ந்தார்.

போதாயன முனிவர், கங்காதேவியைச் சென்று சந்தித்தார். உன்னிடத்தில் அவதரிக்க உள்ள மரபாளனை தேவ உலகிற்கு அனுப்பு என்று கங்கை மங்கைக்கு ஆணையிட்டு விட்டு, தேவ உலகம் சென்று, இந்திரனைச் சந்தித்து, உன்னிடம் மரபாளன் வருவான் அவனைப் பேணிப்போற்றி வைத்திரு. நான் அவன் வந்த பின் வருவேன் என்று கூறிச்சென்றார்.

அப்படியே கங்கையில் அவதரித்த மரபாளனை கங்காதேவி இந்திரனிடம் அனுப்பி வைத்தான். இந்திரனிடம் சென்று மரபாளனைக் கண்ட போதாயனார் அவனுக்கு வேண்டும் கலைகளையெல்லாம் கற்பித்து இந்திரன் மகள் ஐந்திரியையும், குபேரனின் மகள் தாரணியாவதியையும் மரபாளனுக்கு மணம் முடித்து வைத்தார்.

வேளாண் மரபினரே புண்ணிய பூமியாகிய பாரத கண்டத்தில் சிறந்த தொண்டை மண்டலம், சோழ மண்டலம், பாண்டிய மண்டலம், கொங்கு மண்டலம், இலங்கை மண்டலம் ஆகிய இடங்கள் எங்கணும் பரவினர். இவ்வகை செய்தி வேளாள புராண நூலில் கூறப்பட்டுள்ளது.

இச்சிறப்புமிக்க வேளாளர் புராணத்தை அழகிய கவிதை வடிவில் ஆக்கித் தந்தவர் வீராட்சிமங்கலம் கந்தசாமிக்கவிராயர் அவர்கள். இது பெருங்காவியம் என்றும் போற்றக்கூடியது.

வேளாளர் புராணம் நூல் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்கள் முயற்சியால் சிறப்பான மறுபதிப்பாக வெளிவந்துள்ளது.

கம்மாளர் எனப்படும் ஆசாரிமார்கள், படையாச்சிக் கவுண்டர்கள், முத்துராசாக்கள் எனும் வலையர் இன மக்கள், தாழ்த்தப்பட்டோர் எனப் பலரும் கோவில் முறைமைகளில் பங்கு பெறுகின்றனர். பண்டாரங்கள் எனப்படுவோர் பூசை முறைகளை மேற்கொள்கின்றனர். மாசி சிவன் ராத்திரி எல்லாச் சமூகங்களும் கூடிக் கொண்டாடும் விழாவாகும். கடந்த இருபது ஆண்டுகளாக அமாவாசை அன்று அன்னதானம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில் பல இனத்தவர்களும், தானமளிப்பதில் பங்கு பெறுகின்றனர். பௌர்ணமி தோறும் சிறப்பு வழிபாடுகளும், அன்னதானமும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

# இயற்கையோடியைந்த இறைவழிபாட்டில் தோணிபுரத்தோன்றல்

***முனைவர் ச.பிரியா,** உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

**முன்னுரை**

மலர்தலை உலகில் மல்கிருள் அலக, நில உலகில் மக்கள் படும் அல்லல்கள் தீர, இறைவனைப் போற்றிப் பக்தி செலுத்தி வாழ்வாங்கு வாழ நன்னெறி வகுத்தவை சமயங்கள். இச்சமயங்களின் ஆணிவேராக விளங்குபவை வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகமங்கள் எனப்படும். ஆனந்தமயமான இறைவனை அனுபவித்து, அடி தொழுது, பரவிப்பாடி அனுபவிப்பது பக்தியாகும். இயற்கையின் எழிலில் இறைவனை ஒன்றுபடுத்தியும் பக்திப் பாடல்களைப் பாடியவர்கள் சைவத்தில் நாயன்மார்கள் ஆவார்கள்.

**அறுவகைச் சமயங்கள்**

ஆதிசங்கரர் வழிவகுத்த அறுவகைப்பட்ட சமயங்களுள் சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்யம், சௌரம் என இவை அமைந்துள்ளன. சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவது சைவம் எனப்படும். திருமாலை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் வைணவம், உமா தேவியாகிய சக்தியை வழிபாடு செய்வது சாக்தம், முருகப்பெருமானை முதல்வனாக ஏற்று வழிபடுவது கௌமாரம், வினாயகப் பெருமானை வழிபாடு செய்து போற்றுவது காணாபத்யம். சூரியனை வழிபாடு செய்வது சௌரம் எனப்படும் முனிவர்களும், அருளாளர்களும், ஆகம நெறியாளர்களும் வகுத்த வழிமுறைகளைக் கொண்டு ஆண்டாண்டு காலமாக இவை மண்ணுலகில் தழைத்தோங்கி அருள்மணம் பரப்புகின்றன.

**வேதத்தின் அடிச்சுவட்டில் அறுவகைச் சமயங்கள்**

> **"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க**
> **பூத பரம்பரை பொலிய புனிதவாய் மலர்ந்தழுத**
> **சீதவள வயற் புகலி திருஞான சம்பந்தன்**
> **பாதமலர் தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"**

என்பது பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் புராணத்தின் முதற்பாடல். 'வேதநெறி' என்று சேக்கிழார் குறிப்பிடுவது சைவசமயத்தின் ஆதாரம் வேதங்கள் என்பதாகும்.

**சிவனடியார்கள்**

> **"சைவத்தின்மேல் சமயம் வேறில்லை அதில்சார் சிவமாம்**
> **தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லெனும் செம்பொருள்**
> **வாய்மை வைத்த சீர் தேவாரமும் விளங்கு திருவாசகமும்**
> **உய்வைத்தரச் செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே"**

என்னும் பாடலில் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற சமயக் குருவர்கள் நால்வரின் சிறப்புகள் உரைக்கப்பட்டுள்ளமை காணலாம். இதனால் சைவசமயம் அடியார்களால் பெருமை பெற்று விளங்கியது என்பதைப் பரமனின் பக்தர் வாழ்வினைக் கொண்டு அறியலாம். இத்தகைய சிவனடியார்களின் பெருமை உரைப்பது பெரியபுராணம் என்னும் நூலாகும். இதன்கண் மணிவாசகரைத் தவிர்த்து ஏனை மூன்று அடியார்களின் வரலாறு அமைந்துள்ளது. மணிவாசகர் சுந்தரருக்குப் பிற்பட்டவர். ஆகையால் திருத்தொண்டத் தொகையில் சுந்தரரால் பாடப்படவில்லை. எனவே சேக்கிழார் சுந்தரரை அடியொற்றி பெரியபுராணம் பாடியதனால் தனக்கு முன் அவதரித்திருந்தாலும் மணிவாசகரைப் பற்றித் திருவிளையாடற்புராணம், திருவாதவூரார் புராணம் போன்றவை விளங்குகின்றன. எனவே சிவனடியாராய் விளங்கிய நால்வர் தமிழ்ப்பாடல்கள் நிறைந்த தேவாரமும், திருவாசகமும் சைவசமயத்தின் தூண்களாக அமைந்தவை. 'இறைவன் தொண்டருள் அடக்கம்' என்ற

கூற்றுப்படி மகேஸ்வரனை மாகேஸ்வரர்கள் வாயிலாக வழிபட்டார்கள். அடியார்களை வழிபட்டால் ஆண்டவனை வழிப்பட்டதற்குச் சமம் என்பதனைச் சைவ சமயம் புலப்படுத்துகின்றது.

"அடியேன் உன் - அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" என்று மாணிக்கவாசகர் பாடுகின்றார். "இறைவனே தொண்டருள்ளத்து அடக்கம். தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிது" என்பது ஔவையார் கூற்று. "தொண்டரொடு கூட்டுகண்டாய்" என்று தாயுமானவரும், அபிராமி பட்டரும் உரைக்கின்றனர். இவ்வாறு தொண்டரோடு மிகவும் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

**வம்பறா வரிவண்டு மணநாற மலரும்**
**மதுமலர் நற் கொன்றையான் அடியலாற் பேணா**
**எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கு மடியேன்**
**ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்**
**நம்பிரான் திருமூலர் அடியார்க்கும் மூர்க்கர்க்கும் அடியேன்**
**நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்**
**அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்**
**ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே"**

என்ற திருத்தொண்டத்தொகையில் திருஞானசம்பந்தப் பெருமானின் சிறப்பை உரைத்து மற்றும் சில சிவனடியார்கள் 'அடியார்க்கும் அடியேன்' என்று வணங்கி மகிழ்கின்றார்.

வடமொழியாளர் இத்தகைய அடியார் வாழ்க்கையை "சத்சங்கம்" என்பார்கள். இதனைப் பட்டினத்தடிகள் "நல்லார் இணக்கம்" என்று குறிப்பிடுகின்றனர்.

**"நல்லாரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே**
**அல்லாது வேறுநிலையுளதோ அகமும் பொருளும்**
**இல்லாமலும் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்**
**எல்லாம் வெளி மயக்கே இறைவா கச்சியேகம்பனே"**

என்பது திருவேகம்பமாலைப் பாடலாகும். இந்நல்லார் இணக்கமே சிவனடியார்களின் தனிப்பெரும் பண்பு. இதனைச் சேக்கிழார் திருக்கூட்டச்சிறப்பு என்று பெருமைப் படுத்துவார். அடியார்கள் நிலைபெற்றுள்ள இடங்களில் திருநீற்றொளியின் தூய்மையும் மணமும் கமழும், ஐந்தெழுத்தின் மந்திரவோசை கேட்கும் அது பாற்கடல் போல் திகழும் என்கிறார். சிவத் தொண்டிலே இலயித்து ஆண்டவனுக்கும் அடியார்க்கும் ஆடசெய்வதே பணி எனத் திகழ்வார்கள்.

**"மாசிலாத மணிதிகழ் மேனிமேல்**
**பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்**
**தேசினால் எத்திசையும் விளக்கினார்**
**பேச வொண்ணாப் பெருமை பிறங்கினார்"**

என்று வெண்ணீறு போன்ற தூய மணமும் குணமும் உடையவர்கள் சிவனடியார் என்பார். மேலும் பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும் மாதொரு பாகர் மறவாதவர்கள் சிவனடியார்கள்.

**"கேடும் ஆக்கமும் கெட்டதிருவினார்**
**ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்**
**கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"**

என சேக்கிழார் "அடியார்கள் நன்மையும், தீமையும், இன்பமும், துன்பமும் சமமாகப் பாவிப்பவர்கள், ஓட்டினையும் செம்பொன்னையும் ஒன்றாகவே கருதும் துணிவுடையவர்கள். இறைவன் அடியார்களை வணங்கி மகிழ்வதே பேறு எனக் கருதுபவர்கள். வீடுபேறு கிடைத்தாலும் அதனைப் பெரிதாக மதிப்பாரிலர்.

**"பச்சைமாமலைபோல் மேனி பவளவாய் கமலச்செங்கண்**
**அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்**
**இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகமாளும்**
**அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே"**

என்ற தொண்டரடிப் பொடியாழ்வாரின் பாசுரம் இங்கு நோக்கத்தக்கது.

**"ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே**
**பாரம் ஈசன் பணியல தொன்றிலார்**
**ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்**

**வீரம் என்னால் விளம்பும் தகையதோ"**

என்று அடியார் திருவேடச் சிறப்பையும் அவர்தம் மென்மைக் குணத்தையும் புகழ்ந்துரைக்கின்றார் சேக்கிழார். மேலும் சிவனடியார் திறம் தம்மால் விளம்பும் தகைமைத்தன்று என்கிறார்.

**"வேண்டுமாறு விருப்புறும் வேடத்தர்**
**தாண்டவப் பெருமான் தனித்தொண்டர்கள்**
**நீண்ட தொல்புகழாளர் தம் நிலைமையை**
**ஈண்டு வாழ்த்துகேன் எண்ணறிந் தேத்துவேன்"**

என்று இவ்வாறு சிவனடியார்களின் அருங்குணங்களைப் போற்றுகின்றார். மெய்கண்டார் சிவஞான போதத்தில்,

**"செம்மலர் நோன்தாள் சேரலொட்டா**
**அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ**
**மாலற நேயம் மலிந்தவர் வேடமும்**
**ஆலயம் தானும் அரனெனத் தொழுமே"**

என்ற பன்னிரண்டாம் நூற்பாவில் இறைவனை அடைவதற்குத் தடையான எல்லாவற்றையும் நீக்கி சிவனடியார்களுடன் கலந்து சிவனடியார்களையும் சிவத்தொண்டர்களையும் போற்ற வேண்டும். அவர் அணிந்துள்ள மணி மந்திர ஔடதங்களையும் போற்ற வேண்டும். சிவபெருமான் எழுந்தருளிக் குடிகொண்டுள்ள திருவாலயங்களையும் தரிசித்து வணங்கி வாழ வேண்டும். இவையே சிவனடியார்களின் தனிப்பண்புகள் என விளக்குகிறார். இத்தகைய அடியார் கூட்டத்தில் தலைமைத் தானத்தில் சைவ சமயத்தின் ஆதி குருவாகத் திகழ்பவரே திருஞானசம்பந்தர்.

**முடிவுரை**

தோத்திரங்கள் இலக்கியங்கள் எனில் சாத்திரங்கள் இலக்கணங்களாகும். இறைவனை வழிபடும் சிவபெருமானிடம் கொண்ட பக்திக்கு இலக்கணம் வகுத்தனர் சமயாசாரியார்களும், சந்தானாசாரியார்களும். இவர்கள் காட்டிய அன்புவழியே தமிழ்நாட்டின் சித்தாந்த சைவ வழிபாடாகும். வடநாட்டில் பாசுபதம், காபாலிகம், மாவிரதம், சைரவம் என்று பல சைவசமயப் பிரிவுகளும் அதற்கேற்ற வழிபாட்டு முறைகளும் அமைந்துள்ளன. சித்தாந்த நெறியானது இறைவனிடம் அன்பு செலுத்தி தோத்திரங்களால் வழிபட்டு, திருத்தலங்களைத் தரிசித்து, அடியார்க்கு அன்னமிட்டு, இறைவனுக்கு மலர்மாலைகட்டி, திருவிளக்கேற்றி ஐந்தெழுத்தோதி, உத்திராக்கம் அணிந்து சிவனடியார்களைப் பாதம் பணிந்து வணங்கி வாழ்ந்து இறைவனை அடைவது சைவ சித்தாந்த நெறியாகும்.

# குலசேகர ஆழ்வார் பாடல்களில் வாழ்வியல் நெறிகள்

***முனைவர் ச.வனிதா,** கௌரவ விரிவுரையாளர், நா.க.இரா.அரசு மகளிர் கலைக்கல்லூரி, நாமக்கல்.

**முன்னுரை**

**வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்**
**வாழிய பாரத மணித் திருநாடு - ப.134 (திருப்பதி பல்கலைக்கழகம்)**

நமது மகாகவி பாரதி எவ்வாறு மொழியுணர்ச்சியினையும், இன உணர்ச்சியினையும், தேசிய உணர்ச்சியையும் இருபதாம் நூற்றாண்டில் இணைத்துப் பாடி புரட்சி கண்டானோ, அதுபோல பன்னிரெண்டாம் நூற்றாண்டில் சமயத்தின் மூலம் தமிழ் எழுச்சி, தமிழ் அடியார்களான பன்னிரு ஆழ்வார்கள் திருமாலை பாடும் விதத்தால் சமயச்செய்தியோடு வாழ்வியல் கருத்துக்களையும் நெறிகளையும் இயம்பியுள்ளார்கள்.

நல்லறத்தோடு இல்லறம் நடத்தி நாடாண்டு வந்த நிலையில், அரசியல் நெறியும், போர் நெறியும் பொருளற்றதாகப் படவே, நிறைகுணமான ஆன்மீக அறிவு பெற்று ஆண்டவனை அறிவதே பொருளுள்ள வாழ்வாக எண்ணிய குலசேகராழ்வார் கற்றுத்துறை போய சமயச் சான்றோரை அழைத்து முழு முதற்கடவுளின் பண்புகளை விளக்குமாறு பணிக்க அனைவரும் திருமாலே முழுமுதற்கடவுள் என்று அறுதியிட திருமாலின் மீது மையலுற்று மனம் மாறியவரானா்.

மன்னராக இருந்து முடிதுறந்து, ஆழ்வாராகி, திருவரங்கம், திருக்கண்ணபுரம், திருச்சிந்தகடம், திருவித்துவக்கோடு, திருவேங்கடம், திருவயோத்சி, திருப்பாற்கடல் போன்ற திருத்தலங்களில் உள்ள ஸ்ரீமன் நாராயணின் புகழை இனிய தமிழினின்பப் பாக்களால் இசைத்துள்ளா். இவா் இயற்றிய இப்பாக்கள் ‘பெருமாள் திருமொழி’ என்று சிறப்பிக்கப்படுகிறது. குலசேகரா் அருளிச் செய்த இத்திருமொழிகளில் வாழ்வியல் நெறிகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நன்னெறி**

ஸ்ரீ வைணவ அடியார்கள், கொலை, சினம், கொடுமை எண்ணங்கள் ஆகியவை மனதில் சிறிதும் இல்லாமல் ஒழித்து நன்னெறிக்கண் வாழ்பவராய் பொய் இல்லாமல் ஐந்து புலன்களால் உண்டாகும் கொடுஞ்செயல்களை அடக்கிப் பழைய வினைகளை நீக்கிவிட்டு, ஐந்து காலங்களிலும் எம்பெருமானை வணங்கி, வாழ்வார்கள் என்றும், இரக்கமிகுந்த உள்ளத்திற்கு புகலிடமாகத் இறைவன் திகழ்வார் என்பதையும்,

**“மறந்திகழு மனமொழிந்து வஞ்சமாற்றி**
**ஐம்புலன்களக்கியிடர்ப் பாரத்துன்பம்**
**துறந்து, இருமுப்பொழுதேத் எல்லையில்லாத்**
**தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டரான” - 1**

என்ற வரிகள், மனிதன் எவற்றை ஒழித்து வாழ வேண்டும் என்ற நன்னெறிகளைக் காட்டுகின்றது.

**இறை நம்பிக்கை**

கடவுளால் கற்பித்துத் தரப்படும் ஞானத்தின்படி நம் வாழ்க்கையை நடத்த முதலாவது, நாம் அந்த ஞானத்தில் நிலையான நம்பிக்கையைப் பெற வேண்டும். அத்தகைய உணர்வுப் பூர்வமான நம்பிக்கையால் தான் வாழ்வில் மிகப் பெரிய மாறுதல் உண்டாகக்கூடும்.
இதனை,

குலசேராழ்வார் தன் பாசுரத்திலே ‘வித்துவக் கோட்டம்மா’ விடம் கொண்ட நம்பிக்கையையும், அன்பையும்,

**“அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவந்தன்**
**அருள்நினைந்தே யழும் குழவி அதுவே போன்றிருந்தேனே”** 2

எனவும்,

**“வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்,**
**மாறாத காதல் நோயாளன் போல் மாயத்தால…….**
**……..**
**ஆளாவு னதருளே பார்ப்பன டியனே”** 3

என்று கூறுகிறார்.

உன் மாயை காரணமாக அடியேனுக்கு நீ நீங்காத துன்பத்தைத் தந்தாலும் உன் அடியவளான நான் உன் கைங்கர்யத்துக்கான உன் கருணையை எதிர்நோக்கி நிற்கிறேன் என்ற நம்பிக்கையை அறிய முடிகிறது.

மனித வாழ்வில் தான் செய்யும் காரியத்திற்கு நம்பிக்கை அவசியம், நம்பிக்கை ஏற்படாதவரை நமது ஆன்மீக முன்னேற்றமும் ஆரம்பமாகாது. நமது நம்பிக்கை எவ்வளவோ அந்த அளவுக்குத்தான் நமக்கு வெற்றியும் கிட்டும். இதனால்தான்

**“நம்பிக்கையுடையவன் வெற்றி அடைவான்”** 4
**(Faith yields victor)**

என்னும் பழமொழி சாதாரணமாக வழங்கி வருகிறது.

**நிலையாமை**

மெய்யற்ற நிலையில்லாத இவ்வுலக வாழ்வை மெய்யன்று கருதிக்கொண்டு வாழும் இவ்வுலகத்து மக்களோடு நான் சேரமாட்டேன். மாறாக நான் உன் மீது ஆராத காதல் கொண்டு உனக்கு அடிமையானேன். இதனை,

**“மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும், இவ்**
**வையந் தன்னொடுங் கூடுவதில்லையான்”** 5

என்கிறார். மேலும், அழகான மாதர்களிடத்தே கொண்டுள்ள இந்நிலவுலக வாழ்வை நான் வெறுக்கிறேன், உணவு, உடை என்று ஆடம்பரமான இம்மண்ணுலக வாழ்வை நான் விரும்பவில்லை. தீமையற்ற நல்ல வழிகள் இருக்க அதனை விடுத்துத் தீய நெறிகளைச் செய்வதையே விரும்புபவர்களுடன் அடியேன்கூட மாட்டேன். உலகங்களுக்கெல்லாம் ஆதியானவான, நிலையாக நீக்கமற நிற்கும் அரங்கனே நான் உன் மீது பித்துக்கொண்டேன் என நிலையில்லாத இவ்வுலக வாழ்வை மெய்பிக்கிறார்.

புவியில் தாம் உயிரோடு வாழும்போது கடமையான தர்மங்களை செய்ய வேண்டும் எனவும், எப்படிப்பட்டவரும் பூமியின் மேல் நிலைபெறார் என்பதை,

**“வாழ்நாள்**
**உலவாமுன் ஒப்புரவா ற்றுமின் யாரும்**
**நிலவார் நிலமிசை மேல்”**6

என நிலையாமையை பறைசாற்றுகிறது. இதனை வள்ளுவர்

**“நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யப்படும் .”** **குறள் (335)**

என்கின்றார்.

பேச வலிமையற்று நாவை அடக்கி விக்கல் எழுந்து தடுமாறுவதற்கு முன் நல்லறச் செயல்களை செய்ய வேண்டும் என்பர் அறிஞர்.

மனிதனின் அடிப்படை தேவையான உணவு, உடைகளைகூட குலசேகராழ்வார் விரும்பாது இறைவனைக் காணுவதே மெய்யான வாழ்க்கையாக கருதுவது அவரது பக்தி மேலீட்டைக் காட்டுகிறது.

**வல்வினை**

செடிகள் அடர்ந்துள்ளது போன்று நாம் செய்து வரும் பாவ காரியங்களின் பலனான கொடியப் பிறவிப் பிணியின் வினைகளை எல்லாம் தீர்ப்பவன் இறைவனே என்கிறார். ஈங்கு மனிதனாகப் பிறந்து எத்தனை புண்ணிங்களைச் செய்தாலும், ஊழ்வினையானது, முற்பிறவியில் செய்த பாவத்தை அனுபவிக்க வேண்டும் என்றும் அத்தகைய முன்ஜென்ம வினைகளை இறைவன் அறுப்பார் எனக் கூறுகிறார். இதனை,

**“ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்”**

என்று சிலம்பு கூறுவதும், கோவலனுக்கு உற்ற கதி வினையினைால் வந்தது என்று நம்மால் காணமுடிகிறது.

மணிமேகலையில், “புத்தபீடிகை” என்று சொல்லும் அவ்விடத்திலே மலர்களை வைத்து வணங்கினால் பிறவிப்பிணி நீங்குவதாக கூறப்பெறுகிறது. ஆக வினைப்பயனை அடைய வேண்டுமானால் இறைவனை நாடுதல் வேண்டும் என அறியமுடிகிறது.

**“செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே**
**நெடியானே! வேங்கடவா, நின்கோயின்**
**……………….. வாசல்**
**படியாய் கிடந்துன் பவளவாய் காண்பேனே” 7**

என்று கூறுவதிலிருந்து குலசேகரஆழ்வார் வேங்கடமலையில் படியாக பிறக்க வேண்டும் எனக் கருதுகிறார்.

**தாயும் சேயும்**

**தாயிற் சிறந்த கோவிலுமில்லை”**

என்பார்கள், தாயன்பிற்கு ஈடு இணை இவ்வுலகில் இல்லை. இதனை கல்லம் கபடமில்லாத குழந்தையும் அறியும் என்கிறார்.

குலசேகரர், அடியவனாகிய எனக்கு நீ தருகின்ற பெருந்துன்பத்தை, நீயே போக்காவிட்டாலும் கூட அடியேன் உன் திருவடிகளைப் பற்றி இருப்பதைத்தவிர எனக்கு வேறு வழியில்லை. எவ்வாறெனில் பெற்ற தாயானவள் மிகுந்த கோபத்தால் தான்பெற்ற குழந்தையை வெறுத்து ஒதுக்கினாலும் மீண்டும் மீண்டும் அக்குழந்தை அத்தாயினுடைய கருணையையே எண்ணி எண்ணி அழும். அதுபோல அடியேன் நானும் ஒத்திருக்கிறேன். என்பதை,

**“அரசினத்தார் லீன்றதாய் அகற்றிடினும், மற்றவந்தன்**
**அருள்நினைந்தே யழும்குழவி அதுவே போன்றிருந்தேனே” 8**

என்று குழந்தையின் உள்ளத்தை அறிந்து அவற்றை ஒப்புமையாக கூறுவது வியக்கத்தக்கது. தாயும் சேயும் இருக்கும் அன்புநிலையை காட்டுகிறார். மேலும் யசோதை பிராட்டிக்கு கிடைத்த பேறு போல் தேவகிக்கு கிடைக்கவில்லை என ஏங்குகின்ற நிலையையும் தாயின் ஏக்கத்தையும், தாயின் பெருமையும் மிக அழகுபடக் கூறுகிறார்.

கண்ணபிரானே! அழகிய இளங்குமரனாக இன்று உன்னை என் இரு கண்களாலும் கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன். ஆயினும் இவள் என்னுடைய தாய் என்று தாயை மட்டுமே அறிந்து கொள்ளும் கைக்குழந்தைப் பருவத்தின் பிள்ளைமை இன்பத்தை இழந்தேன் அப்படிப்பட்ட இப்பாவியேனுக்கு, அவ்விழப்பின் காரணமாகவும், அதே நினைவாகவும் என் உயிர்நிற்கவில்லை என தேவகி புலம்புவதையும் ‘ஒரு தாயின் ஏக்கத்தையும்

**“இளமை யின்பத்தை யின்றென்றன் கண்ணால்**
**பருகு வேற்கிவள் தாயென நினைந்த,**
**அளவில் பிள்ளைமை யின்பத்தை யிழந்த**
**பாவி யேனென தாவிநில்லாதே! 9**

இவ்வாறுக் கூறுகிறார்.

மொழிகளில் அமுத மொழியாக விளங்குவது ‘மழலை’ மொழி என்று தான் கூற வேண்டும். அத்தகைய மழலை மொழியினை கண்ணபிரான் மொழிவதை காணக்கிடக்கவில்லை என தேவகி புலம்புவதை,

**“விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து**
**வெகுளியாய் நின்று ரைக்குமவ்வுரையிம்**
**திருவ லேனொன்றும் பெற்றிலேன்”**

என்கிறார். மேலும்,

**“வண்ணச் செஞ்சிறு கைவிரலனைத்தும்**
**வாரிவாயாகக்கொண்ட அடிசிலின் மிச்சில்,**
**உண்ணப் பெற்றிபென் ஓகொடு வினையேன்**
**என்னை என்செய்யப் பெற்றதம் மேயே!**

என்று தாயுள்ளத்தை படம் பிடித்துக் காட்டுகிறார்.

**தந்தையின் பெருமை**

எங்கள் குலத்துக்கு எற்றதொரு விளக்கானவனே! காளைப் போல விளங்குபவனே! “உன் அப்பா எங்கே என்று காட்டு” என்று கேட்ட அளவில் நீ உன்னுடைய சிவந்த சிறந்த விரலினாலும், உன்கடைக்கண் பார்வையாலும் நந்தகோபரை காட்டுவாயே! இப்படிப்பட்டதோர் பேற்றினை நந்தகோபன் பெற்றனன் ஐயோ! இத்தகைய நல்ல வினையைச் செய்யாத

வாசுதேவன் அப்பேற்றினைப் பெற்றிருக்கவில்லையே என தேவகி கூறி தந்தை அடைய வேண்டிய பெருமைப்பற்றி கூறுகிறார்.

**“உந்தன் யாவன்? என்றுரைப்பநின் செங்கோழ்**
**விரலி னும்கடைக் கண்ணனும் காட்ட**
**நந்தன் பெற்றனன் நல்வினை யில்லா**
**நங்கள் கோன்வசு தேவன் பெற்றிலனே”** 10

எனக் கூறுவதிலிருந்து உலக வாழ்வில் தந்தை அடைய வேண்டிய பெருமை இவைதான் என்ற வாழ்வியல் மதிப்பை உணர்த்துகிறார்.

**முடிவுரை**

இதுகாறும் அறிந்தவற்றால், தீஞ்சுவையும் தெளிந்த நடையும், ஆழ்ந்த கருத்துக்களும் சிறந்த உவமானங்களும், சிதையாத பக்தி உணர்வும் குறையாத மனித நெறிகளையும், வாழ்வியல் அறங்களையும் பெருமாள் திருமொழியில் காணக்கிடக்கின்றன. இவர் கூறியுள்ள இச்சீரிய சிந்தனைகளையும் நெறிகளையும் ஒவ்வொரு தமிழனும் தெரிந்து கொள்ள வேண்டியது தலையாய கடமையாகும்.

**சான்றெண் விளக்கம்**


1. நாலாயிரத்திவ்யபிரபந்தம் - முதல் ஆயிரம்
2. மேலது
3. மேலது
4. ‘வைரவாழ்வு’ - பிராஜாபிதா பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய வித்தியாலயம் தமிழக தலைமையகம் - சென்னை
5. நாலாயிரத்திவ்யப்பிரபந்தம் - முதல் ஆயிரம்
6. நாலாடியார் உரையும் - சாரதாபதிப்பகம் - சென்னை
7. நாலாயிரத்திவ்யப்பிரபந்தம் - முதல் ஆயிரம்
8. மேலது
9. மேலது
10. மேலது.

# சங்க இலக்கியத்தில் ஆளுமை சிந்தனைகள்

***ஆ.சக்தி ஸ்ரீ,** ஆய்வியல் நிறைஞர் (தமிழ்த்துறை), செல்வம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), நாமக்கல்.

**முன்னுரை**

தமிழன் உளவியல் சார்ந்த பல்வேறு கருத்துகளை சங்கஇலக்கியத்தில் வெளிப்படுத்தி உள்ளான். இன்றைய உலகில் உளவியல் துறை மருத்துவ இயலுடன் ஒன்றிணைந்த துறையாகக் கருதப்பட்டு வருகிறது. எனினும் உளவியல் பற்றிய கருத்துகள் அரிஸ்டாட்டில் காலத்திலேயே தொடக்கம் பெற்று வந்திருக்கின்றன. அரிஸ்டாட்டில், "ஆன்மாவின் இயல்புகள்" என்ற நூலை எழுதினார். இந்நூல் முதன்முதலில் உளவியலைப் பற்றி எடுத்துரைத்தது. சங்க இலக்கியத்தில் நம் தமிழ்ப்புலவர்கள் பல்வேறு உளவியல் செய்திகளை எடுத்துரைத்துள்ளனர். அவற்றில் ஆளுமை சார்ந்த பற்றிய உளவியல் சிந்தனைகளை இக்கட்டுரையின் மூலம் எடுத்துக்கூறுவதே முதன்மை நோக்கமாக அமைகின்றது.

**உளவியல் விளக்கம்**

உளவியல் என்பதனை ஆங்கிலத்தில் சைக்காலஜி (Psychology) என்று அழைப்பர். இது சைக்கி (Psyhe) லோகஸ் (Logos) என்ற கிரேக்கச் சொற்களின் கலப்பாகும். சைக்கி என்றால் 'ஆன்மா' என்பதாகும். லோகேஸ்' என்பது அறிவியல் என்பதாகும். ஆன்மாவைப்பற்றிய அறிவியல் உளவியல் என்று அழைக்கப்பட்டது. தற்போது மனிதனின் புறச்செயல்களை உற்றுநோக்கி ஆராய்வதாக பரந்து விரிந்து காணப்படுகின்றது.

**இலக்கியமும் உளவியலும்**

இலக்கியத்திற்கும் உளவியலுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. இதனை 'யுங்' என்ற உளவியல் அறிஞர் " எல்லா அறிவியல் கோட்பாடுகளுக்கும் கலைகளுக்கும் கருவாக மனிதவளம் உள்ளது" என்று குறிப்பிடுகின்றார்.

இலக்கியத்திற்கும் உளவியலுக்கும் உள்ள தொடர்பை நான்கு வழிகளில் ஆராய முடியும் என ரெனிவெலாக், ஆஸ்டின் வாரன் (Austin Warren) இலக்கியக்கொள்கைகள் (Literary, Theory of Literature) என்ற நூலில் குறிப்பிடுகின்றார். இது போன்ற அனைத்து உளவியல் செய்திகள் நம் சங்க இலக்கியத்தில் அதிகம் புதைந்து உள்ளன.

**ஆளுமை செய்திகள்**

ஆளுமை என்ற சொல் ஆங்கிலத்தில் "பர்சனாலிட்டி" என்று அழைக்கப்படுகின்றது. இது "பர்ஸொனா" என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்தது ஆகும். பண்டையக்காலத்தில் நாடகக்கலைஞர்களின் 'முகமூடி' என்று அழைக்கப்பட்டது. ஆங்கிலத்தில் "ஒருவனது பண்புகளைக் குறிக்கும் வெளித்தோறறம்"- என்பதாக இருந்து தற்போது ஒருவனது செயல்முறைகள், நடத்தை மூலம், தனக்கே உரித்தான சிறப்பு ஆகிய அனைத்துப் ஆளுமையாக வெளிப்படுத்தகின்றது.

உளவியல் அறிஞர்கள் கில் போர்ட், உட்வொர்த், ஆல்போர்ட் ஆளுமையைப் பற்றி சிறப்பாக வரையறை கூறியுள்ளனர். அத்தகைய ஆளுமைப் பண்புகள் சங்க இலக்கியத்தில் செம்மையாக அமைந்துள்ளதை அறிய முடிகின்றது.

**உலகமே உறவு**

மற்ற நாடுகளையும் மக்களையும் உட்படுத்தி அன்பு பாராட்டி வரும் இயல்பு சங்க காலத்திலேயே தோன்றியதோர் பண்பாடும் அக்காலத்திலேயே மற்ற நாட்டினரோடு உறவு பாராட்ட விரும்பியுள்ளனர்.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** **(புறம் )**

என்ற கணியன் பூங்குன்றனார் பாடல், பழந்தமிழரின் உயர்ந்த ஆளுமைப் பண்பை வெளிப்படுத்துகின்றது. உலகில் உள்ள அனைவரும் ஒன்றாய் வாழ வேண்டும் ஏனெனில்

அனைவரும் உறவினர் ஆவர். பிறர் நலக்கொள்கையும் பிறர் அன்பு உணர்ச்சியும் முதன் முதல் பரவுவதற்குக் காரணமாய் இருந்தவர்கள் தமிழர்கள் ஆவர். நம் இலக்கியங்களில் ஆளுமையை சிறப்பாக வெளிப்படுத்தி உள்ளனர். மேலும்

**பொய்கலவாத மெய்மொழியே புகழ் தருவதாகும் என வாய்மொழியைப் பற்றி**

**"காலை அன்ன சீர்சால் வாய்மொழி"**

என்று சிறப்பித்து கூறுவதைக் காணலாம். வாய்மையோடு பொய்பேசாமல், தீமை சொற்களை கூறாமல் தலைச்சிறந்த ஆளுமைப் பண்போடு தமிழர் வாழ வேண்டும் உயர்ந்த எண்ணம் உடையவர்களாக தம் முன்னோர் வாழ்ந்ததையும் அதிலுள்ள உளவியல் சிந்தனைகளை அறிந்துகொள்ள முடிகின்றது.

மேலும் நற்-283, 289, பதிற்றுப்பத்து 18: 11:12, பதிற்றுப்பத்து 63:67 கலி – 34:10, கலித் 123:4 போன்றவற்றிலும் வாய்மை வழி ஆளுமைப்பண்பை அறியமுடிகின்றது. இதனால் தான் அய்யன் வள்ளுவரும் வாய்மையின் சிறப்பை

**"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்" (குறள் - 291)**

என்று வாய்மை என்று கூறப்படுவது எது என்றால் அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீங்கு இல்லாத சொற்களை சொல்லுதல் ஆகும் என்று கூறுவதைக் காணலாம்.

சங்க இலக்கியத்தில் தமிழ்ப்புலவர்கள் ஆளுமை என்றும் உளவியல் சிந்தனையை இனியவைக்கூறல், செய்ந்நன்றி மறவாமை, புகழ், அன்பு, வீரம், கொடை என்ற பல்வேறு வகைகளில் வெளிப்படுத்தி உள்ளனர். இதனை (அகம்-268, நற்-28, குறுந்-40, புறம் - 34, 165, 182) போல பல்வேறு பாடல்களில் காணமுடிகின்றது.

சங்கப்புலவர்கள் மனவெழுச்சி நுண்ணறிவு, ஆளுமை என்றும் உளவியல் சிந்தனைகளை சிறப்பான முறையில் வாழ்வியல் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை தெளிவாக அறிய முடிகின்றது.

**முடிவுரை**

மனித வாழ்க்கையில் பல்வேறு சிந்தனைகள் இருந்தாலும் உளவியல் சிந்தனை அடிப்படையானது ஆகும். சங்க இலக்கியத்தில் நம் தமிழ்ப்புலவர் சிறப்பாக வெளிப்படுத்தி உள்ளனர். பல்வேறு தருணங்களில் அவர்கள் வெளிப்படுத்தி உணர்வுகள், செயல்கள், சிறப்புகள், கொடை, வீரம் ஆகியவை மனவெழுச்சி நுண்ணறிவு, ஆளுமை செய்திகளாக பதிவாகி உள்ளதை நாம் அறிய முடிகின்றது. உளவியல் சிந்தனைகள் சங்க இலக்கியத்தில் சிறப்பாக பல அமைந்துள்ளதை நாம் உணரமுடிகின்றது.

**துணைற்பட்டியல்**


1 நாகராஜன்.கி — கற்றல் மனித வளர்ச்சி தொடர்பான உளவியல், இராம் பதிப்பகம், சாலி கிராமம்,சென்னை-93 (மே 2009)

2 விசுவநாதன்.அ (உ..ஆ) — சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்கள், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை – 98.

3 நிலவழகி.கு — சங்க இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள், (முனைவர் பட்ட ஆய்வேடு) தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகம், திசம்பர் - 2012.

4 நடராசன். எஸ் — கல்வியியல் ஆராய்ச்சி சாந்தா பப்ளிசர்ஸ், இராயப்பேட்டை, சென்னை – 14.

5. பரிமேழகர் உ..ஆ — திருக்குறள் மூலமும் உரையும் சாரதா பதிப்பகம் சென்னை.

# குறுந்தொகையில் தலைவியின் உளவியல்

***பெ.சங்கீதா,** உதவிப்பேராசிரியர் (தமிழ்த்துறை), சக்திகைலாஷ் மகளிர் கல்லூரி, தர்மபுரி.

**முன்னுரை**

சங்க இலக்கியங்களில் எட்டுத் தொகையில் **நல்ல குறுந்தொகை** எனப் போற்றப்படும் இந்நூல் பண்டைய தமிழ் மக்களின் அகவாழ்வை மிக ஆழமாகவும், தெளிவாகவும் படம் பிடித்து காட்டுவதில் சிறப்பிடம் பெறுக்கின்றன. இவ்வாறான தனிச் சிறப்புகளைக் கொண்டுள்ள குறுந்தொகையில் தலைவி தன்னுடைய மன உணர்வுகளை இயற்கையின் சூழ்நிலைக்கு தகுந்தவாறு எங்ஙனம் வெளிபடுத்திகிறாள் என்பதை உளவியல் பார்வையோடு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றன.

**உளவியல் விளக்கம்**

உள்ள முறிவு எவ்வகைத் தீர்வுமின்றி நெடுங்காலம் தொடருமானால் உளவியல் சார்ந்த முற்றிய விளைப்பு நிலை (Tension) தோன்றும் இந்நிலையை உள்ள இறுத்தம் (Stress) என உளவியிலார் குறிப்பார். உள்ள முறிவுற்ற நிலையிலும் போராட்டம் மிக்க நிலையிலும் சில எதிர்மறையான உள்ளக் கிளர்ச்சிகள் (Emotion) தோன்றுகின்றன. அவற்றுள் மூன்றினைச் சிறப்பாக உளவியலார் குறிப்பிக்கின்றனர். அவையான (1).சினம் (Anger), 2).அச்சம் (Fear), 3).கவலை (Anociety) அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச் செற்றமும் உவகையும் செய்யாது காத்து என்று **மாங்குடிமருதனார்** இம்மூன்றும் குறிக்கப்பட்டுள்ளமையைக் காண முடிகின்றது. உள்ளத்தின் முறிவாலும் போராட்டத்தாலும் மணம் கலக்கம் அடைக்கின்றது. இக்கலகத்தின் விளைவே கவலை தோன்றுகிறது எனலாம்.

“மன முறிவுள்ள ஒரு மனிதனும் சரி அல்லது மன போராட்டத்தில் உள்ள ஒரு மனிதனும் சரி ஒரு கலகமடைந்து இறுக்கமான நிலைமையிருக்கின்றன அவனுடைய மூல ஊக்கியின் தூண்டல் நிலை சிறிதும் குறையாமலிருக்கின்றது மேலும் அவனுடைய மன இறுக்கம் போராட்டத்திலிருந்து எழுந்து மனவெழுச்சி துலங்களினால் வலிமையூட்டப் பட்டிருக்கின்றது”. (மு.இராசமாணிக்கம் உளவியல் துறைகள், இரண்டாம் தொரு ப. 326)

இந்நிலையை கவலை அல்லது தவிப்பு என்பது உளவியளாரின் கருத்து கவலையைப் பற்றிய இவ்வுளவியல் விளக்கம். சங்க இலக்கியத்தில் நோதல் எண்ணும் சொல் உள்ளத்தின் முறிவு, போராட்டம், விறைப்பு நிலை, அழுத்தம், இறுக்கம் ஆகியவற்றை உள்ளத்திலும் பொதுச் சொல்லாகவே பெரும்பாலான இடங்களில் பயல்கிறது. (தமிழ் இலக்கியங்களில் காலந்தேறும் பாடுபொருள் மாற்றங்கள் ப. 670)

**தலைவியின் உளவியல் கூறுகள்**

தலைவியிடம் வேட்கை மனமுறிவு, வெறுப்பு, தனிமை, உடற்சோர்வு ஆகிய பல்வேறு உணர்வுகள் தோன்றுகின்றன. தலைவியின் மன புழுக்கம் பற்றிய வெப்ப உயித்தல், கழிபட வருந்திய எவ்வம், பெரிதழிதல் ஆகிய கபிலரின் சொற்களும், துயில் துறத்தல், அரும்படர் அவல நோய், தடுமாறி வருந்துதல் ஆகிய **நல்லந்துவனாரின்** சொற்களும் உளவியல் நுட்பம் வாய்ந்தனவாகும். பெருந்துயரம் குற்ற உணர்ச்சி, வெட்கம், ஆர்வம் ஆகிய உணர்வுகள் கவலையின் உள்ளடக்க மாதல் உண்டு என உளவியலாரர் கூறுகின்றனர். ஊடலால் உண்டு என உளவியலார் உறுகின்றார். ஊடலால் முடக்கப்பட்ட பெண்ணின் உள்ளத்தில் அடக்கப்பட்ட உணர்வுகளில் இவ்வுளவியல் உண்மையை உணர முடிகின்றது. (மேலது ப. 670)

**பிரிவில் தலைவியின் வருத்த நிலை**

பாலை நிலப்பகுதி மணலும் சார்ந்த இடம் இது குறிஞ்சியும் முல்லையும் வேனிலன் வெண்மையால் தம் இயல்பு இழந்த நிலையில் உண்டான ஒரு வகை பாலை நிலம் என்பர். இந்நிலத்தில் இயற்கை வளங்கள் குன்றி காணப்படும் வெப்பம் மிகுதியால் நீர் நிலைகள் வற்றியும் உலர்ந்தும், இயற்கை வளங்கள் அழிந்தும் பொழிவிழந்தும், விலங்கினங்கள் வலிமையிழந்தும் காட்சியளிக்கின்றன. இத்தகையான பாலை நிலத்தின் கொடுமையான நிலையினை நினைத்து வருந்தி புலம் தலைவியின் துயர் நிலையை.

**“உள்ளது சிதைப்போர் உளர் என படாஅர்**
**கூற்றத் தன்ன கொலைவேல் மறவர்**

**ஆற்ற இருந்து அல்கி வழங்குநர்ச் செகுத்த**
**படுமுடை பருந்துபார்த் திருக்கும்**
**நெடுமூ திடைய நீரில் ஆறே"** குறுந்தொகை 128

என்ற பாடல்களில் பொருளைத் தேடி பிரிந்து சென்ற தலைவன் பாலை நில வழியிலே மறவர்கள் உள்ளனர். அவர்கள் பிறரைக் கொல்லும் குணம் உடையவர்கள் வழியில் மறைந்து நின்று அவ்வழியில் வருவோரைக் கொன்று அவர்களிடம் உள்ள பொருளைப் பறிப்பார்கள். புலால் நாற்றம் வீசும் பிணங்களைப் பருந்துகள் நமக்கு உணவாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும். இந்த வழி மிகவும் கொடுமையானது, நீளமான வழியுமுண்டு வறண்ட நீரில்லாத வழியே அவர் கடந்து செல்லுவதை எண்ணி எண்ணி தலைவி மனம் வருந்தி மன இறுக்கத்திற்கு உள்ளாகும் உளவியல் பங்கினை காண முடிகிறது.

**தலைவியின் கவலை நிலை :**

தலைவியின் உடலும், உள்ளமும் ஒருங்கே வருந்தும் நிலையை,

**"கோடு ஈர் இலங்குவளை எருகிழ நாடொறும்**
**பாடுஇல கலிழும் கண்ணொடு புலம்பி**
**ஈங்கு இவன் உறைதலும் உய்குவம் ஆங்கே"** குறுந் - 11

என்ற பாடலில் தலைவி நாள் தோறும் இமை பொருந்தாமல் தூக்கம் என்பதே இல்லாமலும் கலங்கி கண்ணிரோடு உள்ளம் உடைந்து நோய் வாய்ப்பட்டு உள்ளம் இறுக்கம் உற்ற கவலையின் அறிகுறிகளாக நிற்கின்றன. உள்ள முறிவுகள் போலவே உள்ள அழுத்தங்களும் (Pressures) அகமுக. புகை முகத் தோள்வாய்கள் உடையன என்றும் உளவியல் கருத்தையும் இணைத்துக் காண முடிகிறது எனலாம்.

தலைவனை பிரிந்த தலைவியின் நினைவுகளும், கூற்றுகளும் அச்சத்தின் அடிப்படையில் பிறந்த கவலையைப் புலப்படுத்துகின்றன. **"கவலை என்பது பயத்தின் வகையைச் சேர்ந்தது** எதிர் பார்க்கப்பட்ட பெருங்கேட்டின் துலங்கலாம். என உளவியலார் கூறுவர். கவலையை நன்கு ஆராய்ந்து பார்த்தால் அதற்கு அடிப்படையாக இருப்பது பயம் என்று அறியலாம் என்று ஓர் உளநூல் கூறுகிறது.

**உணர்ச்சிக்கும் (Feeling) உள்ள கிளர்ச்சிக்கும் (Emotion)** உள்ள வேறுபாட்டினை உளவியலார் விளக்கியுள்ளனர். நினவு நிலையில் நம்முடைய செயல்களை எல்லாம் பார்த்து நிற்கும் பொது நிலைக்கு உணர்ச்சி என்று பெயர் என்பது உணர்ச்சியின் வரையறையாகும். இவ்வுணர்ச்சிகள் சில ஆழமாய் பதிந்து நம்மை ஆட்டி வைக்கும் தன்மை அடையும் போது அவற்றை உள்ளக் கிளர்ச்சி என்பார். காற்றுக்கும், புயலுக்கும் உள்ள வேறுபாட்டை உணர்ச்சிக்கும், கிளர்ச்சிக்கும் இடையே உள்ள வேறுபாடு" (மேலது பக்கம் 671) குறுந்தொகையில் வரும் தலைவி காம நோயான மனம் கலங்கிப் குமுறும் நிலையை

**"முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல்**
**ஓரேன் யானும்ஓர் பெற்றி மேலிட்டு**
**ஆசு ஒல்லெனக் கூவுவேன் கொல்**
**அலமரல் அசை வளி அலைப் என்**
**உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே".** குறுந்தொகை - 28

என்ற பாடலின் மென்மையாக தென்றல் காற்று வீசுகிறது. இவை என் உறக்கத்தை கெடுக்கிறது. இவ்வூரார்க்கு மட்டும் தென்றல் நல்ல இன்பத்தை அளிக்கிறது. என்னை தொல்லைப்படுத்தும் என் கண்கள் தூங்காமையால் உண்டா நோயைப் பற்றி கவலைப்படாமல் உறங்குகின்றார்கள். ஆனால் நான் மட்டும் தலைவன் நினைவு கொண்ட நோயால் வருந்திகொண்டேயிருக்கின்றேன். இந்நிலையில் என் துன்பத்தை எப்படி விரட்டுவது. எதன்மீது முட்டிக்கொள்வேனோ? இல்லை தூங்கும் மக்களின் மீது மோதிக் கொள்ளுவேனோ? ஒன்றும் புரியவில்லையே! என்று தலைவி தன் மனசுக்குள் தவிக்கும் நிலை தலைவியின் மன அழுத்ததை அறியமுடிகிறது.

**தலைவியின் வேதனை நிலை**

கார்காலத்தில் மயில் கூவுவது தலைவிக்கு வருத்தத்தை ஏற்படுத்துகிறது. அதனை,

**"பூஞ்சினை யிருந்த போடிகண் மஞ்ஞை**
**தாநீர் தனந்தலை புலம்பக்**
**கூவந் தோழி பெரும்பே தையவே"** (குறுந்தொகை 391)

என்ற அடிகளில் தலைவி காதல் உணர்வுகளை வெளிக்காட்டாமல் வேதனையுறும் உளக்குறிப்பையும் அறியமுடிகிறது.

**முடிவுரை**

குறுந்தொகையில் தலைவியின் மன இறுக்கத்தாலும், உள்ளம் போராட்டத்தாலும் உள்ள வாழ்வு நிலைகளில் சினம், கவலை, அச்சம், மன அழுத்தம், உணர்ச்சி, வெளிப்பாடு மனமுடைந்து பெரும் பாதிப்புக்கு உள்ளதை உளவியலில் மனமுறிவு என்பதோடு பொருந்தி காண முடிகிறது.

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் நெறிமுறைகள்

***மு.சசிகலா,** முனைவர் பட்டஆய்வாளர், தமிழத்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு.

**முன்னுரை**

தமிழ் இனம்தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது. முனித நாகரீகத்தின் தொட்டில் எனக் கூறக் காரணம் நம் தமிழ் இனத்தின் வாழ்வியல் நம் தமிழ் இனத்தின் சிந்தனைகள் மேம்பட்டு இருந்தது என்றால் அது மிகையாகா. இதற்கான சான்றுகள் ஒன்றா, இரண்டா தோண்ட தோண்ட வரும் ஊற்றுப்போல கிடைக்கின்ற அரிய சான்றுகள் பல. இச்சான்றுகள் வாய்மொழி கூற்றாக அமையாமல் ஓவியமாக மிளிர்கின்றன.

**தமிழர்களின் வாழ்வியல் நெறிமுறைகள்**

ஒரு மனிதன் எப்படியெல்லாம் வாழவேண்டும்? எப்படிவாழக்கூடாது? என்பதை நமது இலக்கியம் என்ற நெடுஞ்சாலை மூலம் வழிகாட்டியுள்ளனர் என்ற நிகழ்கால, எதிர்கால சமுதாயத்திற்கு கூறும் விளக்கமாகும்.

**அறம், பொருள், இன்பம்**

வாழ்க்கை என்பது அறம், பொருள், இன்பம் என்ற மூன்று கருவூங்களைக் கொண்டது. இவை மனித வாழ்வின் சிந்தனையின் அடித்தளம் எனலாம். அறம் என்பது சமுதாயம் கோட்பாடு, பொருள் என்பது இன்பத்தை துய்ப்பதற்குரிய சாதனம். அற நெறிப்படி ஈட்டாத பொருள் உண்மையான மனநிறைவையும் கொடாது. அறநெறிக்கு புறம்பாக ஈட்டிய பொருள் தொடக்கத்தில் இன்பத்தினை பயப்பதாக தோன்றினாலும் இறுதியில் துன்பத்தையே தரும் என்ற கருத்தினை

**சிறப்புடை மரபில் பொருளும் இன்பமும்**
**அறத்து வழிப்படும்உம் தோற்றம் போல**
**இருகுடை பின்ப்பட ஓங்கிய ஒருகுடை**
**உருகெழு மதியின் நிவந்து சேண்விளங்க (கோவூர் கிழார் புறம் 31)**

என்ற தொடங்கும் பாடல் வழி அறிகிறோம்.

**அன்பே சிவம்**

வாழ்க்கையானது இன்பம், துன்பம் கலவை எனலாம். ஒருதுன்பத்தை மற்றொரு துன்பத்தால் போக்கமுடியாது. ஆனால் அன்பே சிவம் என்ற வார்த்தைகளினால் போக்கிட முடியும் என்றார் திருமூலர். மனித இனம் துன்பத்தை போக்க பல மார்க்கங்களை தேடி ஓடிக் கொண்டே இருக்கின்றார். கடுமையான தவம் செய்து உடலை வருத்துவதைவிட அன்போடு இயைந்த வாழ்வினால் பெற்றுவிடலாம் என்றார் திருமூலர்.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே (திருமந்திரம்)**

ஆண் பெண் இருவருக்கும் பல கடமைகள் உண்டு. புறநானூறு திருக்குறளில் சான்றுகள் பல உள்ளது. அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்ற அதிகாரங்களை வகுத்து இரண்டடியில் மனித வாழ்வியல் நெறிமுறைகளை அடக்கிய பெருமை திருவள்ளுவரையே சாரும் எனலாம். மனிதனின் நாடு, மொழி, மதம், சமுதாயம், பண்பாடு என்ற மாறுபட்ட கூறுகளை ஒருங்கிணைக்கிறது திருக்குறள் என்ற அற இலக்கியம்.

**மக்களை பெறுதல் தாயின் கடனே,**

**பெற்றமகனை சான்றோனாக்குதல் தந்தையின் கடனே,**
**நாட்டு மக்களை நல்லமுறையில் திருத்துவது அரசின் கடனே,**
**ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்கு கடனே (பொன்முடியார் புறம் 312)**

என்ற பாடல் மூலமாக தாய், தந்தை, அரசனின் கடமைகளை அழகாக கூறியுள்ளார்.

**தமிழ் இனம் உறவுகளை மேன்மைப்படுத்துதல்**

**“யாதும் ஊரேயாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தரவாரா”**

என்றகணியன் பூங்குன்றனார் பாடல் கூறுவதுதமிழினம் இனம் உறவுகளுக்குகொடுக்கும் முக்கியத்துவத்தின் வெளிப்பாடு ஆகும். நாங்கள் சிறுசிறு தீவுகள் அல்ல ஒரேசமுத்திரம் என்பது போல் உள்ளது.

**விருந்தோம்பலின் சிறப்பு**

விருந்தோம்பல் என்ற பண்பு தமிழர் வாழ்வியல் நெறிமுறைக்கு மற்றொரு மகுடம் எனலாம். சங்க இலக்கியங்கள் இதனை அருமையாக படம் பிடிக்கின்றன. நெடுந்தூரம் பயணம் செய்யும் மக்களின் பசி போக்க தோன்றியதுதான் சாவடி, சத்திரங்கள் கண்ணகியை மதுரை புறஞ்சேரியையும், பிற ஆயர் பெண்களும் தனி இல்லத்தில் தங்கவைத்துப் போற்றியமையை சிலப்பதிகாரத்தில் காணலாம்.

அரசன் என்பவன் எப்படி ஆளவேண்டும் அவனது கடமை பொறுப்புகளை போர் ஞானம் அறவாழ்வு போன்ற பண்புகளை எடுத்தியம்புகிறது சங்ககாலச் சான்றுகள். அதன் தொடர்ச்சிதான் இன்றைய குடியாட்சிக்கு அடித்தளமாகும்.

**நம்பிக்கைகள்**

தமிழ் இனம் பாவம் புண்ணியம் நன்மை தீமை இன்மை மறுமை சொர்க்கம் நரகம் என்பதில் நம்பிக்கை கொண்டு இருந்தனர். இவை அனைத்தும் நடப்பது நமது ஊழ்வினை பயனே எனநம்பினர். இதை சங்க இலக்கியங்கள் சிலம்பு, மணிமேகலை போன்ற காப்பியங்கள் எடுத்துக்கூறி அரசன் முதல் ஆண்டி வரை நல்வழிப்படுத்தினர்.

**தமிழ் இனம் சிகரம் தொடக்காரணங்கள்**

1. அமிர்தம் கிடைத்தாலும் தனியே உண்ணாமை
2. விரோத மனப்பான்மை இன்மை
3. தேனீயை போன்ற உழைப்பு
4. பழிஎனின் உலகம் முழுவதும் கிடைத்தாலும் பெற்றுக்கொள்ளாமை.
5. தன்னிலை இழக்காமல் இருத்தல்
6. அஞ்சுவது அஞ்சி புகழுக்காக உயிரைக்கொடுப்பது.
7. தமக்கு எது முயலாது பிறர்க்கு என முயலும் பெற்றிமை

**உண்டால் சமம் இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவதுஆயினும் முனிவு இயலர்**
**துஞ்சலும் இலர். பிறர் அஞ்சுவதுஅஞ்சிப்**
**புகழ் எனின் உயிரும் கொடுக்கம் அயர்விலா**
**தமக்கெனமுயலாநோன்தாள்**
**பிறர்க்குஎனமுயலுநர் உண்மையானே**

**-கடலூன் மாந்த இளம் பெருவழுதிபுறம் 182**

**ஈகைக்கோட்பாடு**

இல்லாதாரை வாட்டும் துன்பத்தை தவிர்த்து துன்பத்தை தணிக்கவும் வற்புறுத்தப்பட்ட பிறிதொரு கோட்பாடு ஈகை எனலாம் .புறநானூறு தொகுப்பில் இதற்கான சான்றுகள் பல உள்ளன. அருள் உள்ளம் உடையவர்களை வள்ளல் என்று அழைத்தனர். தமிழ் பொருளை அடிப்படையாக வைத்து கட்டப்பட்டது ஆகும். ஈகையை கூறும் பொழுது அன்பு எங்கு வந்தது என்ற கேள்வி எனலாம்.

**அன்பின் வெளிப்படுதலின் ஈகை**

பாரிவள்ளல் தன் ஆட்சியின் கீழ் இருந்த 300 ஊர்களையும் தன்னை நாடிவந்த பாணர்க்கும், புலவர்க்கும், கலைஞர்க்கும் வழங்குதல் கொடியற்று தவித்த முல்லைக் கொடிக்கு தன் தேரை வழங்குதல்.

- புறம் 110, 200, 301 மேற்கண்ட சான்றுகள் ஈகை பண்பாட்டை பறைச் சாற்றுகின்றன.

**நிலையாமை**

உலகில் எத்தனையோ உயிர்கள் பிறக்கின்றன. வாழ்கின்றது, மடிகின்றது, இதை கண்ட மனிதன் சிந்திக்கத் தொடங்கினான். அண்டன் என்பது என்ன? எப்பொழுது, எப்படி தோன்றியது? இந்த தேடலின் விளைவுதான் நிலையாமை என்பது. இதில் ஓர் உயிர் முதல் மனித இனம் வரை தப்புதில்லை என்பதை கண்டுகொண்டான். இந்த உண்மையை உணராதவன் கல்லாதவன் ஆவான். உணராதவன் கற்றகல்வி உண்மைக்கல்வி அன்று. அது வயிற்றுப்பிழைப்பின் பொருட்டு கற்றுக்கொண்ட கல்வி ஆகும்.

கற்றவன் மட்டுமே இறைவனை காணமுடியும் என்ற கருத்தினை திருமந்திரம் உணர்த்துகிறது.

**நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து**
**நில்லை குரம்பை நிலைஎன்று உணர்வீர்கள்**
**எல்லாவுயிர்க்கும் இறைவனேயாயினும்**
**கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண்ணாதே** -திருமந்திரம் 312

**முடிவுரை**

இத்தகைய பல பெருமைகளை தமிழ் சமூகம் இன்று வாழ்வியல் சிந்தனைகளை வாழ்ந்து கொண்டு இருக்கிறதோ சிந்தனைகளுடன் வாழ்ந்து கொண்டு இருக்கிறதா என்றால் பதில் போதுமானதாக இல்லை. என்பதே அறவழியில் பொருளை தேடுவதால் இன்பத்தை இழந்து துன்பத்துடன் வாழ்கிறோம்.

தன் பெண்டுதன் குடும்பம் என்ற சுயநலச் சிந்தனைநான், நீ என்ற முரண்பாடுகளுடன் வாழ்கின்றோம். ஆண்களும் பெண்களும் தங்கள் கடமை பொறுப்புகளை மறந்து முறையற்ற வாழ்க்கை வாழ்கின்றனர். விளைவு நாலு சுவற்றுக்குள் தீர்க்கப்பட வேண்டியவை இன்று சமூகஊடகங்கள் கையில் எடுத்துக் கொண்டு மனிதர்களின் உணர்வுகளுடன் விளையாடி தங்களை முன் நிறுத்தி முனைவு காட்டுகின்றன. இது போன்ற இலக்கிய கருத்தரங்கங்கள் தேவை. மறந்துவிட்ட மூலங்களை வெளிக்கொணர இத்தகைய கருத்தரங்கங்கள் மூலம் நமது முன்னோர் வாழ்ந்து காட்டிய வாழ்வியல் நெறிமுறைகளை எவ்வளவு பெருமை வாய்ந்தது என அறந்து கொள்ளமுடிகிறது.

நமது சுயநலத்தை இழந்துவிட்டு இல்லாத மேலைநாட்டு சுயநலத்தை நமதாக்கி கொண்டு ஓடிக்கொண்டு இருக்கின்றோம். ஓடிக்கொண்டிருக்கின்ற மனிதசமுதாயத்தை உனது சுயம் இதுதான் என அடித்துக்கூற இது போன்ற கருத்தரங்கங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை எனக்கூறி எனது கட்டுரையை நிறைவு செய்கிறேன் நன்றி வணக்கம்.

# தமிழ்ப்பண்பாட்டின் சீர்மையும் சிதைவும்

***முனைவர் நா.சத்யா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்.

**முன்னுரை**

உலகத்தின் ஆதிமனிதன் தமிழன் என்று பாவாணர் தம்முடைய ”தமிழர் வரலாறு' நூலில் அறுதியிட்டு எடுத்துரைப்பார். சூரியனிலிந்து வெடித்துச்சிதறிய நெருப்புக்கோளம் பல வருடங்களுக்குப் பின்னர், இயற்கைக் காரணிகளால் குளிர்ந்து, உயிர்கள் வாழ்வதற்கான சூழல் உருவாகி, ஒருசெல் உயிரியிலிருந்து பல செல் உயிரியாய் பெருக்கம் அடைந்து, பரிணாம வளர்ச்சியினால் மனிதன் தோற்றம் பெறுகிறான். இவ்வாறு மனிதன் உருவான முதல் இடம்' லெமூரியா கண்டம்' (தற்போதைய குமரி) என்பது தொல் ஆய்வாளர்களின் கருத்து. இவ்வாறு தோற்றம் பெற்ற மனிதன் தங்களின் கருத்துக்களைத் தெரிவிக்க முதலில் சைகை மொழியினைப் பயன்படுத்தத் தொடங்கினான். பின் அவை சித்திர எழுத்துக்களாக உருமாற்றம் பெறத்துவங்கின. பின்னர் பல்வேறு மாற்றங்களுக்குப் பின் மொழியாக உருவெடுத்தன. மொழியின் வளர்ச்சி மாந்தர் இனத்திற்கே மறுமலர்ச்சியாக இருந்தது. மாந்தர் இனத்தின் பழக்க வழக்கங்களில் ஒழுங்குமுறைகள் உருவாயின. அந்த ஒழுங்குமுறைகளே வரலாற்றாசிரியர்களால் 'நாகரிகம், பண்பாடு என்று அழைக்கப்பட்டன.

இவ்வாறு தோன்றிய பண்பாடுகளில் மிகச்சிறந்த இடத்தை தமிழகப் பண்பாடு பெற்றுள்ளது எனில் அதுமிகையல்ல. கலப்போக்கில் வடநாட்டினரின் படையெடுப்புகள், ஆரியர்களின் வருகை இவற்றுக்குப்பின் தமிழகப் பண்பாட்டில் அவற்றின் தாக்கங்களை காணமுடிந்தது. சமிப காலமாக, இத்தாக்கங்கள் தமிழர்களின் கட்டமைப்பையே ஆட்டி வைப்பதாக உள்ளது என்பது நோக்கத்தக்கது. இச்சூழலில் தழிழ்ப் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும் என்ற பேரவாவினாலும், பேராதங்கத்தினாலும் எழுதப்பட்டதே இக்கட்டுரையாகும்.

**பண்பாட்டு விளக்கம்**

பண்பாடு என்ற சொல் அண்மைக்காலத்தது. இதனை முதன்முதலில் இரசிகமணி டி.கெ.சி அவர்கள் பயன்படுத்திகின்றார். ஆனால், பண்பாடு என்ற கருத்துரு தமிழர்களிடம் மிகப்பழமையானது. பண்படுதலே பண்பாட்டிற்கு அடிப்படை. தமிழர்தம் வாழ்வியல் பழக்கவழக்கங்கள் அனைத்தும் பண்படுத்துதல் என்பதையே அடிப்படைக்கூறாகக் கொண்டிருந்தன. பண்பட்டு நிலைத்து வளர்ந்த சூழலை நாம் “பண்பாடு” என்று குறிப்பிடலாம். தமிழர் பண்பாடு என்று தமிழன் மார்தட்டிக் கொள்வதற்கு ஏதுவாக அவன் பண்பாட்டின் உச்சத்திலிருந்தான் எனலாம். அதற்கு மிகச்சிறந்த சான்றாக “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற இந்தவரிக்கு நிகராக மிக உயர்ந்த பொருளை எவராலும் கூறிவிட முடியாது. இதனாலேயே உலகப் பெருங்கவிஞனாக கணியன் புங்குன்றன் அறியப்படுகின்றான்.

**தொன்மைப் பண்பாடு**

தமிழகத்தில் நடைபெற்று வரும் அகழ்வாய்வுகள், அவற்றின் தொன்மையையும் ,சிறப்பையும் உலகிற்கு உணர்த்தி நிற்கின்றது. கீழடியில் நடைபெற்று வரும் ஆய்வுகள் தமிழின் தமிழனின் தொன்மையைச் சுட்டுவனவாக அமைவது வட மாநிலத்தவருக்கும், அதிகார அமைப்பினருக்கும் பயத்தை ஊட்டுவதாகவும் அமைகிறது எனலாம். கீழடி உள்ளிட்ட இடங்களில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வுகளில் கண்டறியப்பட்ட நகரியக் கட்டமைப்புகள், கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் இவையாவும் தமிழ்ப்பண்பாட்டுத் தொன்மையின் மீது புதிய வெளிச்சத்தை வழங்கியுள்ளது. அரிக்கமேடு, கொடுமணல் உள்ளிட்ட இடங்களின் அகழ்வாய்வுகளும் இதற்கு வலிமை சேர்க்கும் தன்மையானவை என்பதை அறிவுலகம் நன்கு உணர்ந்திருக்கிறது.

**பழமையும் பெருமையும்**

அக்காலத்தில் தமிழர்கள் திரைகடல் ஓடி திரவியம் தேடினர். யவனர்களை வரவேற்றனர். யவனர்களிடம் பொருள்களைப் பெற்றனர். வெற்றி கொண்ட நாடுகளில் பிடிபட்டவர்களைத் தம் நாட்டில் கொண்டு வந்து அரண்மனையில் காவல் பணி, கோயில், கட்டிடங்கள் கட்டுதல் முதலிய பணிகளுக்குப் பயன்படுத்திக் கொண்டனர். முல்லை பாட்டில் மிலேச்சர்கள் யவனர்கள பற்றியக் குறிப்புகள் காணப்படுகின்றன. மேலும் புறநானூற்றில்

**"மீப்பாய் களையாது மிசைப்பாநீ தோண்டாது**
**புகாஅர்ப் புகுந்த பெருங்கலந் தகாஅர்**
**இடைபுலப் பெருவழிச் சொரியும்**
**கடல்பல் தாரத்த நாடுகிழ வோயோ"** (புறம்-30:12-16)

என்ற வரிகளில் கடல் வணிகத்தில் தமிழ் மன்னர்கள் சிறந்து விளங்கியதைக் குறிப்பிடுகின்றது. .

தமிழ் மன்னர்கள் கடற்போரிலும் சிறப்புற்று விளங்கினர் என்பதை

**"வயிரு முந்நீர் நாவாய் ஓட்டி**
**வளிதொழில் ஆண்ட உரவோன் மருக"** (புறம்-66:1,2)

என்ற வரிகளில் உறுதிப்படுத்துகின்றனர். இவ்வாறு நம்முடைய மன்னர்கள் கடற்போரிலும் கூட சிறந்து விளங்கி உயர்ந்த நிலையில் வாழ்ந்தமையை அறிய முடிகிறது.

**நுகர்வுக்காலாச்சாரம்**

இன்று அயலகப் பொருட்கள் இந்திய சந்தையினைக் குறிவைத்து இயங்கி வருகின்றன. ஊடகங்களின் பகட்டு விளம்பரங்கள், நடிகர்களின் விளம்பர உத்திகள், விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட பிரபலங்களின் பங்கேற்பு என பல்வேறு காரணிகள், அரசுகளின் தாராளமயக் கொள்கைகள் இவையாவும் இணைந்து இந்தியச் சந்தையினை பன்னாட்டு வியாபாரிகளின் கைப்பிடிக்குள் ஒப்படைத்தன. இதன் விளைவாக வந்திறங்கிய பொருட்கள், தமிழர்களின் பண்பாட்டில் பழமையில், சிறப்பில், பொதுவெளி நாகரிகத்தில், குடும்ப உறவு முறைகளில், கல்விகூட பழக்கவழங்கங்களில், கேளிக்கைக கொண்டாட்டங்களில், பண்டிகைகால விழாக்களில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திவிட்டன. இயற்கையும் நீடித்த வளர்ச்சியும் நிலையான இருப்பும் என்று இருந்த தமிழ்ப்பண்பாட்டு நுகர்வுத்தன்மை இன்று பண்படுத்திவிட்ட தூக்கி எறிதல்(Use and throw) என்ற நுகர்வுக்கலாச்சாரத்தினை ஏற்படுத்திவிட்டது. இது பொருட்களின் பயன்பாடு என்பதைத் தாண்டி உறவுமுறைகளிலும் எதிரொலிக்கின்றது.

**வணிக நோக்குடை நுகர்வுக்காலாச்சாரத்தின் விளைவுகள்.**

வணிக நோக்குடைய விளம்பரங்களால் ஏற்பட்டுள்ள நுகர்வுக்கலாச்சாரத்தின் விளைவாக… தமிழர்தம் மனநிலையிலும் வாழ்வியல் முறைகளிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனைப் பட்டியலிட்டால்,

I. வெள்ளை நிறமே உயர்ந்த நிறம் என்னும் உளவியல்,
II. எதிர்ப்பாலின ஈர்ப்புக்கான நுகர்வுப் பொருட்கள் பயன்பாடு
III. வேணுன்னா வேணுந்தான்" என்று குழந்தைகளின் பிடிவாதப்பண்பு வளர்ச்சி
IV. இறக்குமதி மற்றும் வெளிநாட்டு உற்பத்தியே தரமானது என்னும் நம்பிக்கை
V. ஆங்கில மோகம்
VI. தாய்மொழி கல்வியின்னை
VII. உறவுமுறைகளில் ஏற்படும் பிறழ்வுகள்
VIII. அலோபதி மருத்துவ முறைகளின் ஆதிக்கம்… இயற்கை வழி மருத்துவமுறைகளின் அழிவு
IX. மரபுசார் கலைகளின் அழிவு
X. விளையாட்டு உள்ளிட்டவைகளின் அழிவு
XI. உணவு முறைகளின் மாற்றம்
XII. இயற்கை வழி வேளாண்மை அழிவு
XIII. பொழுதுபோக்கில் சமூக அக்கறை இன்மை
XIV. உடல்நலனின் ஏற்பட்டும் பின்னடைவுகள்

என்று அடுக்கிக்கொண்டே போகலம். இந்தப் பட்டியலின் நீலம் தொடரும். ஒரு பண்பாட்டோடு இன்னொரு பண்பாடு இணைகின்ற போது அதனால் சில நன்மைகளும் இருக்கும். ஆனால், அதன் விழுக்காடு என்ன என்பதைக் கொண்டே அதனை வரவேற்பதும் புறக்கணிப்பதும்

தணிக்கைக்குட்படுத்தி ஏற்றுக்கொள்வதும் இருந்திடல் வேண்டும். இவ்வாறு நோக்கின் தமிழ்ச்சமூகம் பெற்றுக்கொண்டதை விடவும் இழந்தவை அதிகம் என்பதை நாம் கொண்ட பட்டியல் வெளிப்படுத்தும்.

இவற்றால் தமிழினம் தன் பழம்பெருமையினை சிறப்புகளை இழந்து அழிந்து சிதைவுறும் நிலை தொடர்கிறது. எனவே, தமிழ்ப்பண்பாட்டினை மீட்டுருவாக்கம் செய்திட வேண்டிய தேவை இன்று ஏற்படுகின்றது.

**பாலியல் பிறழ்வுகள்**

ஒரு சமூகத்தின் ஒழுக்கங்களில் ஒன்று அதன் பாலியல் பண்பாடு. தமிழர்களிடம் பரத்தமை என்னும் கூறு சங்க காலத்தில் இருந்திருப்பினும் அவை ஒழுங்குபடுத்தப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட, தடைசெய்யப்பட்ட, கண்டிக்கப்பட்ட நிலையில் இருந்ததை சங்க இலக்கியங்களும் பிற்கால நீதி நூல்களும் எடுத்துரைக்கக் காணலாம். ஆனால், நிகழ்காலத்தில் ஏற்பட்ட நுகர்வுக்காலாச்சாரததில் இப்பாலியல் பண்பாடு என்பது சமூகத்தின் சீரழிவுத்தன்மையினையே முன்னிலைப்படுத்துகிறது. இதனால் உறவு முறையும் சமூகப் பொது ஒழுக்கங்களும் சிதைந்து வருகின்றன.

நம் முன்னோர்கள் ஆண்கள் காலில் மெட்டி அணிவர். ஏன் எனில் பெண்கள் தலைகுணிந்து நடக்கும் போது, ஆணின் பாதம் கண்களில் படும். அதில் உள்ள மெட்டியைக் கண்ட மகளிர் இவன் தனக்கு உரியவன் அல்லன் என்று விலகுவராம். அதுபோலத் தான் தாலியும் பெண்களின் அடையாளச் சின்னமாக விளங்கிவருகின்றது. அதனைப் பிற மகளிரின் கழுத்தில் கண்ட ஆண்கள் இவள் தன்னுடையவள் அல்லள் என்று விலகவேண்டுமாம்.

ஆனால், இன்றோ நம் நாட்டில் ஏற்பட்டுள்ள பண்பாட்டு மாற்றத்தை நோக்குகையில் கவலை ஏற்படுகின்றது. எங்கு காணினும் கொலை, கொள்ளை, பாலியல் தொந்தரவுகள் உள்ளிட்டச் செய்திகள் வந்து நெஞ்சை உலுக்குவதாக அமைகின்றது.

டெல்லி மருத்துவ மாணவியின் வழக்கு முடியும் போது கேரள நடிகையின் ஓலக்குரல், அது ஓய்வதற்குள் பள்ளி மாணவியை ஆறுமாதங்களாக மிருங்கள் பயன்படுத்தியச் செய்தி. வழிகாட்ட வேண்டியவர்களே திசைமாற்றும் அவலம் என அவதியுடன் நிற்கிறோம் நாம்.

ஆழ்ந்து நோக்கும் போது இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் புதுமை என்ற பெயரில் வரும் அனைத்தையும் ஏற்றுக் கொண்டதேயாகும். இந்நிலை தொடர்ந்தபடி இருந்தால் மேலை நாட்டினர் போல இருவர் இணைந்திருத்தல் என்பது சாத்தியம் இல்லாத ஒன்றாகிவிடும். குழந்தைகள் குடும்பம் என்ற உணர்வின்றி இருப்பர். 'சுயக் கட்டுப்பாடு' என்ற உணர்வே இருக்காது. கண்டதே காட்சி கொண்டதே கோளம் என்று வாழ்வர். மகிழ்வான விழாக்களோ, அன்பான உறவுகளோ இல்லாமல் போய்விடும்.

**வணிகப் பண்பாடு**

நம்முடைய முன்னோர்கள் வணிகத்தில் சிறந்து இருந்தனர். வணிகத்தில் இலபாம் என்பதே வெற்றி என்பது மேலாண்மை. ஆனால், இந்த வெற்றி என்பது நுகர்வோரின் நலனை அழித்து அவரது சேமிப்பை சுரண்டுவது என்பாதாக இருத்தல் கூடாது. இந்த உயர்பண்பாட்டினைத் தமிழர்தம் வணிகப் பண்பாடு கொண்டிருந்தது. நுகர்வோன் நலனும் நியாயமான லாபமும் என்பதாக சங்கப்பண்பாடு இருந்தது. பூமியில் விளையும் அனைத்தும் விளைபொருட்கள் அல்ல... அவை மருந்தாகவும் உணவாகவும் உரமாகவும் அமையும் பொருட்கள் வணிக அறத்திற்கு உட்பட்டு விற்கப்பட்டன. அனால், கொள்ளை இலாபம் என்னும் வணிகநோக்காடு உள்ளே வந்த ஆங்கிலேயன் நம் இல்லங்களையும் உள்ளங்களையும் சிறைபிடித்து வைத்துள்ளன. நம் முன்னோரின் பெருமைகளைப் பேசுவதோடு நின்றுவிடாமல் அதனைச் செயல்படுத்தும் விதமாக உள்நாட்டுத் தயாரிப்புகளை வாங்கி நாம் பயன்படுத் வேண்டும்.

**நிறைவாக**

தமிழர்தம் பண்பாட்டுப் பெருமைகள் சிறப்புமிக்கவை. ஒரு இனத்தின் பரிணாம வளர்ச்சியில் பிற்போக்குக் கூறுகள் இருத்தல் என்பது தவிர்க்க முடியாது. இவை அடுத்தடுத்தக் கால வளர்ச்சியில் புறக்கணிக்கப்பட்டு அழிந்துவிடும். அந்த இடத்தினை வேறு ஒரு முற்போக்குக் கூறு இட்டுநிரப்பம். தமிழர்களின் பண்பாட்டில் இவை தலைகீழாக நடைபெறுகின்றன. நமது உயரியப் பண்புகள் சிதைக்கப்பட்டு மேலைநாட்டு கழிவுகள் நம்மீது திணிக்கப்படுகின்றன. அழுக்கை அழகு என இரசிக்கும் நம் நுகர்வுகலாச்சாரம் நீக்கப்பட்டு இயற்கையோடு இயைந்து வாழ்ந்த நம் பண்டைப்பண்பாடு காக்கப்பட வேண்டும். மீட்கப்பட வேண்டும் என்பதையே இக்கட்டுரை சுட்டிக்காட்டுகின்றது.

# வள்ளித் தொன்மம்
# (பாரதியார் உணர்த்தும் கருத்தியல்)

***மா.சுப்பலட்சுமி,** பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வு மாணவர், பெரியார் அரசு கலைக்கல்லூரி, கடலூர்.

**முன்னுரை**

தமிழ் இலக்கியத்தை நவீனபடுத்திய முன்னோடிகளுள் ஒருவர் பாரதியார். காப்பியம் என்னும் நெடுங்கவிதை முதல் வசன கவிதை ஈறாகத் தமிழின் பல்வேறு இலக்கிய வகைமைகளை அவர்தம் படைப்பாக்கத்தில் முயற்சித்துள்ளார். படைப்புகளில் தொன்மங்களைக் கையாண்டு அதன் வழி ஓர் உட்கருத்தியலைப் பொதித்து வைக்கும் முறைமையை அவர் வெற்றிகரமாகக் கையாண்டுள்ளார். அவ்வகையில் பாரதியாரின் பாடல்களில் தொன்மம் பயின்றுவரும் நிலையினையும், அத்தொன்மத்தின் மூலம் பாரதியார் கூறவரும் கருத்தையும் இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

**வள்ளித் தொன்மம்**

பாரதியார் கொண்டுள்ள தொன்மங்களில் இவ்வாய்வானது இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**பகுதி அ** : பாரதி பாடல்களில் வள்ளித் தரவுகள்

**பகுதி ஆ** : வள்ளித் தொன்மம் வாயிலாக பாரதி முன்வைக்கும் கருத்தியல்.

**பகுதி அ : பாரதி பாடல்களில் வள்ளித் தரவுகள்**

ஒரு கவிஞன் தன் அனுபவத்தைத் திறம்பட வெளிப்படுத்த தொன்மங்கள் துணை செய்கின்றன. ஆழ்மனத்தின் கனவுகள் தான் தொன்மங்கள். அத்தொன்மங்கள் தான் கவிதைகளாக உருபெறுகின்றன. தொன்மத்தினைத் தொட்டு செல்லாத கவிஞர்களே இல்லை. அவ்வகையில் பாரதியார் பாடல்களில் வள்ளித்தொன்மம் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை இப்பகுதி ஆராய முற்படுகின்றது.

**தொன்மம் : நார்த்ராப் ஃபிரையின் கருத்து**

தொன்மம் என்பது கடவுள்களையோ, கடவுளைப் போன்ற மனிதர்களையோ கதை மாந்தர்களாகக் கொண்ட ஒரு கதை.

தொன்மத்திலுள்ள தொல்படிவங்கள் ஒரு கவிதையை மற்றொரு கவிதையோடு இணைக்கும் குறியீடுகள். இக்குறியீடுகள் இலக்கிய உலகை ஒரு முனைப்படுத்த உதவும்.

“மொழியும் தொன்மமும் ஒரே மரத்தின் இரண்டு கிளைகள்”. கவிதை உலகமும் தொன்ம உலகமும் ஒரே உலகம் போல் தோன்றுவதற்கு காரணம், இரண்டுமே சுற்றியிருக்கும் எந்தவொரு பொருளுக்கும் உயிரும், மனித உறவும் கொடுக்கக் கூடிய ஆற்றல் பெற்றிருப்பதுதான்.

**(எடுத்தாளப்பட்டது. க.பஞ்சாங்கம் : 2014 :ப.134)**

**பாரதியாரின் தமிழ்த் தொன்மங்கள்**

பாரதியார் தன் கவிதைகளில் எண்ணற்ற தொன்மங்களைப் பயன்படுத்தியுள்ளார். அவற்றில் குறிப்பிடத்தகவை பாஞ்சாலி, கண்ணன், உஷை, தீ, அர்சுணன், இராவணன், சக்தி, என்பன போன்றவை. இவை மட்டும் இன்றி தமிழ்த் தொன்மங்களான நந்தன், வள்ளி, காளி, முருகன், மாரியம்மா, லட்சுமி போன்ற தொன்மங்களையும் அவர் தொட்டுச்செல்ல மறக்கவில்லை என்பது நாம் அறியவேண்டிய ஒன்று.

**பாரதியார் தரும் வள்ளித் தரவுகள்**

பாரதியார் பிறப்பிலே எந்நேரமும் தொன்மங்களைப் பேச்சோடும், வாழ்வோடும் பயன்படுத்தி வாழ்ந்த வைதிகக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததினால் பல தொன்மங்கள் இயற்கையாகவே அவரது படைப்புகளில் வெளிப்படுகின்றன. அவ்வகையில் தமிழ்க்

கடவுளாகப் போற்றப்படும் முருகன் - வள்ளித் தொன்மமும் பாரதியால் எடுத்தாளப்பெற்ற தொன்மங்களாக உருகொள்கின்றன.

பாரதியாரின் பாடல்களில் வள்ளியைப் பற்றிய செய்திகள் பெரும்பான்மையும் முருகனைப் பற்றி வரும் இடங்களிலே இடம் பெற்றுள்ளது எனலாம். “தனிப்பாடல்கள்” தொகுப்பில் “வள்ளிப்பாட்டு” என்னும் தலைப்பில் வள்ளி பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ள.

**“வேடர் கனியை விரும்பியே – தவ**
**வேடம் புனைந்து திரிகுவான்**
**(பாரதி – முருகன்பாட்டு : பாடல் : 2)**

எனும்போது வள்ளியை அடையவே முருகன் வேடம் பூண்டுள்ளார் என்கிறார். இங்கு முருகன் வள்ளிக்குமான களவு வாழ்க்கையானது வெளிப்படுகின்றது.

**“சொல்லினைத் தேனில் குழைத்துரைப்பாள் சிறு**
**வள்ளியைக் - கண்டு**
**சொக்கி மரமென நின்றனை தென்மலைக்**
**காட்டிலே …………”**
**“வள்ளியை – ஒரு**
**பார்ப்பன் கோலம் தரித்துக் கரம் தொட்ட**
**வேலவா!” பாரதி : (வேலன்பாட்டு :பா:15.1)**

என்ற அடிகளை நோக்கும் போது முருகன் - வள்ளியின் காதலை நன்கு உணர முடிகிறது.

**“துள்ளிக் குலாவித் திரியும் சிறுவன**
**மனைப் போல் - திணைத்**
**தோட்டத்திலே ஒரு பெண்ணை மனம் கொண்ட**
**வேலவா!” (பாரதி : வேலன்பாட்டு:பா:15:2)**

என்னும் அடிகள் முருகன் வள்ளிக்கிடையே நிகழ்கின்ற இயற்கைப் புணர்ச்சியை நமக்கு வெளிப்படுத்துகின்றன. களவு வாழ்க்கையில் வள்ளியைக் முருகன் காதல் கொண்டுள்ளமையை பாரதியார் இங்கு சுட்டுகின்றார்.

**“எந்த நேரமும் நின் மையல் ஏறுதடீ,**
**குறவள்ளி, சிறு கள்ளி” (வள்ளிப்பாட்டு) (பாரதி : பல்லவி)**

எனும்போது முருகன் காதலின் கடவுளாகவே பார்க்கப்பட்டான் என்பதை நம்மால் உணரமுடிகின்றது.

“குறவள்ளி” என்னும் போது குறிஞ்சி நிலத்தின் அகவாழ்வு வெளிப்படும் விதத்தினை நாம் அறியலாம். குறிஞ்சி நில மக்களின் அகவாழ்வு எவ்வாறு இருந்தது என்பதை பாரதியின் பாடல்கள் நமக்கு மீட்டுத்தருகின்றன.

**பகுதி-ஆ வள்ளித் தொன்மம் : பாரதி உணர்த்தும் கருத்தியல்**

“பாரத சமுதாயம் வாழ்கவே” என்று பாரத நாட்டின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவரான பாரதியார், தமிழ்ச் சமூகத்தின் மீதும், தமிழ்க் கடவுள்களின் மீதும் ஈடுபாடு கொண்டவராகவே இருந்தார் என்பதினை,

**“வேதம் நிறைந்த தமிழ்நாடு – உயர்**
**வீரம் செறிந்த தமிழ்நாடு – நல்ல**
**காதல் புரியும் அரம்பையர் போல்**
**கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு (பாரதி : செந்தமிழ்நாடு : பா:2)**

என்ற பாடலின் மூலம் நாம் அறியலாம்.

முருகக் கடவுள் இந்திரன் மகள் தெய்வயானையை மணம் கொண்ட செய்தியைப் பாரதியார் நன்கு அறிந்திருந்தார். ஆயினும் முருகன் தொன்மதத்தினூடாக வள்ளியை மட்டுமே இணைத்துக் காணுகிறார். இதற்கு வலுவானதொரு காரணம் இருக்க வேண்டும்.

பாரதியார் நம் தமிழர்களின் வாழ்க்கை முறையினை நன்குஅறிந்திருக்கிறார் என்பதினை அவரது பாடல் நமக்கு வெளிப்படுத்துகின்றன. அவர் பண்டைத் தமிழர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையினை இரண்டு நிலைகளில் மீட்டெடுக்க முயல்கின்றார்.

நம் முன்னோர்கள் வாழ்ந்த அகவாழ்வு, புறவாழ்வு இரண்டினையும் தம் படைப்புகள் மூலமாக மீட்டெடுக்க முயலுகின்றார். அவற்றில் கவிதைகளில் வள்ளியின் மூலம் களவு வாழ்க்கையினை (காதல் வாழ்க்கையினை) மீட்டெடுக்க முனைந்துள்ளார் என்று எண்ணத் தோன்றுகின்றது.

**“களவு அலராயினும் காமம் மெய்ப்படுப்பினும்**
**அளவுமிக் தோன்றினும் தலைப்பெய்து காணினும்**
**கட்டினுறு கழங்கினும் வெறியென இருவரும்**
**ஒட்டிய திறத்தாற் செய்திக்கண்ணும்”.** (தொல்.நூற் :பொருள் : 113:1-4)

என்னும் நூற்பா வெறியாட்டு நிகழ்ச்சியின் பின்புலத்தினை விளக்குகிறது. பெரும்பான்மையாக முருகனின் வழிபாடு வெறியாடல் நிகழ்ச்சியாகவே அமைந்துள்ளது. முருகன் காதலின் கடவுளாகவே கருதப்பட்டுள்ளான்.

- **முருகன் மகளிரை அணங்கிக் காதல் நோய் தருபவனாகவும்,**
- **காதல் கடவுளாகவும்**
- **முருகனால் வெறியாடல் நடத்தப்பட்டது**

என்பதினையும் நாம் இலக்கியங்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

வள்ளி சங்க இலக்கியத்தில் தனித்தெய்வமாய் எங்கும் பேசப்படவில்லை. முருகனுடன் இணைந்தே தெய்வமாக பேசப்பட்டுள்ளார். முருகன் குறிஞ்சிக் கடவுள் என்பதால் குறிஞ்சி நிலத்தின் வளமைத் தெய்வமான வள்ளி முருகனுடன் இணைத்துப் பேசப்பட்டுள்ளார்.

**முருகு புணர்ந்து இயன்ற வள்ளிப்போல நின்**
**உருவுகள் எறிப்ப நோக்கல் ஆற்றலென** (நற் :82:4:5)

என்பதை நோக்கும் போது முருகன் - வள்ளி களவு காதலராக இருந்தனர் என்பது உணர முடிகின்றது.

**“இன்பம் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக்கூட்டம் காணுங் காலை**
**மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள்**
**துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே”** (தொல்:பொரு:நூற்:1038)

களவு என்பது இன்பம் என்ற பொருளால சிறப்புற்று அறவழி நடப்பது என்றும், அதனைப் பற்றி ஆராயும் இடத்து அது எட்டுவகை மணந்துள் ஒன்று என்பதும் தொல்காப்பியர் விளக்குவதற்கு ஏற்ப, தமிழர்களின் காதல் திருமண வாழ்வு முறையினைப் போற்றிக் கூறவும், தமிழர்களின் மரபு, பண்பாடு என்பவற்றை மீட்டுக் கொணரவும் வள்ளித் தொன்மத்தினை முருகன் வழி அவர் கையாண்டு இருக்கலாம் என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

கலித்தொகையில் “வள்ளிக் கிழங்கீன” என்று கற்பின் அடையாளமாகவும், தூய்மையின் குறியீடாகவும் காட்டப்பட்ட வள்ளி, பாரதியாரால் தமிழ் தேசத்தின் அகவாழ்வு மிட்டுருவமாக, தமிழரின் பண்பாட்டு கலாச்சாரமாக காட்டப்பட்டுள்ளார் என்பது புலனாகின்றது.

தெய்வயானையை முதலில் முருகன் மணந்து இருந்தாலும் அதில் களவு வாழ்க்கை இல்லை. முருகனின் வெற்றிக்கு பரிசு கொடுக்கும் முறையிலே இத்திருமணமானது நடந்துள்ளது. ஆனால் வள்ளியின் மணமுறையோ முதலில் களவு வாழ்க்கையில் துவங்கி பின் கற்பு வாழ்க்கையில் முடிகின்றது. இதனை நோக்கும்போது முருகனின் அன்பினை முழுமையாக பெற்றவள் வள்ளி என்பதை, நாம் அறியலாம். அதனால் தான் தமிழர் சமுதாயத்தில் வள்ளி தெய்வமாகப் போற்றப்படுகிறார். அதனை ஆரிய மரபு தடைசெய்யவே, மீட்டெடுக்கும் முயற்சியில் தம் பாடல்களில் வள்ளித்தொன்மத்தினை படைத்துள்ளார் என்பது தெளிவாகிறது.

**வள்ளி – முருகன்**
↓
**களவு வாழ்வு**
↓
**வள்ளி — குறிஞ்சி - திணைப்புனம்**
↓
**இயற்கைப் புணர்ச்சி**
↓
**களிறு தரு புணர்ச்சி**
↓
**புனத்தில் சந்திப்பு**
**(இடந் தலைப்பாட்டு)**
↓
**நம்பிராஜனிடம் மகள் வேண்டல்**

**(மகட்கொடை வேண்டல்)**

↓

**திருமணம் கற்பு வாழ்வு**

↓

**வள்ளி கற்பின் குறியீடு**

**முருகன் காதலுக்கான இறை**

மேற்காணும் வரைபட அடிப்படையில் நோக்கும்போது களவு வாழ்வு முறையின் அடிப்படையில் நிகழும் வள்ளி – முருகன் சந்திப்பு பாரதியை வெகுவாகக் கவர்ந்துள்ளது. பாரதி வாழ்ந்த காலத்திற்கு முன்னரே தமிழ்க்களவு வாழ்வியல் முறைகள் புறக்கணிக்கப்பட்டு விட்டது.

புறக்கணிக்கப்பட்ட இழந்துவிட்ட தொல் திராவிட அகவாழ்வியல் முறையை மீட்டெடுக்க அவர் கருதியுள்ளார். எனவே தான் தெய்வயானை என்னும் தொன்மத்தைவிட வள்ளி என்னும் தொன்மத்தை அவர் முருகனுடன் இணைத்துக்கொள்கிறார். பெண் பரிசுப் பொருளா? களவு வாழ்வியல் இல்லாத நேரடியான கற்பு வாழ்வியலை முன்னிறுத்தும் தெய்வயானை என்னும் தொன்மத்தை அவர் கையாளவில்லை.

சாதி, மத வேறுபாடுகளை எதிர்த்தவர் பாரதியார். பண்டைத் திராவிட அகவாழ்வு முறையை மீட்டெடுப்பதன் மூலம் சாதியற்ற ஒரு சமூகம், திருமணத்தில் பெண்ணின் விருப்பத்திற்கு முதன்மை, தரும் நிலை உருவாகிவிட வேண்டுமெனக் களவு கண்டார். அதன் வெளிப்பாடே வள்ளி என்னும் தொன்மமாகப் பாரதியாரிடம் பாடல்களில் வெளிப்படுகிறது எனலாம்.

**முடிவுரை :**

பாஞ்சாலியை எப்படி தேச விடுதலை உணர்விக்காக பாரதி பயன்படுத்தினாரோ, அதைப்போன்று தமிழரின் அகவாழ்வினை மீட்டுகொள்வதற்காக வள்ளியை பயன்படுத்தியுள்ளார் என்பது இங்கு அறிய முடிகிறது. வள்ளி என்கின்ற தொன்மம் தமிழர் இழந்து விட்ட வாழ்க்கை முறையினை மீள உருவாக்கம் செய்வதை நோக்கமாக கொண்டே பாரதியார் வள்ளியை பயன்படுத்தியுள்ளார் என்பது புலனாகின்றது.

**பார்வை நூல்கள் :**


**முதன்மைச் சான்று :**

பத்மதேவன் (மூலமும் உரையும்), 2014, பாரதியார் கவிதைகள்
சென்னை : கற்பகம் புத்தகாலயம்

**துணைமைச் சான்றுகள் :**

1. செல்வராசு. நா
   2011 : பண்டைத் தமிழர் சமய மரபுகள்
   கட்டுரை : தொல் முருக வழிபாடு
   புதுச்சேரி : மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
2. தமிழண்ணல் உரை
   தொல்காப்பியம்
   2003 : பொருளதிகாரம் (தொகுதி -1)
   சென்னை : மணிவாசகர் பதிப்பகம்
3. பஞ்சாங்கம் (பஞ்சு)
   2014 தமிழ் : ஒரு மொழி – ஒரு நிலம் - ஒரு வாழ்வு
   (திறனாய்வுக் கட்டுரைகள்)
   தஞ்சாவூர் : அன்னம் பதிப்பகம்